வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
# SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 திங்கள் மாசி 5-ம் நாள் (17—2—1963) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 21 | இதழ் 38

# வடபகுதியில் சீன அதிகாரிகள் நடமாட்டம்

## கடற்கரைப் பகுதிகளை படம் பிடிக்கின்றனர்

### போர்க் கப்பற் தளம் அமைக்க முன்னேற்பாடா?

சீனத் தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சீன இந்தியப் போருக்குப் பின்னர் இதுவரை 22 தடவைக்கு மேல் வட பகுதிக்குச் சென்றுள்ளார்களென்றும், வட இலங்கைக் கரையோரப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிடுகிறார்களென்றும் சிற்சில இடங்களைப் படம் பிடிக்கிறார்களென்றும் வட பகுதியிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

இலங்கையில் கடற்படைத் தளம் அமைக்க முன்னேற்பாடாகவே கடற்கரைப் பிரதேசம் பற்றிய தகவல்களைச் சீன அதிகாரிகள் திரட்டுகின்றனரென்று ஊகிக்க இடம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் சீனு ஒரு கடற்படைத்தளம் அமைக்க முயற்சி செய்கிறதென்று அண்மையில் பம்பாய் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. இச் செய்தியை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

ஆயினும் சீனத்தூதராலய அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் போது இலங்கை அரசாங்கம் மறுத்தபோதிலும், அந்த மறுப்பை அவதானிகள் ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. எனவே பம்பாய்ப் 'பத்திரிகையின் செய்தியைப் 'பொய்' என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

இந்தியாவின் வட எல்லைக்கு அரண் போன்றது இமய மலை. அதனையும் கடந்து, இந்தியாமீது படையெடுத்து ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளது கொம்யூனிஸ்ட் சீனு.

இந்தியாவின் தென் புறத்தைக் கடல் சூழ்ந்துள்ளது. கடலும் ஓர் இயற்கை அரண் போல அமைந்துள்ளது.

எனவே இந்தியாவின் தென்பகுதியைத் தாக்க வேண்டுமானல் அண்மையில் ஒரு கடற்படைத்தளம் சீனுவுக்கு அமைக்கவேண்டியது அவசியமாகும். அதற்கு தகுதியான இடம் இலங்கையைத் தவிர வேறு எங்கே இருக்கிறது?

இந்தியாவைத் தென் திசையிலிருந்தும் தாக்கும் நோக்கத்துடன் கடற்படைத் தளம் அமைப்பதானல், தென்னகத்துக்கு மிகவும் அண்மையிலுள்ள வட இலங்கைதான் மிகச் சிறந்த இடமாகும்.

சீனத் தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மாறி மாறி 22 தடவைகள் வட பகுதி கடற்கரைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனரென்றும், கடற்கரைப் பகுதிகளைப் படம் பிடித்திருக்கின்றனரென்றும் வட பகுதியிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இலங்கையில் இராணுவப் போர்க்கப்பல் தளமொன்றைச் சீனு நிறுவிக்கொள்ளும் பட்சத்தில் அதனுல் இந்தியாவுக்கு மட்டுமின்றி தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கே ஆபத்து ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

## புதுப்படலம் ஆரம்பம்

சிங்களத் தேர்ச்சியில் சித்தியடையாதவர்களுக்கு சம்பள உயர்வு அளிப்பதில்லையென அரசாங்கம் தீர்மானித்ததல்லவா? இதற்குச் சவாலாக அமையக்கூடிய சில நடவடிக்கைகளை தமிழ் அரசாங்க ஊழியர்கள் எடுத்து வருகின்றனர் என்று தெரிகிறது. இந்த நடவடிக்கைகள் சாதாரணமாக விருந்தபோதிலும், அரசாங்கத்தின் வருமானத்தை நிச்சயமாகப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

1. கொழும்பு நகர எல்லைக்குள் வசிக்கும் ஒரு தமிழ் அரசாங்க ஊழியர் ஏறத்தாழ 10 மைல் தொலைவிலுள்ள தமது காரியாலயத்திற்கு தினசரி பஸ்ஸில் பிரயாணம் செய்வது வழக்கம். இதற்காக மாதம் 20 ரூபாய் இவருக்குச் செலவாகிறது. தனது சம்பள உயர்ச்சி நிறுத்தப் பட்டதும், காரியாலயத்திற்கு அருகில் ஒரு சிறு வீட்டில் குடியிருக்க ஆரம்பித்து விட்டார்; வாழ்க்கையும் சிக்கனமாக நடப்பதுடன், அரசாங்கத்துக்கு பிரயாணச்செலவான ரூ. 20 நட்டம் ஏற்படுகிறது.

2. உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ திரு

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ் பேசும் மக்கள்

## ஒன்று சேரவேண்டுமென்று மலையகத்தில் பிரசாரம்

### தமிழரசுக் கட்சி பிரசுரம்பற்றி 'தினமின' கருத்து

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு எழுச்சிபெற வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையொன்று தமிழரசுக் கட்சியால் மலைநாட்டுத் தோட்டப்பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ளது". இவ்வாறு 'தினமின' என்னும் சிங்களத் தினசரி 'தமிழர் அனைவரும் ஒன்று கூடுமாறு கூறும் பெடரல் பிரசுரம் மலையகத்தில விநியோகம்' என்ற எட்டுபத்தி தலைப்பிட்டு ஒரு செய்தியைக் கடந்த திங்கட்கிழமை முதற் பக்கத்தில் பிரசுரித்துள்ளது.

"தினமின" மேலும் கூறுவதாவது:-

"பிரஜாவுரிமை பெறவும், உரிமைகளைப் பாதுகாக்கவும், வேலை வசதிகளைப்பெறவும் இவ்வாறு ஒன்றுபட வேண்டியது அவசியமாகும் என்று அந்த அறிக்கை கூறுகிறது-

திரு. தொண்டமான், ஜனப் அப்துல் அஸீஸ் ஆகியோர்தலைமையிலுள்ள காங்கிரஸ்கள்மீது மேற்கொண்டும் நம்பிக்கை வைக்க முடியாதெனக் கூறும் தமிழரசுக் கட்சி பலவந்தமாகச் சிங்களம் கற்பிக்கும் அரசாங்கக் கொள்கையை எதிர்த்து நிற்பதற்காகத் தோட்டப்பகுதி பாட்டாளி மக்கள் எழுச்சி பெறவேண்டுமென்றும் கூறுகிறது.

இப்பிரசுரத்தைத் தமிழரசுக் கட்சியின் சார்பாககட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெளியிட்டுள்ளார்.

மலையகத் தோட்டங்களில் தமிழ் பேசும் மக்கள் இன்று அனுதைகளாக்கப் பட்டிருப்பதால், அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தமிழரசுக்கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாக அக்கட்சியின் அக்ராசனர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் 'தினமின' நிருபரிடம் கூறினர்.

மலையகத்தில் சில இடங்களில் கட்சிக் கிளைகள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட திரு. இராசமாணிக்கம் கிளைகளை அமைப்பதில் திட்டப்படி மிகக்கவனமாகச் செயல்படுவதாகவும் தெரிவித்தார்.

சிங்கள எதிர்ப்பில்

## தமிழ் ஆசிரியர்கள் ஈட்டிய வெற்றி!

சிங்களத்தில் இதுவரை தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்தினுல் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டுள்ள தமிழ் ஆசிரியர்களின் சம்பள உயர்வுப் படியை எல்லாம் திருப்பிக் கொடுக்குமாறு கல்வி இலாகா தனது காரியாலயக் கிளைகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதே சமயம், தலைமை ஆசிரியர்கள், உதவித் தலைமை ஆசிரியர்கள், மற்றும் எல்லாப் பிரிவையும்சேர்ந்த தலைமை ஆசிரியர்களையும், 'பழைய அங்கத்தவர்'களுக்குரியதேர்ச்சியைச் சிங்களத்தில் பெறவேண்டி வைக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதென்றும் கல்வி இலாகா தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. ஆனுலும், இந்த விதி செயற்படும் திகதி, தலைமை ஆசிரியர்களுக்கு இவ் விதி பற்றி அறிவிப்புத் தெரிவிக்கப்படும் திகதியாகவே இருக்குமென்றும், அதுவரை இவர்களுக்கு சம்பள உயர்வுப் படி அளிக்கப்பட வேண்டுமெனவும் கல்வி இலாகா தெரிவித்துள்ளது.

## மக்கள் வங்கி திறக்க வரும் மந்திரிக்குக் கறுப்புக் கொடி

### தமிழரசார் ஏற்பாடுகள் தயார்

மக்கள் வங்கிக் கிளைகளைத் திறந்து வைப்பதற்காக யாழ் நகருக்கு வரும் மந்திரி இலங்கரத்தினுவுக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடை பெற்றுவருகின்றன. இதற்கு வேண்டிய ஒழுங்குகளை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுத் தலைவர்கள் கவனித்து வருகிறார்கள். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் இது விடயமாக யாழ்ப்பாணம் சென்றிருக்கிறார்.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களப் பரீட்சைக்குத் தோன்றுவதைத் தடை செய்ய முயற்சிகள் எடுப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் இவ்வாரம் நடை பெறுகிறது. இவ்விடயத்தில் பல பிரமுகர்களையும். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கலந்துரையாடுவார்கள் என்றும் தெரிகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் இருந்து வெளியாகிய கட்சி நடவடிக்கைகள் என்னும் அறிக்கையிலிருந்து இவ்விடயங்கள் தெரிய வருகிறது.

மேலும் இந்த அறிக்கை கூறுவதாவது:— மக்கள் வங்கிக் கிளைகளைத் திறப்பதற்காக யாழ் நகருக்கும், காங்கேசன்துறைக்கும் வரவிருக்கும் மந்திரி இலங்கரத்தினுவுக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடாத்துவது. யாழ்ப்பாணக் கிளை திறப்பதற்குரிய நேரம் பிற்பகல் மூன்றுமணியெனக் குறிக்கப்பட்டுள்ள படியால் தொண்டர்கள் பிற்பகல் இரண்டு மணிக்கு முன்னரே யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள கட்சிக் காரியாலயத்திற்கு வந்து சேர வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 23-ம், 24-ம் தேதிகளில் யாழ் நகரில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து 24ம் தேதி பிற்பகல் யாழ் முற்றவெளி மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற விருக்கிறது. இக் கூட்டத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்களும், ஆசிரியர்களும் சிங்களம் தகுதிகாண் பரீட்சைக்குத் தோன்றுதிருக்கும்படியும், சிங்களம் படிக்காதிருக்கும் படியும் வேண்டப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவா-மேவலுக்குரிய மேவலன்

# நாவலன், தமிழ்க் காவலன் நலிந்தோரின் ஏவலன்

## தமிழுடைமை விற்று பொதுவுடைமை கொண்டவனல்லன்

புறநானூற்றுப் புதையலை தோண்ட முற்பட்டவர்கள் அங்கு, பகை நாட்டுக் காவலர்களும், வலிவும் பொலிவும் வாய்ந்தவர்களாக விளங்கிய விடத்து, எதிர் நாட்டுப் பாவலர்களால் போற்றிப் புனையப்பட்ட பண்பினைக் காண்பர். அரசியல் பண்பாட்டிற்கு அகரவரிசையாக அமைந்த அக்காவியத்து நிகழ்ச்சிகளின் நிழலிலே நின்று நோக்கும்போது, சென்ற மாதம் 18-ந் தேதி அமரத்துவம் எய்திய தமிழ் நாட்டுத் தலைவர்களில் ஒருவரான திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் எமக்கு மேவலுக்குரிய மேவலனாகத் தோற்றுகிறார். அரசியலில் அவர் மேவலன் ஆமாம் கம்யூனிஸ்ட் கட்சியைச்சார்ந்தவர். மாறுபட்ட சொற்கையுடையார்; எம் எதிரி. ஆனால் மாண்புமிக்க எதிரியாக 'இவர் என் எதிரி' எனக் கூறுவதிலே அன்னாரது பகைவனும் சற்று பெருமை கொள்ளக் கூடியவராக வாழ்ந்தார்; அதனால் மேவலுக்குரியவரானார். 'தந்தை செல்வாவை எதிர்த்தோம்' என்ற தகைமையைப் பெறுவதற்காகச் சென்ற தேர்தலில் அன்னாரை எதிர்த்துப் போட்டியிட்டுப் பூரித்தவர்களுடைய மனோநிலை நினைவு கூரத் தக்கது.

### தனித்தன்மையுடையார்

ஜீவா மாஸ்கோவினதோ பீக்கிங்கினதோ — நகலாக, 'கார்பன்' பிரதியாகவாழ்ந்தவரல்ல, அசல்கம்யூனிஸ்டாக அன்றொரு நாள் மாஸ்கோவுக்கு மனச்சாட்சியையும் யூகோஸ்லாவிய மண்ணையும் அடகு வைக்க மறுத்த டிட்டோவைப் போல, வாழ்ந்தவர். கம்யூனிஸ்டுகளுக்கே உரித்தான கைங்கரியங்கள் பலவற்றை வெறுத்தொதுக்கினவர் ஜீவானந்தம். சில காட்டுமிராண்டிக் கம்யூனிஸ்டுகளைப்போல அவர் தாம் மனிதன் என்பதை மறந்தாரில்லை. அதனால் மனிதத்தன்மையைத் துறந்தாரில்லை.

பல கம்யூனிஸ்ட் துரோகிகளைப்போல, அவர் தான் தமிழன் என்பதையோ இந்தியன் என்பதையோ மறுத்தவரல்ல. அதனால் மொழியாம் கணையையும், இந்திய மண்ணையும் காக்கத் துடித்தவர். தன்னைப் பெற்ற தாயும், உற்ற தந்தையும், தான் பிறந்த பொன்னாடும் இமயத்திற்கு இப்பால் என உணர்ந்தவர்; ஏனைய கம்யூனிஸ்டுகளைப் போல மாஸ்கோவில் 'மாமனென்றும்' சீனாவில் 'சித்தப்பன்' என்றும் கூறித் தம் பெற்ற தாயின் பெருமைமிகு கற்புடைமைக்கு அறைகூவல் விடுத்தவரல்லர்.

### ஜீவாவின் இலக்கியப்பணி

தென்னகத்திலே தமிழ் வளர்த்த தலைவர்களின் அணியிலே வைத்துக் கணிக்கப்பட வேண்டியவர் ஜீவா. ஏனைய கம்யூனிஸ்ட் தலைவர்களெல்லாம தமது தத்துவ விளக்கங்களுக்கு மேல் நாட்டுத் தத்துவ ஞானிகளிடமிருந்தும்கவிஞர்களிடமிருந்

**"கரிகாலன்"**

தும் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளிலிருந்து மேற்கோள்கள் காட்ட முற்பட்டநேரத்தில், ஜீவா அவர்கள் தமிழ்நாட்டு இலக்கியங்களிலிருந்தே தமது தத்துவங்களை நிலைநாட்டுவதற்கு ஆதரவு திரட்டினார். கம்பராமாயணத்திலே, கம்பன் காதாளரை மேம்படுத்தி மேழிக்குமேன்மைகொடுத்த காட்சியைத் துணைக்கொண்டு கம்யூனிஸ தத்துவங்கட்கு வியாக்கியானம் செய்யப் புறப்பட்ட ஜீவாவின் இலக்கிய ஈடுபாடும் ஆராய்ச்சித் திறனும் அளப்பரிது. கம்பராமாயணத்திற்கு எதிராக மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் கண்டனம் தெரிவித்த நேரத்தில், தமது நாவன்மையின் அனுசரணையோடு கம்பனுக்காக வழக்குரைத்த வழக்கறிஞர் ஜீவாவாகும். இளங்கோவுடன் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. கொண்டிருந்த தொடர்பினை, கம்பனுடன் ஜீவா கொண்டிருக்கக் காண்கிறோம். இந்த அடிப்படையில் கம்பன்பால் அவர் கொண்ட நோக்கு இரசிகமணி டி. கே. சி. கொண்ட நோக்கினும் சற்று மாறுபட்டதெனவே கூறவேண்டும்.

### அர்த்தமற்ற யதார்த்தம்

இந்நாட்டில் தமிழர் மத்தியிலும், தமிழகத்திலும் 'நிர்வாணச்' சிறுகதைகளை எழுதிவிட்டு 'யதார்த்த' இலக்கியம் படைத்து விட்டோமெனப் பிரலாபித்துக் கொள்ளும் கம்யூனிஸ்டுகளையொத்த குறுமதியினரல்ல ஜீவா. அன்னாரின் நாவுதிர்த்த விதைகளும் எழுத்தாணியின் உழவும் பண்போடிழைந்தவைகளாகும். கண்ணியத்தின் காவலர்களாக நின்று தமிழ் வளர்த்த மாண்புடை மேலோர்களாம் தண்டமிழ்த் தென்றல் திரு. வி. க., நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றோருடன் கூடித் தமிழ் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பும், அதனால் ஏற்பட்ட தொடர்பும், சூழலும் ஜீவானந்தம் அவர்களின் பேச்சும் எழுத்தும் பண்படுவதற்குப் பெரிதும் ஊட்டமளித்தன. அஃது திரு. ஜீவாவின் பெருமையை எவ்வாற்றாலும் குறைப்பதாகாது. துரதிருஷ்டவசமாக பண்பாடான சூழல்களை நம் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் வெறுத்தொதுக்கும் காரணத்தினால், தத்துவரீதியில் தரம்மிக்கவையான அவர்தம் கருத்துக்கள் சிலவும், விபரீதமாக அவர்களால் வியாக்கியானம் செய்யப்பட்டு பொதுமக்களினால் வெறுத்தொதுக்கப்படுவதுடன், அவர்தம் எழுத்தும் பேச்சும் கண்ணியமற்றவையாகின்றன. அதற்கு 'யதார்த்தம்' என வேறு விளக்கம் தரப்படுகின்றது.

### முதலில் தமிழன் பின்பே கம்யூனிஸ்ட்

ஜீவாவின் தமிழ்ப்பணி இலக்கிய உணர்ச்சியுடன் மாத்திரம் கட்டுண்டதல்ல, இனவெழுச்சியோடும் ஒட்டியதாகும். பெரியார் ஈ. வே. ராவுடன் சேர்ந்து அன்னார் இந்தியெதிர்ப்பு போரில் கொண்ட பங்கின் பாங்கு பைந்தமிழர் வரலாற்றில் நிலைபெற்றதொன்றாகும். வடவராதிக்கத்தால் தென்னகம் வாழ் தமிழருக்கு ஆபத்து எனக் கண்டபோதெல்லாம், ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியில் கட்டுண்டவராகத் தன்னைக் கணித்துக் கொள்ளவில்லை. தான் முதலில் ஒரு தமிழன், பின்னர் தான் ஒரு கம்யூனிஸ்ட் என்ற உணர்ச்சி, ஜீவாவின் அரசியல் வாழ்வில் வற்றாதிருந்தது. பெரியாரின் தொண்டனாக ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தபோதும்மட்டுமல்ல, தீவிர கம்யூனிஸ்டாக மாறிய பின்னரும் கூட இனத்திற்கும் இன்தமிழுக்கும் ஆபத்து என்ற கட்டத்தினால் அவர் அதிதீவிர தமிழனாக மாறினார். வானொலியில் போராட்டம், தமிழ்நாடு பெயர் மாற்றக் கிளர்ச்சி, போன்ற இனவெழுச்சி, மொழியுணர்ச்சிப் பணிகளிலெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சிக்கவைத்த செம்மல் ஜீவானந்தம் அவர்களாகும். தமிழுடைமை விற்றுப் பொதுவுடைமை கொண்டவன் [illegible] தலைமையாளர் அன்னார்.

(தொடரும்)



# ரிஷி லேகியம்

**ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்**

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனம்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5·75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு.

இலக்கியம்:

# பார்வை ஒன்று; பொருள் ஒன்று

— தேனீ —

எவ்வளவு காலமாக அவளை அவன் காதலித்து வந்தான்!

எத்தனை நாட்களாக அவன் காடு, மேடு கடந்து தன் காதலியின் அன்பு முகம் கண்டு அகம் மகிழ ஓடோடி வந்திருப்பான்!

எத்தனை இரவுகள் அவன் தூக்கமின்றி விழித்திருந்து, தன் காதலியின் திருவுருவை மானசீகமாகப் பார்த்து மனம் மகிழ்ந்திருப்பான்!

எத்தனை எண்ணங்கள் அவன் உள்ளத்தை அலைக்கழித்து இருக்கும்!

இவ்விதம் தனது அன்புக் காதலிக்கு ஏங்கித் தவித்த தலைவனுக்குக் கிடைத்த பரிசு?

கடும் சொல்; வெகுளிப் பார்வை!

யாரிடமிருந்து? தலைவியிடமிருந்து தான்!

அப்படியானால்............அவன் காதல் காதலே இல்லையா? ஒரு தலைக் காமம் தானோ?

அவன் எண்ணிய எண்ணங்கள், அவன் கட்டிய கோட்டைகள், அவன் எழுப்பியிருந்த எதிர்கால இன்ப மாளிகைகள்—எல்லாமே வெறும் கானல் நீர் தானா?

இல்லை—ஒருக்காலும் இல்லை.

தலைவிக்கும் அவன் மேல் அன்பு தான். அவனைப் போலவே அவளும் எத்தனை இரவுகள், நித்திரையின்றிக் கழித்திருப்பாள்! எத்தனை இன்ப எண்ணங்களை உள்ளத்தில் விதைத்து, அவற்றுக்குத் தலைவன் மீதுள்ள பாசமென்னும் நீரூற்றி வளர்த்துப் பேணிக் காத்திருப்பாள்!

அப்பொழுது.........ஏன் கடும் சொல்? ஏன், கோபப் பார்வை?

தலைவன் தவறாகப் புரிந்து விட்டான் போலும்!

யார் கூறியது கடும் சொல் என்று? அது கடும் சொல்லே அல்ல. முதலில் கடுமை போல் தோன்றினாலும், பிறகு இன்பம் பயக்கும் சொல்தான் தலைவியின் சொல்.

பயந்து காட்டும் இயல்பு பாவையர்க்குத் தனிச் சிறப்பன்றோ? பயத்தினால் ஏற்பட்ட கோபம் தான் அப்படி வெகுளிப் பார்வையாக மாறியது. உண்மையில் அவளுக்கு எப்படி அவன்மீது கோபம் ஏற்பட முடியும்?

வெளிக்குப் பகை போல் தெரியும் அவள் பார்வையில், ஒளித்துக் கொண்டிருப்பது உண்மையில் உள்ளன்பே தான்.

அப்படிப் பார்த்து, தன் காதலனை ஏமாற்றி மகிழ்வதில் அவளுக்கு ஓர் திருப்தி—அவ்வளவு தான், வேறொன்றுமில்லை.

வள்ளுவர், அவளின் சொல், பார்வை இவற்றின் உண்மை அர்த்தம் என்ன வென்பதை அழகாகக் கூறுகிறார்:

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு.

# விழி நோக்கும் கண்ணே! வழி பார்த்து நிற்காதே!

—: திக்கம் சதாதனம், அல்வாய். :—

**கிராமிய இலக்கியம்**

சரித்திரப் புகழ் பெற்ற வல்லிபுர ஆழ்வார் கோவிலில் நடைபெறும் சப்பறத் திருவிழா பிரசித்தி வாய்ந்த திருவிழா!

அன்றைய தினத்திலே ஈழத் தமிழர்கள் எங்கிருந்தாலும் பெருவாரியாக வந்து இந்திர விழாவாம் சப்பறத் திருவிழாவைக் கண்டும் களித்தும் செல்வது இன்று நேற்றல்ல—சரித்திர காலந்தொட்டே நடைபெறும் ஓர் இனிமை நிறைந்த சம்பவமாகும்!

சிறுவர்கள் வெண்மணற் பரப்பில் சிங்காரச் சிறு வீடு கட்டி மகிழ்வார்கள். வாலிபர்கள் வயதின் திமிர் காட்ட பந்தாட்டம் ஆடுவார்கள். காதலனும் காதலியும் கண்டவர் வியக்கும் வண்ணம் தயக்கம் நீங்கி மயக்கம் தெளியா காதல் வெறியிலே நிலை தடுமாறி நடக்கின்ற—இல்லை — நடிக்கின்ற நினைவிலே, காதற் கதையளந்து களிப்பார்கள். வாழ்க்கையை அனுபவித்து, மறு உலகைப் பற்றி எண்ணும் கிழவனும் கிழவியும் தெய்வ தரிசனத்திற்குப் பின் இன்னிசையில் மூழ்கியிருப்பார்கள். வானம் அளிக்கும் தண்ணொளியும்— கானம் அளிக்கும் தேனொலியும் யாரையும் மதிமயக்கத் தானே செய்யும்!


இந்தப் பொன்னான நல் விழாவுக்குத்தான் களவியல் முடித்து; கற்பியலிறங்கி— இல்லறம் என்னும் நல்லறத்தில் இருக்கும் கனகசபையும் கனகமணியும் செல்வதற்கு உத்தேசித்து இருந்தார்கள். இத்திருநாள் தான் இருவரும் திருமணத்தின் பின் செல்லும் பெரு விழாவுமாக இருந்தது! அதரத்திற்கு வெற்றிலைச் செஞ்சாயம் பூசி, பார்ப்பவர் பெருமைபட; நெளிந்தும் குழைந்தும்; முட்டியும் தட்டியும், வெண்மணற் பரப்பிலே தனது ஆசை அத்தானுடன் தானும் விழாப் பார்ப்பேன் என்று கனவு கண்டாள் கனகமணி.

ஆனால், கனகமணியின் கனவு, நனவாகவில்லை எனினும் இன்பச் சுவையளிக்கும் அமுத வாயால், தனக்கு வேண்டிய பொருட்களை எவ்வளவு அழகாக எடுத்தியம்புகிறாள் பாருங்கள்:—

அல்வையூர் பெட்டியுடன்,
துன்னாலையூர் சட்டியும்
புலோலியூர் பனங்கட்டியும்
மணற்குளி நாவற்பழமும்
நல்லவையாய் கொண்டாங்கோ
அத்தான்; வழிகாத்துப்
பாத்திருப்பேன்.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம். லூர்து மேரி, மூதூர்-13.

கே: கல்ஓயாவில் தமிழர்களும் முஸ்லிம்களும் குடியேறுவதைத் தடைசெய்யு மாறும் இல்லையேல், கலகத்திற்கும் அமைதியின்மைக்கும் வழி வகுக்குமெனவும் பௌத்த காங்கிரஸ் தலைவர் கூறியிருக்கிறார். இக்கூற்றுக்குப் பின்பாவது அரசாங்கத்திற்கு வால்பிடித்துத்திரியும் கிழக்கு மாகாணப்பிரதிநிதிகளுக்குச் சொரணை வருமா?

ப: அதெப்படி வரும்? அவர்கள் அரசாங்கத்துக்கு வால் பிடிப்பது மக்கள் நலனுக்காக அல்லவே.

ஃ

எஸ். வி. பாலன், பண்டத்தரிப்பு.

கே: 30-1-63-ல் தினசரித் தமிழ் பத்திரிகைகளுள் "ஈழநாடு" கூறுகிறது: "தமிழரசு வாலிப முன்னணி ஊர்வலத்திற்கு பொலிஸ் அனுமதி" என்று; "வீரகேசரி" கூறுகிறது: "தமிழரசு வாலிப முன்னணி ஊர்வலத்திற்குத் தடை" என்று. இதில் நாம எதை நம்புவது?

ப: 'ஈழ நாடு' செய்தியை நம்புங்கள். "ஈழ நாடு" செய்தியைக் கண்ட பின்னர் "வீரகேசரியும்" தன்னைத் திருத்திக் கொண்டது.

கே: இதுவரை இந்தியாவில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு வசூலிக்கப்பட்ட பணம் மொத்தம் எவ்வளவு?

ப: சுமார் ரூ. 40 கோடி.

ஃ

ஸ்ரீ ஸ்கந்தராஜா கந்தையா, பொரளை.

கே: இரகசியம் எங்கே, யாரிடம் நிலைத்து நிற்கும்?

ப: இரகசியம் நான்கு செவிகளுள் அடங்கி இருக்கும் வரை நிலைத்து நிற்கும். செவிகளின் எண்ணிக்கை அதற்கு மேற்பட்டுவிட்டால் அது பகிரங்க இரகசியமாகி விடும்.

ஃ

அ. சிவப்பிரகாசம், கன்னாகம்.

கே: தனிப்பெருந் தலைவர் தற்போது என்ன செய்கிறார்?

ப: ஒவ்வொரு நீதிமன்றமாக ஏறி இறங்குகிறார். அதற்குப் பெயர் பொதுசன சேவையாம்.

கே: அம்மா பிரதமமந்திரி பதவியிலிருந்து திடீரென ராஜினாமா செய்தால் மகா தேசாதிபதி பிரதமர் பதவியை ஏற்குமாறு யாரை அழைப்பார்? திரு. சி. பி. டி. சில்வாவையா? திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவையா?

ப: முறைப்படி திரு. சி. பி. டி. சில்வாவையே அழைக்க வேண்டும். ஆனால் திரு. பீலிக்ஸை அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. திரு. டி. எஸ். சேனநாயக்கா காலமான போது மகா தேசாதிபதி பிரதமர் பதவிக்குச் சேர் ஜோன் கொத்தலாவலையை அழைப்பாரென்றுதான் அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் தேசாதிபதியோ திரு. டட்லியை அழைத்துவிட்டார். அம்மாதிரி.........!

ஃ

வி. எஸ். ஆர். முருகையா, பதுளை.

கே: அமெரிக்க உதவி நிறுத்தம் பற்றி ஒரு தினசரி கடந்த திங்கட்கிழமை எழுதிய தலையங்கத்தில் அமெரிக்கச் செயலுக்கு நியாயம் கற்பித்தும் இலங்கை அரசாங்கத்தின் போக்கைக் குறை கூறியும் எழுதப் பட்டிருந்தது. அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை அதே தினசரி அரசாங்க நடவடிக்கைக்கு ஆதாரம் காட்டியும், அமெரிக்காவின் உதவி நிறுத்தத்தை நவீனமான பதங்களால் கண்டித்தும் தலையங்கம் தீட்டி இருந்தது. இதனைக் கவனித்தீர்களா?

ப: கொள்கையற்ற இத் தினசரிக்கு இம்மாதிரியான தடுமாற்றங்கள் சகஜமே. 24 மணி நேரத்தில் அடித்த இத்திடீர் 'பல்டிக்கு'க்குக் காரணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்ப்பந்தம் என்பதில் ஐயமில்லை. அச் கட்சியின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே, யு. என். பிக்குத் தீவட்டி பிடிக்கும் தினசரிதான் இது.

ஃ

"மணிமன்றனார்" கோவை.

கே: இலங்கையிலே தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினராயிருந்தும் அவர்களுக்குள்ளும் 'சிறுபான்மைத் தமிழர்" என்பது என்ன? இதை விளக்குவீர்களா?

ப: சிறுபான்மைத் தமிழர் தனி தேசிய இனமன்று. அவர்களும் தமிழினத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினரே. சாதிப் பாகுபாடு இனப்பாகுபாடன்று.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: சில பெண்கள் தங்கள் கணவன் பெயரைச் சொல்ல விரும்புகிறார்களில்லையே, ஏன்?

ப: கணவன் பெயர் பிறருக்குத் தெரியாதிருப்பது ஒருவகையில் அவர்கட்குப் பயன்படலாம்.

ஃ

பி. சிருபைதாஸ், தோப்பூர்.

கே: நீர் உலகத்தை நன்கு சுற்றிவிட்டா கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறீர்?

ப: கேள்விகளுக்குப் பதிலளிக்காவிட்டாலும் எனது மனம் ஒரே நாளில் பன்முறை உலகத்தைச் சுற்றி வருகிறதே!

ஃ

அ. வெள்ளைச்சாமி, பிட்டக்கந்தை.

கே: நான் எத்தனையோ கேள்விகள் கேட்டும் பதிலளிக்காமைக்கு காரணம் யாது?

ப: அடியேன் பதிலளிக்கத் தகுதியற்ற "மகத்தான" கேள்விகள் அவை. எப்படியும், இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்துவிட்டதே!

ஃ

செ. பாக்கியநாதன், முல்லைத்தீவு.

கே: எம். ஜி. ஆர். தமது தாய்ப் பாஷை மலையாளமாக இருந்தும், தமிழ் மக்களுக்காக எதற்குப் பாடுபடுகின்றார்?

ப: மலையாள மக்கள் திராவிட இனத்தின் ஒரு பகுதியினர். இதனை அறிந்துள்ளவர் எம். ஜி. ஆர்.

ஃ

லூர்துமேரி, மூதூர்.

கே: தமிழரசுக் கட்சியை அரசாங்கம் தடை செய்தால் என்ன செய்ய வேண்டும்?

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

ப: என்ன செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கும் பொறுப்பைத் தமிழரசுக் கட்சியிடமே விட்டு விடுங்கள்.

கே: தமிழ்ப் பகுதிகளில் பொலிசாரின் கெடுபிடி அதிகமாகி வருகிறது. அரசாங்கம் இது குறித்து வாளாவிருப்பதேன்?

ப: பொலிசையும் அரசாங்கத்தையும் பிரித்துப் பேசுகிறீர்கள். அரசாங்கத்தின் கையிலுள்ள ஆயுதங்களில் ஒன்றுதான் பொலிஸ். நாய்க்குத் தெரியாமல் வால் ஆடுமா?

கே: உங்களுடைய நிழலுருவம் பதித்த புதுவருடக் கலண்டர் ஒன்றை இரண்டு ரூபாய்க்குத் தருவீர்களா?

ப: மூதூர் இரண்டாவது பிரதிநிதியிடம் கேட்கவேண்டிய கேள்வியைத் தவறுதலாக என்னிடம் கேட்டுவிட்டீர்கள் போலும்!

ஃ

எஸ். அப்துல் சலாம், திருகோணமலை.

கே: [illegible] பின்வாங்குவதற்கு காரணம் யாது?

ப: மக்களுக்கு வழி காட்டியாக முன்னால் செல்லாமல், அவர்களுக்குப் பின்னால் செல்வதால்.

ஃ

நீலலோசனி-சபாபதிப்பிள்ளை, பருத்தித்துறை.

கே: திரு. ராஜரத்தினாவின் பேரன் பூட்டன் தமிழரென்று சொல்லுகிறார்கள், இது உண்மையா?

ப: அதனால்தானே அவர் தமிழர் மீது துவேஷம் பாராட்ட தனியுரிமை கொண்டாடுகிறார்

ஃ

எம். பி. சிங்கம், தெனியாய.

கே: திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கைப் பிரதமரானால் சிங்களம் பேசும் மக்களின் நிலை என்ன?

ப: அவர்களுக்கு உரிமைகளையெல்லாம் உடனடியாக வழங்கிவிடுவார்.

ஃ

"கேக்கே", அக்கரைப்பத்தனை.

கே: இலங்கை வாழ் தமிழர்கள் எல்லோரும் ஒரே கட்சியில் சேர்ந்து அதன் தலைமைப் பீடத்தை திரு. தொண்டமானிடம் ஒப்படைத்தால்?

ப: அவர் அவர்களை ஆட்சியாளரிடம் ஒப்படைப்பார்.

கே: தமிழரசுப் பீரங்கி திரு. அமிர்தலிங்கம், என்ன செய்கிறார்?

ப: பீரங்கி என்ன செய்யும்? முழங்கிக் கொண்டிருக்கும்.

ஃ

அ. த. நாயகம், யோகபுரம்.

கே: தமிழ் மக்களின் துக்க தினமான மாசி 4-ம் திகதி யாழ் நகரில் காட்சி அளித்த கறுப்புக் கொடிகள் அத்தனையையும் பொலிசார் சேகரித்துச் சென்றனரே, அதில் அவர்கட்கு என்ன லாபம் உண்டு?

ப: தமிழ்ப் பகுதிகளுக்குச் சிங்கள மந்திரிகள் அடிக்கடி வருவதால் கறுப்புக் கொடிக்கு தற்போது "கிராக்கி" ஏற்பட்டுள்ளது. எனவே பொலிஸ் சேகரித்த கறுப்புக் கொடிகளைக் கறுப்புச் சந்தையில் விற்று இலாபம் திரட்டலாமல்லவா?

ஃ

அ. அ. முத்தழகன், அப்புத்தளை.

கே: மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க நாது பிரதமர் ஒரு சர்வகட்சி வட்ட மேசை மாநாடு கூட்டப் போகிறாராமே, அதன் முடிவு எப்படி இருக்கும்?

ப: வட்ட மேசையில் முடிவு ஏது? சுற்றிச் சுற்றி வரவேண்டியதுதான்.

கே: சில சினிமாப் பாடல்கள் தமிழர்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவதாக அரசாங்கம் கிலி கொண்டு அவைகளைத் தடை செய்திருக்கிறதே. அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: சிப்பை ஒளித்து விட்டால் கலியாணம் நின்று விடுமா என்ன?

ஃ

அருளழகன், ஏழாலை மேற்கு.

கே: தமிழ்வாணன் எப்பொழுதும் அறிஞர் அண்ணாவைத் தாக்குகிறாரே, ஏன்?

ப: புகழ் பெற்றோரைத் தாக்கினால் புகழ் பெறலாம் என்ற எண்ணம்.

ஃ

இ. நா. வடிவேலு, சாவகச்சேரி.

கே: எடுத்ததெல்லா அபிவிருத்திக்கும் அரசாங்க மந்திரிகள் லொத்தர் நடத்தப் போகிறோம் என்கிறார்கள். இதன் மர்மம் என்ன?

ப: கஜானாவிலோ கால் சதமில்லை. 'லாட்டரி' அடிக்காமல் மந்திரிகள் வேறு என்ன செய்ய முடியும்?

ஃ

சண்முகத்தேவர், நுவரெலியா.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். எனது நண்பரும் அதே பெண்ணைக் காதலிக்கிறார். கடைசியில் யாருக்கு வெற்றிகிடைக்கும்?

ப: அந்தப் பெண் யாரைக் காதலிக்கிறாரோ, அவருக்குதான் வெற்றி!

ஃ

சு. மயில்வாகனம், நுவரெலியா.

கே: என்னுடைய வியாபாரத் தொழில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனபடியால் இ. த. அ. கட்சியில் நானும் ஒரு அங்கத்தவனாகச் சேர்ந்து, தமிழன் உரிமைக்காகத் தியாகம் செய்யப் போகிறேன்.

ப: "வியாபாரத் தொழிலில் நம்பிக்கையில்லை. ஆகவே உரிமைகளுக்காகத் தியாகம் செய்யப் போகிறேன்" என்கிறீர்கள். இதிலிருந்து தங்கள் தியாக எண்ணத்தில் சுயநலம் மண்டிக் கிடப்பது புலனாகிறதே!

ஃ

வி. ஆர். செல்வம், நுவரெலியா.

கே: தி. மு. க. என்றால் சிலர் பயப்படுகிறார்களே, ஏன்?

ப: மக்கள் ஆதரவுதான் காரணம்.

## திருமகளே...!

—பஸில் காரியப்பர்—

'திருமகளே!' கொஞ்சம் வாவா!
திரும்பிப்பார்! என்ன கோபம்?
அருகேவா!; உன்னைப் பற்றி
அதிகமாய்ப் பிழைகள் சொன்னன்
உருகியே ஏழ்மை தன்னில்
உழன்றிடும் அக் கலைஞன்;
சரியோஉன் வஞ்சம்?; இங்கு
சற்று கேள் சிந்தித்துப்பார்!

* * *

கலைஞனைக் காத லித்தாய்!
காசினைக் காட்டிப் பார்த்தாய்
'கலைமகள்' தன்னை யந்தக்
கலைஞனும் காதலித் தான்;
உளத்தினி லெரிவு கொண்டாய்
உன்னைப்போல் பெண்ணுே உன்னன்
நிலையிலே துன்பஞ் சேர்க்கும்
நின்பழி சரியோ? சொல்லு!

* * *

கலையோ! ஊடல் தானே?
'கலைமகள்' தமக்கை யல்லோ?
அவளுடன் கலைஞன் வாழ்ந்தால்
அதற்குஏன் இந்தக் கோபம்?
அவனொரு 'பித்தன்' அம்மா!
'அக்காளே' போது மென்பான்
உவமையில் தாய்க் குலத்து
உன்னருள் காட்டு; போ!போ!

ஆசியாவின் ஆகச் சிறந்த சிமிந்தி
'ஒடேடா'
தான்
விநியோகஸ்தர்கள்
சென்ற்.
அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,
516, ஸ்கின்னேர்ஸ் ரேட் தெற்கு,
கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலகண்டன்

## துரோக சிவத்துடன் பேட்டி

## திருவிளையாடல் காண்டம்

(உதய காண்டத்தில் திரு. துரோகசிவம் தன்னைப் பற்றிய விளக்கங்களைத் தெரிவித்தார். பத்திரிகைக் காண்டத்தில் தன் பத்திரிகைத் துறைப் பிரவேசம் பற்றிக் கூறினார்.)

**அம்மான்:** தினசரியாக வெளிவந்த பத்திரிகை நீங்கள போய்ச் சேர்ந்த ஒரு வருடத்துள் வாரப் பத்திரிகையானதென்றால் நீங்கள் உங்கள் திருவிளையாடல்களைக் காட்டியிருப்பீர்கள் என்று நி[illegible]க்கிறேன்.

**துரோகசிவம்:** இல்லாவிட்டால் மாதாந்தம் 7000 ரூபா நட்டம் ஏற்படுமா?

**அ:** ஆமாம் உங்கள் திருவிளையாடல்களைக் கொஞ்சம்.........

**து:** என்ன அம்மான் தெரிந்தும் தெரியாதவர் போல......

**அ:** என்னவானாலும் உங்கள் வாயாலே கேட்டு விடலாம் என்றுதானே.

**து:** சரி, சொல்லுகிறேன். முதலில் ஒரு படப்பிடிப்புப் பகுதியைத் தொடங்கினேன். அதில் எனக்குச் சில பல வழிகளில் வெட்டுக் கொத்து வருமானங்கள் கிடைத்தன. பின்னர் அச்சகப் பகுதியில் வேலை தெரிந்தவர்களை வெளியே வேறு வேலைகளுக்கும் போட்டு விட்டு என்னுடைய ஆட்களைப் பொறுப்பாக விட்டேன்.

**அ:** அச்சகப் பகுதிக்குப் பொறுப்பானவர் கொஞ்சம் துணிந்த கட்டையாச்சே— அவர் சும்மாவிட்டாரா?

**து:** அந்த மனிதன் பொல்லாதவன். ஒரு நாள் நான் பிழையாக ஏதோ சொல்ல அவர் துவரந்தடியைக் கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு "வெளியே வா பார்க்கலாம்" என்றார்.

**அ:** நீங்கள் வெளியே போனீர்களா?

**து:** நான் போவேனா, அடிபிடி என்றால் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவும் மாட்டேனே, நான் உடனே என் அறையுள் ஓடி கதவை இறுகப் பூட்டிக் கொண்டேன். அதன் பின் பல காலமாக நான் என் நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டேன்.

**அ:** வேலை தெரியாதோரைப் போட்டதால் உங்களுக்கு என்ன நன்மை?

**து:** நன்மையா? வருமானம் என்று கூறுங்கள். பல பல வழிகளில் களவுகள் நடந்தன. ஆனால் நான் எதைப்பட செய்யவில்லை. பலரை உபயோகித்தேன்.

**அ:** ஒருவரும் அகப்படவில்லையா?

**து:** புதிதாக ஒரு நிர்வாகி வந்ததுதான் தாமதம், பலர் அகப்பட்டார்கள். வேலையிழந்தார்கள். ஆனால் நான் அவர்களைத் திரும்பியும் பார்க்கவில்லை. என்னிடம் சேர்க்கப்பட்டவற்றைத் திருப்பிக் கொடுக்கவுமில்லை.

**அ:** அப்படியானால் புதிய நிர்வாகத்தின் கீழ் உங்கள் திருவிளையாடல்கள் நின்று விட்டனவோ?

**து:** இலகுவில் விடுவேனா? காரியாலயத்துள் களவு செய்ய முடியாத பட்சத்தில் வேறு ஒரு யுக்தியைக் கையாண்டேன்.

**அ:** அதுதான் இந்தியாவில் தொடக்கப்பட்ட புத்தக வெளியீட்டு நிலையமா?

**து:** ஆம்.

**அ:** அந்த நிலையம் கடைசியில் என்னவானது?

**து:** வெளியிடப் புத்தகங்கள் தந்தோரின் பணம் எல்லாமே.........தெரியாதா...... ஏதோ அந்த வியாபாரம் நன்றாக வரவில்லை.

**அ:** ஆமாம். இதெல்லாம் நடந்ததே, பத்திரிகை என்னவானது?

**து:** அதை என் சொந்தச் சொத்தாகப் பாவித்[தே]ன்.

**அ:** சொந்தச் சொத்தாக என்றால்?

**து:** எனக்கு விருப்பமானவர்களைத் தாக்கினேன். ஏன், பல வேளைகளில் பத்திரிகை ஆதரவாளர்களையே என் சொந்தக்காரணத்திற்காகத் தாக்கி எழுதினேன்.

**அ:** இவற்றிற்கெல்லாம் யார் உங்களுக்கு உடந்தையாக நின்றார்.

**து:** அதற்குத்தானே விழல் சிங்கம்—குருசொற்[illegible]தவறு சிஷ்யன் இருந்தானே!

**அ:** அவர் நீங்கள் காலால் இட்ட பணியைத்......

**து:** ஓம். அப்படித்தான். வீட்டுக்குக் கறிசாமான் தேவையானால் அல்லது எதுவித வேலையானாலும் சரி செய்வார். நான தேநீர் வாங்கும்படி அனுப்பினால் சிலவேளை தன்னுடைய பணத்திலேயே வாங்கி வருவார். ஆனால் ஒருநாள் எனக்கும் காலை வாரிவிடுவானோ என்ற பயம் மட்டும் இன்றும் இருந்து வருகிறது.

**அ:** ஆமாம் நீங்கள் இப்படியாகப் பத்திரிகையை உபயோகிக்கும்போது முதலாளிமார்.........

**து:** ஐயோ அந்த மனிதன் ஒரு அப்பாவி. யாரைப் பற்றியும் கூடாமல் கூறினால் இலகுவில் நம்பமாட்டார். நம்பினாலும் 'மனிதன் தவறு செய்வது வழக்கம்' என்று கூறி, திருந்துவான் என்ற நம்பிக்கையுடன் இருந்து விடுவார்.

**அ:** ஆமாம் உங்கள் இலாப நிதிகள் என்னவாயின?

**து:** அது கொடுக்கத் தவறியவர்களை பத்திரிகையில் தாக்கினேன். அந்தப் பத்திரிகையை விட்ட பின் ஒருவனும் என்னை நம்புவதாக இல்லை. உள்ளத்தைச் சுருட்டிக் கொண்டு பேசாமலிருந்து காண்டேன்.

அப்போதுதான் என் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன் மணி 12 ஆகிவிட்டது. என் பானை வயிறு பசியால் முனங்கத் தொடங்கியது.

மிகுதியை வேறு ஒருநாள் வந்து அறிந்து போகிறேன் என்று கூறிக்கொண்டு எழுந்தேன். திரு. துரோகசிவம் தானங்கள் செய்பவர். எனக்கு அன்னதானம் செய்ய விரும்பவில்லை என்று நினைத்துக் கொண்டு வெளியேறும்போது துரோகசிவம் எழுந்து "அம்மான் என் சரித்திரத்தை நீங்கள் யாருக்காவது கூறும்போது இதையும் கூறுங்கள். சமூகத்தில் மனிதனாக நடமாட முடியாத நிலையில் இன்று நான் இருக்கிறேன். என்னை உதாரணம் கண்டாவது மற்றவர்கள் திருந்திக் கொள்ளட்டும்" என்று கூறினார். அப்படியே செய்கிறேன். விரைவில் மிகுதிக்கும் வருவேன் என்று கூறி என் வயிற்றுக்குப் புல்லுப் போட விரைந்தேன்.

நான் வெளியேறியதுதான் தாமதம துரோகசிவம் வீட்டுக் கதவு என் பின்னால் படார் என்று அடித்துச்சாத்தப்பட்டுத் தாழ்ப்பாளும் போடப்பட்டது.

# வேலை நிறுத்தத்தை விழுங்கிய வதந்தி

வேலை நிறுத்தங்கள் பல தோல்வி அடைந்து போகின்றன. வேலை நிறுத்தக்காரர்களை மண் கவ்வ வைக்க அரசாங்கமும் ஆளும் கட்சியும் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகின்றன.

அண்மையில் நடந்து முடிந்த பஸ் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்கு பலதரப்பட்ட சூழ்ச்சிகள் கையாளப்பட்டன. முன்பெல்லாம் நடந்த பல பகிரங்க வேலை நிறுத்தங்களில் கொம்யூனிஸ்டுக் கட்சியின் சார்புடன் இயங்கும் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துடன் ஒத்துப்பாடி காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டன. இம்முறை தாங்கள் தனித்து நடத்திய போராட்டத்தின் போது உதவியற்று நிர்க்கதியானார்கள். தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு தொழிலாளப் பெருமக்களை பகடைக் காய்களாகக் கருதி உருட்டி விளையாடும் கொம்யூனிஸ்டுகள் இந்த வேலை நிறுத்தத் தோல்வியில் பெரியதொரு பாடம் படித்திருக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தை வலுவிழக்கச் செய்வதற்கு சில ஆளும் கட்சி சாணக்கியர்கள் கையாண்ட ஒரு தந்திரத்தையிட்டு அம்மானுக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

கொம்யூனிஸ்டுக் கட்சி சார்புடைய தொழிலாளர் சங்கமான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர்களில் முக்கியமானவர் திரு. சண்முகதாசன். இவர் ஒரு தமிழர் என்பதை மையமாக வைத்துக் கொண்டே விசித்திரமான காரணங்களைச் சோடித்திருக்கின்றனர்.

"தமிழர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதனால், அவர்கள் ஆளும் [illegible] னர். ஆளும் கட்சியை முறியடிக்கச்சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டுள்ளார்கள். இலங்கையில் சிங்கள மக்கள் சமாதானமாகவும், சகல சம்பத்துக்களுடனும் வாழுவதைக்கண்டு தமிழர்கள் பொருமைப் படுகிறார்கள். கொம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவரென்றாலும், திரு. சண்முகதாசன் தமிழரசுக் கட்சியின் சார்புடையவர். தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிவேலைகள் புரிந்து வருகிறது. இந்தச்சதிக்குச் சாதகமாகவே சண்முகதாசன் தமிழரசுக் கட்சியினரால் வேலைநிறுத்தம் ஒன்றை நடத்துவதற்குத் தூண்டிவிடப்பட்டிருக்கிறார். அத்தகைய சிங்களத் துரோகிகளின் சொற்களைக் கேட்டுக் கொண்டு சிங்களத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது பெரும் இனத் துரோகமாகும். ஆகவே வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விட்டு உடனடியாக வேலைக்குத் திரும்பி, நாட்டை வளப்படுத்த ஒற்றுமையாக உழைப்போம்".

இவ்வாறு ஒரு பெரும் வதந்தியை அரசாங்கத்தின் வால்கள் சில, வேலை நிறுத்தம் செய்த சிங்களத் தொழிலாளர்களிடையே பரப்பி விட்டன. இந்த வதந்தி பரவியதும் வேலை நிறுத்தம் பிசுபிசுத்து விட்டது.

*

மூதூர் தொகுதியிலுள்ள முஸ்லிம் மக்களுக்கும் தமிழர்களுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. நாளுக்கு நாள் மூதூர் தொகுதி சிங்கள மயமாகி வருவதையிட்டு மூதூர் இரண்டாவது எம். பி. ஜனுப் மஜீத் அரசாங்கக் கட்சியுடன் உள்ள தனது தொடர்புகளை வெட்டி விடக்கூடும் என்றும் பலத்த வதந்தி அடிபடுகிறது. அம்மானுக்கும் இத்தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அவர் பல விசாரணைகளை நடாத்தி வருகிறார்.

ஆளும் கட்சி பாராளுமன்றக் குழுவுக்குள் ஜனுப் மஜீதின் செல்வாக்குக் குறைந்து வருவதாகவும், அவருடைய குரல் செல்லாக் காசாகி வருவதாகவும் அம்மானுக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது.

தொடர்ந்து ஏற்பட்டு வரும் அவமதிப்பைப் பொறுக்கமாட்டாது, கட்சியை விட்டு வெளியேற ஜனுப் மஜீத் எண்ணியுள்ளாராம். அடுத்த பொதுத் தேர்தலில் யூ. என். பி. கட்சியின் ஆதரவுடன் தேர்தலில் குதிக்கவும் எண்ணியுள்ளாராம்.

## சேற்றில் முகம் புதைத்த செஞ்சட்டை

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளை சிங்களத் தேசியமயமாக்க வேண்டும் என்று உழைத்து கடைசியில் தாங்களே சேற்றில் முகங்களைப் புதைத்துக் கொண்ட செஞ்சட்டைப் பிற்போக்குவாதிகளின் திருவிளையாடல் அடுத்த வாரம் சந்தியில் இடம் பெறும்.

Dial 2739




ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்

ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களை

## ஒரே அணியில் திரட்ட வேண்டும்

## இது தான் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் புனித நோக்கம்

### பொதுச் செயலாளர் உரை

மலைநாட்டுத்தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவோம் என்ற கோஷத்துடன் மலைநாட்டில் எழுந்த எந்தச் சங்கமும் தொழிலாளர்களை ஸ்தாபனரீதியாகத் திரட்டி அவர்களின் அரசியல், பொருளாதார கோரிக்கைகளில் வெற்றிபெறத் தவறிவிட்டன என்பதை இந்நாட்டு மக்கள் எல்லோரும் நன்கு அறிவார்கள் மலைநாட்டுத் தொழிலாளர்களின் ஒற்றுமை குலைக்கப்பட்டு, சக்தி இழந்த நிலையில் இருப்பதை அறிந்து, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை ஒரே அணியில் திரட்டும் புனித நோக்கத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் கழகத்தை ஆரம்பித்துள்ளது. இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பிராந்திய காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பேசும் பொழுது, கழகப் பொதுச் செயலாளர் திரு. பி. எம். கிருஷ்ணசாமி கூறினார்.

கழகத் துணைத் தலைவர்களில் ஒருவராகிய திரு. ஆர்.எம். ராமையா இவ்விழாவில் தலைமை வகித்து, குத்துவிளக்கேற்றி, இந்து மத சம்பிரதாயப்படி இவ்விழாவைத் திறந்து வைத்தார்.

பொதுச் செயலாளர் திரு பி. எம். கிருஷ்ணசாமி மேலும் கூறியதாவது: வடகிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் எவ்வாறு ஒன்றுபட்டுள்ளனரோ அவ்வாறே மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்களும் அதே அணியில் ஒன்றுபட்டுவிட்டனர். இனி நமது இழந்த உரிமைகளைப் பெற்றே தீருவோம்.

திரு எஸ். கலியபெருமாள் பேசுகையில், 'இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மலைநாட்டில் பிரவேசித்துள்ளதை அருவருப்புடன் நோக்குகின்றனர் இதர தொழிற்சங்கவாதிகள். அவர்கள் கூறுவதெல்லாம் "தொழிலாளர்களின் ஒற்றுமை சிதைக்கப்படும்" என்பதே. இவ்வாறு கூறுபவர்கள் இதுவரை மலைநாட்டில் நுழைந்துள்ள பல்வேறு சங்கங்களைப் பற்றி வாய்மூடி மௌனியாய் ஏன் இருந்தனர் என்பதுதான் புதிராகவிருக்கிறது. வடகிழக்கு மாகாண மக்கள் உரிமைகளை இழந்து நிற்கின்றனர். இதே போல் நாமும் உரிமைகளையிழந்து நிற்கின்றோம். இந்த நிலையில் வடகிழக்கு மாகாண மக்களுடன் நாம் ஒன்றுபடவேண்டியது அவசரமும் அவசியமும் ஆகிறது' என்றார்.

தலைவர் பேசுகையில், "இலங்கைத் தமிழரசுக்கட்சி பலாத்காரத்தில் நம்பிக்கையற்றது. அகிம்சையை ஆயுதமாகக்கொண்டு போராடி வருகிறது. தமிழ் பேசும் மக்களின் இன்னல்களைப் போக்கவே இலங்கைத் தொழிலாளர்கழகம் மலைநாட்டிற்கு

(13-ம் பக்கம் பார்க்க)

## உரிமை பெற ஒன்றுபடுவீர்

### காரியாலய திறப்பு விழாவில் கழகப் பொதுச் செயலாளர்

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தொழிலாளர் கழகம் மலைநாட்டில் இயங்க ஆரம்பித்துள்ளதைக் கண்டு இதர தொழிற் சங்கவாதிகள் பீதியடைந்துள்ளனர். 'மலைநாட்டில் வசிக்கும் தொழிலாளப் பெரு மக்களின் இழந்த உரிமைகளை பெற்றெடுக்க வேண்டும்' என்ற நல்லெண்ணத்துடனேயே நாம் இலங்கைத் தொழிலாளர் கழகத்தை ஆரம்பித்துள்ளோம். எமது கொள்கை புனிதமானது. வேலைத் திட்டங்கள் ஸ்திரமானவை. மலைநாடு பூராவும் உள்ள தொழிலாளர்கள் எமது கொடியின் கீழ் திரளுவார்கள் என்ற பரிபூரண நம்பிக்கை நமக்குண்டு. மலைநாடெங்கும் கேந்திர ஸ்தானங்களில் எல்லாம் எமது கழகத்தின் அலுவலகங்களைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறோம். நமது வளர்ச்சியைக் கண்டு அரசாங்கம் பீதிகொள்வதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனல் சக தொழிற்சங்கவாதிகள் பீதி கொள்வது தான் நமக்குப் புரியவில்லை". இவ்வாறு 6-2-63 ம் திகதி மஸ்கெலியாவில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றும்போது கழகப் பொது செயலாளர் திரு.பி. எம். கிருஷ்ணசாமி கூறினர். திறப்பு விழா கூட்டத்திற்கு கழக துணைத் தலைவர் திரு.எஸ். நாராயணசாமி தலைமை வகித்தார்.

திரு.கிருஷ்ணசாமி மேலும் பேசுகையில் கூறியதாவது: மலைநாட்டு தொழிலாளர்கள் குடியுரிமை, மொழியுரிமை, வாக்குரிமை, தொழில் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளனர். இவைகளை பெற்றெடுப்பதற்கு எந்த அரசியல் கட்சியும், அல்லது தொழிற் சங்கங்களும் இது பரியந்தம் கவனம் செலுத்தவில்லை. தொழிலாளர் அன்றாட பிரச்சினைகளைக் கவனிப்பதன் மூலம் மட்டும் கடந்த 20 வருட காலமாக அவர்கள் காலத்தை ஓட்டிவிட்டனர்.

(13-ம் பக்கம் பார்க்க)



திரு. பி. எம். கிருஷ்ணசாமி


நிழல்கள்

? ? ? ?



கைவசமுள்ளது

மிகக் குறைந்த விலையில்

ருமேனியன் சிமிந்தி

(B. S. S. 1958க்கு சமதையானது)

திருகோணமலையிலுள்ள பண்டகசாலையிலிருந்து டெலிவரி கொடுக்கப்படும்.

இறக்குமதி செய்யப்பட்ட

அஸ்பெஸ்டஸ் தகடுகள்

(சாதாரணத் தகடுகளும், நெளிவுத் தகடுகளும்)

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட

முட்கம்பிகள் G 14

மற்றும்:—

எஸ்லான்டர் செய்கை முறையுடன்;
பூரண செம்புத்தகடு இணைக்கப்பெற்று
புத்தம் புதிய

மீன்பிடிப் படகுகள்

விலை ரூ. 8000/-

"கோன்டெக்ஸ்-10"

(கையால் இயக்கும் கணக்கிடும் கருவிகள்)
மற்றும் விபரங்களுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்:-

ஜபர்ஜி பிரதர்ஸ்,

161, குமார வீதி,
கொழும்பு-11.

தொலைபேசி : 78501.





## பாட்டாளித் தலைவனே!

## பறந்தனையோ எம்மை விட்டு!

மலைநாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் ஒளி விட்டுக் கொண்டிருந்த மாமணி மறைந்து விட்டது!

பணி பணி என்று பாடுபட்டுக் கொண்டிருந்த உருவம் மறைந்து விட்டது!

கண்ணிலே கண்ணாடி, ஒரு வேட்டி, ஒரு சட்டை, இவற்றுடன் ஓடியாடித் திரிந்த உருவம் ஓய்ந்துவிட்டது!!

கோவை-மகேசன்

ஆம், ராஜலிங்கம் மறைந்து விட்டார்.

நம்பவே முடியவில்லை!

பாட்டாளி மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்தவர் மறைந்துவிட்டார்!

தாயைப் பிரிந்த தனயன் நிலையில் தவிக்கிறது மலையகம்!

பல நூறு ஆண்டுகட்கு முன், பாடுபட ஈழம் வந்து, உழைப்பை யீந்து விட்டு, உரிமையிழந்து தவித்தது தமிழரில் ஒரு கூட்டம்!

அவர்கள் [illegible] ணிரும் செந்நீரும்! [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)


பிரச்சினை தீர வழி

காதல்—கல்யாணப் பிரச்சினையா?
கணவன்—மனைவி பிரச்சினையா?
குடும்பப் பிரச்சினையா?

அல்லது

கிரகம், தோஷம், பில்லி, சூனியம், திருஷ்டி
முதலியன பிடித்துள்ளனவா?

கவலைப்பட, தீர்கள்

உங்கள் கஷ்டங்களை அறவே நீக்கி, எதிர்பார்க்கப்படும் பலனை மந்திர சக்தியாலும், தெய்வ பலத்தாலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விபரங்களுக்கு எழுதவும், அல்லது நேரில் வந்து சந்திக்கவும்

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட
மந்திராச்சாரி

பீ. எம். திஸாநாயக,

(நான்கு தேவாலயங்களின் பிரதம தர்மகர்த்தா)

371, டாம் வீதி, கொழும்பு-12.

அருத எண்ணை அலுவலகம்
கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உரிமையின்றேல் ஒற்றுமை சீர்குலையும்

# ஒன்றுபட்ட இலங்கை காண கூட்டாட்சி மலர வேண்டும்

## தமிழரசு வாலிபர் மாநாட்டில் தலைமைப் பேருரை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் கையில் (1) தமிழ்ப் பிரதேசம்—தமிழ் பேசும் மக்களுடைய நில உரிமை-திட்டமிட்ட அரசாங்க உதவி பெற்ற சிங்களக் குடியேற்றத்தால் பறிபோனது. (2) 10 லட்சம் தமிழ் மக்களின் குடியுரிமையும், பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் பறிபோனது. (3) இதனால் மொழியுரிமை பறிபோவதற்கேற்றதாக பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களுடைய பலம் பறிபோனது. இந்த நிலையில்தான் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற மந்திரம் ஓதுவோரும் ஒத்துழைப்புத் தந்திரம் கையாளுவோரும் இல்லாமல் அறவே அக்கட்சிகள் ஒழிந்தன. திரண்டு நின்ற மக்கள் சக்தி மேலும் வட கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உருவாக்கி, இன்று மலைநாட்டில் வசிக்கும் பத்து லட்சம் மக்களும் சேர்ந்து ஒற்றுமையாகும் பெருமுயற்சியாகி, இலங்கை தமிழரசுக் கட்சியாகக் காட்சியளிக்கிறது.

### இடதுசாரிகளின் அரசியல் சித்தாந்தம்

இடதுசாரிக் கட்சிகள் வளர்த்த அரசியலைப் பற்றி ஒரு குறிப்பு சொல்ல வேண்டும்.

நாற்பது ஆண்டுகளாக இடதுசாரி இயக்கம் படித்த இலங்கையர் (சிங்களவர், தமிழர் இதர இனத்தவர்கள் உள்பட) அரசியலை நடத்திவந்தனர். இலங்கையர் ஒரு தேசிய இனம், இலங்கை ஒரு நாடு என்ற இலட்சியத்தை இடதுசாரிகள் பின்பற்றி தமிழ் பேசும் மக்களுக்கும் பல வழியிலும் சம உரிமை சம வாய்ப்பு என்றதை ஏற்று வலியுறுத்தினர். ஆனால் கொம்யூனிஸ்ட் கட்சி, இலட்சியத்தைக் கைவிட்டு சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைத்து அழிந்தது. சம சமாசக் கட்சியும் சில துறைகளில் சிறி லங்கா சுதந்திரக்கட்சியுடன் ஒத்துழைத்ததாலும், அக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வளர்த்த சிங்கள வகுப்புவாதத்தை எதிர்க்கும் வல்லமையற்றுக் குற்றுயிராய் ஒழிந்தது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி வளர்க்கும் அரசியல் கொள்கையும் நடவடிக்கையும் பற்றி பிரித்து சொல்ல வேண்டும். இதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய அமைப்புத் திட்டத்தில் கூறப்படும் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

### விதி 2 (அ)

நோக்கம்: "ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக சுயநிர்ணய உரிமைக் கொள்கைப் படி ஓர் சுயாட்சித் தமிழரசும், ஓர் சுயாட்சி முஸ்லிம் அரசும் நிறுவி இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுடைய அரசியல், பொருளாதார, கலாச்சார விடுதலையைக் காண்பதே இக் கட்சியின் நோக்கமாகும்.

### விதி 2 (ஆ)

அடிப்படைக் கொள்கைகள்: இணைக்கப்படும் ஒவ்வொரு அரசிலும் வாழும் சிறுபான்மையோருக்கு அவர்களுடைய மத, மொழி உரிமைகளுக்கும் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கும் பூரணமான உத்தரவாதம் அளிக்கப்படும்.

இக் கட்சி கீழ்க்காணும் கொள்கைகளுக்காக உழைக்கும்:

1. இலங்கையில் பிறந்த அல்லது இலங்கையைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் எல்லாருக்கும் பூரண பிரஜா உரிமை உண்டென நிலைநாட்டல்.

2. சமூக உயர்வு—தாழ்வுகளையும், அநீதிகளையும், குறிப்பாக ஒரு பகுதி மக்களிடையே நிலவும் தீண்டாமையையும் களைந்து இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களை ஒன்று படுத்திப் புத்துயிர் அளித்தல்.

3. இனம், சாதி, சமயம், ஆண்—பெண் என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது கல்வி, தொழில், மற்றும் தேசிய நலன்கள் அனைத்திலும் சம சந்தர்ப்பம் அளிக்கும் சோஷலிஸ பொருளாதார முறையினை ஏற்படுத்தல்.

4. இணைப்பாட்சியின் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் கருதிச் சிங்கள மக்களோடு நல்லெண்ணமும் நட்புறவும் வளரச் செய்தல்.

### முஸ்லிம்களும் அரசியலும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நோக்கம், அடிப்படைக் கொள்கை, கோரிக்கள் முதலியவற்றைப் பற்றி நான் இங்கு முதலிலிருந்து இறுதிவரை எடுத்துக் கூற அவசியமில்லை. ஆனால் முஸ்லிம் அரசு என்ற கருத்தினை நாம் ஆதரிக்கிறோம். 1956ம் ஆண்டு திருமலை மகாநாட்டில் நிறைவேறிய திருத்தப் பிரேரணையிலும் இன்று வகுக்கப்பெற்ற புதிய நோக்கம் முன்னேற்றமும் திட்டமும் உடையது. சரித்திரம் தெரிந்த காலம் முதல் சிறு தொடர்பாய் இருந்து. ஒரு சிறுபான்மையினராய் வளர்ந்து இன்று ஒரு இனமாய் நிமிர்ந்து வாழும் இலட்சியத்தை முஸ்லிம்களுக்கு இக் கருத்து வலியுறுத்துகிறது.

### முஸ்லிம்களுக்கும் தனித்தன்மை வேண்டும்

1915ம் ஆண்டுக் கலவரத்தில் சிங்கள இனத்தவரால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், இதுவரை காலம் ஒதுக்கப்பட்டவர்கள், இன்று உரிமைகளைச் சலுகை என்ற பெயரில் ஏற்று வாழ்வது அவர்கள் தன் மானத்திற்கோ, அரசியல் முன்னேற்றத்திற்கோ மற்ற மக்களோடு எய்த வேண்டிய ஒற்றுமைக்கோ உகந்ததன்று. சிங்கள அரசாங்கமும் சலுகைகளை வழங்கிக் களைத்து விட்டது. முஸ்லிம் மக்களும் தாங்கள் கதியற்ற சிறுபான்மையராய் என்றும் மற்றவர் தயவில் வாழ்ந்து—சலுகை பெறுவது முன்னேற்றப் பாதை அன்று, என்ற அரசியல் விழிப்பு எய்தி வருகின்றனர். சென்ற சத்தியாக்கிரக இயக்கத்தில் முஸ்லிம் மக்கள் கொண்ட பங்கு இதனை வலியுறுத்தும். ஆகவே தமிழ் பேசும் இனத்தின் ஒரு பகுதியினரான முஸ்லிம் மக்கள் சிறுபான்மையராய் ஒரு சமூகமாய், ஒரு இனமாய் வளர்ந்து தமக்கென ஒரு நிலமும், பிராந்தியப் பரப்பும் தாயகமாகக் கொண்டு அரசியல் வாழ்வினில் முன்னேறுவதற்காய அரசியல் திட்டத்தை நாம் வரவேற்கிறோம்.

### போராட்டங்களின் எதிரொலி

1956 முதல் காலிமுகச் சத்தியாக்கிரகம், திருமலை யாத்திரை, சுதந்திர தினப் பகிஷ்காரம், முதலாம் சிறீ எதிர்ப்பு, இரண்டாம் சிறீ எதிர்ப்பு, மறியல் சத்தியாக்கிரகம், தபாற் சேவைச் சட்ட மறுப்பு என்று பல் இயக்கங்கள் இதுவரை காலம் நடத்தப்பெற்றன. இவற்றிற்குச் சிங்கள கட்சி [illegible] என்ன? சத்தியாக்கிர இயக்கம் நடத்துவோம் என்று சொல்லவே, பிரதமர் பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ், சிறி லங்கா சுதந்திரக்கட்சி, ஒற்றுமையும் உரிமையும் வளர்க்கும் அத்திவாரமாக ஒரு ஒப்பந்தத்தைத் துணிந்து செய்தது. இதனை ஐக்கிய தேசியக்கட்சி பிரசாரத்தாலும், மற்றும் பல வழிகளாலும் முறியடித்தது. இதற்குப் பின் அவ்விரு கட்சிகளுக்கும் ஒப்பந்தம் செய்து பிரச்சினை தீர்க்கும் துணிவு வரவில்லை. பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை முறித்து சிங்களவரை மீட்டோம் என்று வகுப்புவாத வெற்றிப் பிரசாரம் செய்த ஐக்கிய தேசியக்கட்சி தன்னையே காட்டிக்கொண்டு 1960 ல் தமிழரசுக் கட்சியோடு ஒப்பந்தம் செய்யத் துணிவில்லாமல், கிடைத்த நாடாளும் வாய்ப்பினையே இழந்துள்ளது. சுதந்திரக் கட்சிக்கும் இரு பக்கமான பகிரங்க ஒப்பந்தம் செய்யத் துணிவில்லாதிருந்தும், பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை அமுல் நடத்துவோம் என்று ஒரு பக்க நோக்கத்தை இரகசியமாக வெளிப்படுத்தி தமிழரசுக் கட்சியின் உதவி பெற்று ஆட்சிபீடத்தில் அமர்ந்து கொண்டனர்.

### எங்கள் பிரச்சினை தீருமா?

இந்த நிலையில் இக்கட்சிகள் ஏதும் தனியே நின்று எங்கள் பிரச்சினையைத் தீர்க்குமா என்பது சந்தேகம்தான். தம்முள் நடக்கும் அரசியல் அதிகாரப் போட்டியில் வகுப்புவாதத்தைத் தேர்தல் ஆயுதமாகப் பாவிக்கும் நிலையில், இச் சந்தேகம் வலிமையுடையதே. ஆனால் ஒரு கட்சிக்கு அமோகமான ஆதரவு சிங்கள மக்கள் கொடுத்தால், அல்லது அதிகார பீடத்தில் அமர்த்துவதற்கு வேண்டியதாய் நிர்ப்பந்திக்கப்பட்டால், அல்லது நாட்டை ஒற்றுமைப்படுத்தினேம் என்ற அரசியல் வெற்றி ஒரு பயனைத் தந்தால், அப்போது கட்சிரீதியில் எங்கள் பிரச்சினை ஒரு சிறிது தீர்க்கப்படலாம்.

எதிர்வரும் சித்திரையில் சத்தியாக்கிரக இயக்கம் மீண்டும் தொடங்கவும், மலைநாட்டுத் தமிழரைச் சேர்த்து வட-கிழக்குத் தமிழ் பேசும் மக்களோடு ஒன்றுபடுத்தி ஒரு இனமாய் ஒரு கொடியின் கீழ் இயங்கும் நோக்கமும் இதன் பெறுபேறுகள்.

### புது முயற்சி பாராட்டற்குரியது

சென்ற சத்தியாக்கிரகத்தின்போது மலைநாட்டுத் தமிழருக்கு உரிமைப் போராட்டத்துக்குக் கிடைத்த வாய்ப்பை, அவர்களை வழி நடத்திய சில தலைவர்கள் தங்கள் சுய நலம் கருதித் துரோகம் செய்துவிட்டனர். இந்நிலையில் மலை நாட்டுத் தமிழ் மக்களை மறதத தமிழ் பேசும் மக்களோடு ஒன்று படுத்தித் தமிழ் பேசும்

(13-ம் பக்கம் பார்க்க)

தொலைபேசி 693.
HIRATA
தந்தி 'சேகரன்'
உறுதியான
நைலோன், தெருலோன்
நூல்களும்,
வலைகளும்

கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாண[ம்]

## மக்கள் குரல்

### வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் குழப்பம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் துணைத்தலைமை ஆசிரியரை, எவ்வித காரணமுமின்றி வட பகுதி உதவி வித்தியாதிபதி மாற்றம் செய்துள்ளமையின் விளைவாக, பெற்றோர், பழைய மாணவர், பொது சனம் யாவரும் அதனை எதிர்த்துக் கல்வி இலாகாவுக்கு ஓர் மகஜரை அனுப்பத் தீர்மானித்துள்ளனர். இதற்கென ஓர் குழுவும் உருவாக்கப்பட்டு, மாணவர்களுக்கு இன்றியமையாதவராக விளங்கும் துணை அதிபரின் மாற்றலுக்குத் தீவிர கண்டனம் தெரிவிக்கும் ஆயிரக்கணக்கான கையொப்பங்களையும் ஏற்கனவே சேகரித்து விட்டது.

ஆனால், கையொப்பமிட்டவர்களையும், கையொப்பம் சேகரிப்பவர்களையும் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரும், ஒரு சில உபாத்தியாயர்களுமாக மிரட்டிக் கொண்டு திரிகிறார்களாம். இது பொது சனத்திடையே பரபரப்பை ஊட்டியுள்ளது. தலைமை ஆசிரியர், தம்மைப் பற்றிப் பொது மக்கள் கல்வி இலாகாவுக்கு அனுப்பியிருந்த சில புகார்களை மழுப்ப, அப்பாவிமக்களிடம் தப்பான கருத்துகளைத் தெரிவித்தும், மாற்றுக் கையொப்பங்கள் சேகரித்துப் வருகிறாராம். இதனால் மாணவரிடையே அமைதியின்மையும், பெற்றோரிடையே குழப்பமும் ஏற்பட்டுள்ளன.

அரசாங்க உத்தியோகத்தர்கள் இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் கல்வி மந்திரி அவர்கள் பொறுத்துக் கொள்வாரோ?

—குழப்பமுற்ற பெற்றோர் ஒருவர்
சித்தங்கேணி

### 'தடுப்புக்காவலில் நாம்'

திரு. புதுமைலோலன் அவர்கள் தடுப்புக்காவல் முகாமிலிருந்து அன்புமகளுக்கு எழுதிய கடித வரிசையை சுமார் அரை ஆண்டு காலமாக எமக்கு அளித்து வந்தமைக்கு சுதந்திரனுக்கு நன்றி செலுத்துகிறேன். தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் 1961/62-ம் ஆண்டுக்கட்டத்தைப் பற்றி இதுவரை பொது மக்களுக்குத் தெரிந்திராத விபரங்களை அளித்தும், அறப்போர் வீரர்களை அறிமுகஞ் செய்தும், அழகு தமிழில் வீரம் செறிந்த நடையில் வெளிவந்த அக் கடிதங்கள் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதியாகும். எனவே புத்தகவடிவில் அவற்றை வெளியிட இருப்பதாகத் திரு. புதுமைலோலன் அவர்கள் அறிவித்ததை வரவேற்கிறேன். ஒவ்வொரு தமிழ் பேசும் மகனிடமும் இருக்கவேண்டிய நூலாக அது திகழும் என்பது திண்ணம்.

—முத்துச்சரம்,
வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

## அரங்கம்—2

1603-ல் ஆங்கில ஆட்சியினர் அயர்நாட்டின்வட பகுதியில் ஐந்துலட்சம் ஏக்கர்நிலத்தில் ஸ்கொத்லாந்தைசசேர்ந்த புரட்டஸ்தாந்து மதத்தவர்களைக்குடியேற்றினர். 1613-ல் டப்ளினில் பாராளுமன்றம் ஒன்றும் அமைக்கப்பட்டது. புரட்டஸ்தாந்து மதத்தவர்களுள் அரசாங்கத்தின் கையாட்கள் சிலரே இதில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

இதைத் தொடர்ந்து ஏகாதிபத்திய வர்க்கத்தினரின் இரத்தத்தில் ஊறிய நரித்தந்திரமான பிரித்தாளும் கொள்கையை ஆங்கில ஆட்சியினரும் 1632-ல் அயர் நாட்டில் கையாளத் தொடங்கினர். இதன் காரணமாக அங்கு வாழ்ந்த கத்தோலிக்க மக்களும் புரட்டஸ்தாந்து மதத்தைச்சார்ந்தவர்களும் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டனர். இதனல் ஆட்சியினர் கத்தோலிக்க மக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்தனர். அடக்குமுறையின் அக்கிரமங்களைப் பொறுக்க முடியாமல் 1641-ல் ஆட்சியினருக்கு எதிராக நாடெங்கும் கத்தோலிக்க மக்கள் பொங்கி எழுந்தனர். வட அயர் நாட்டில் குடியேற்றப்பட்டிருந்த புரட்டஸ்தாந்து மதத்தினரைச் சாகடித்தனர். ஆனல் பழிக்குப் பழி வாங்குவதற்காக ஆங்கில ஆட்சி, பிற்காலத்தில் 'கசாப்புக் கடைக்காரன்' என அழைக்கப்பட்ட ஒலிவர் குரொம்வெல் தலைமையில் பட்டாளத்தினரை அனுப்பியது. அப்பட்டாளத்தினருக்கு 28-2-1642-ல் வழங்கப்பட்ட அதிகாரங்கள்—

"கலகக்காரர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள், அவர்களுக்கு உதவுபவர்கள் ஆகியோரை எப்படியாவது அடித்து, நொருக்கி, குதறி, வெட்டிக் கொல்லுங்கள். கலகக்காரர்கள் வதியும் வீடுகளையும் சிற்றூர்களையும் பேரூர்களையும் கொளுத்தி நிர்மூலமாக்குங்கள். பயிர்களை அழித்து நாசமாக்குங்கள். ஆயுதந் தாங்கக்கூடிய எந்த ஆண்மகனையும் உயிருடன் விட்டு வைக்காதீர்கள்".

மேற்கூறிய அதிகாரங்களைப் பக்கபலமாகக் கொண்டு பட்டாளத்தினர் ட்ரொக்கெடா என்னும் ஊரில் வாழ்ந்த ஆண், பெண், சிறுவர், முதியோர் ஆகிய 3,000 பேர்களையும் துப்பாக்கியினல் சுட்டுத் தள்ளினர்கள். மக்கள் வாழ்ந்த ஊர் மயானமாகியது! ஆனல் 3,000 பிணங்களைப் பார்த்தும் திருப்தி கொண்டதா அதிகார வர்க்கம்? இல்லவே இல்லை.

30,000 அயர்நாட்டுப் போர் வீரர்களை அந்நிய நாடுகளுக்கு அனுப்பியது.

ஆயிரக்கணக்கான மக்களை அடிமைகளாக மேற்கிந்திய தீவுகளுக்கு அனுப்பியது.

கத்தோலிக்கரின் காணிகளைப்பறிமுதல் செய்து ஆங்கிலேயருக்கு விநியோகித்தது.

அயர் மொழி, இசை, இலக்கியம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்குத் தடை விதித்தது.

பாராளுமன்றத்தில் கத்தோலிக்கப் பிரதிநிதித்துவத்தைத்தடுத்தது.

வாக்குரிமையைப் பறித்தது தேவாலயங்களில் சுதந்திரமாகப்பிரார்த்தனை செய்வதைக் கட்டுப்படுத்தியது.

கத்தோலிக்கருக்குக் கல்வி அறிவை மறுத்தது.

பிள்ளைகளைக் கத்தோலிக்கப் பெற்ருேர்கள் பராமரிப்பதைத் தடை செய்தது.

குறிப்பிட்ட தொழில்களைக் கத்தோலிக்கர் பெறுவதை நிறுத்தியது.

அரசாங்க அலுவலகங்களில் கத்தோலிக்கர் பணிபுரிவதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இருந்தும், இவ்வளவு அக்கிரமங்களும் மக்களின் சுதந்திர, தன்மான உணர்ச்சிகளை உயர்த்தியதே அல்லாமல் தாழ்த்தவில்லை.

## அரங்கம்—3

### புரட்சி மயம்

கத்தோலிக்கருக்கு அதிகார வர்க்கத்தினர் செய்யும் அட்டூழியங்களைக் கண்டு கைலிக் இனத்தைச் சேர்ந்த புரட்டஸ்தாந்து மதத்தவர் சிலர், ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட முற்பட்டனர். ஓர் இயக்கத்தை உருவாக்கித் தொண்டர்களைத் திரட்டினர். பிரான்ஸ் நாட்டிடம் ஆயுத உதவிகோரினர். பிரான்ஸும் அதற்கு இயைந்து ஆயுதங்களைக் கப்பலில் அனுப்பியது. காலநிலை அனுகூலமாயிருக்காததினல் கப்பல் அயர்நாட்டின் துறைமுகத்தை அடையவில்லை. அவ்வேளையில் புரட்சியாளர்கள் செய்த ஆயத்தங்களைப் பற்றி துரோகிகள் அரசாங்கத்திற்கு அறிவித்ததினல், தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆயினும் திட்டமிடப்பட்டபடி 1798-ல் புரட்சி நடைபெற்றது.

இராணுவம் பேயாட்டம் ஆடியது தலைவர்கள் சிலர் ஆயுட்காலத் தண்டனை பெற்றனர். சிலர் தூக்கிலிடப்பட்டனர். புரட்சியை நொண்டிச் சாட்டாக வைத்துக் கொண்டு 1800-ம் ஆண்டில் அயர்நாட்டின் பாராளுமன்றத்தில், அதே பாராளுமன்றத்தை முற்ருக ஒழிக்கும் மசோதா லஞ்சத்தின் பலத்தால் நிறைவேற்றப்பட்டது. பணத்திற்காக இனத்தை விற்கும் படுபாவிகள் எந்த நாட்டிலும் இருக்கத்தானே செய்கிருர்கள்! இம்மசோதா '1800-ம் ஆண்டின் இணைப்பு மசோதா' என்று அழைக்கப்பட்டது. இப்புதிய சட்டம், அயர் நாட்டை முழுக்க முழுக்க இங்கிலாந்திலிருந்தே பரிபாலிக்க வழிவகுத்தது.

இணைப்பு மசோதாவைத் தொடர்ந்து பிரித்தானியப் பிரதிநிதிகள் சபையில், மொத்த உறுப்பினர் தொகையில் ஆறிலொன்றிலும் குறைந்த தொகையினரான 100 அயர்நாட்டுப் பிரதிநிதிகளே இடம் பெற்றனர்.

எல்லாவித உரிமைகளும் பறிக்கப்பட்டு, எஞ்சியிருந்த ஒரேயொரு உரிமையான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் படிப்படியாக ஒழிக்க ஆங்கில ஆட்சியினர் முற்பட்டதை உணர்ந்து, மதத்தால் புரட்டஸ்தாந்தவர்களாய் இருந்தும், இனத்தால் கைலிக் இனத்தவர் என்ற உணர்ச்சி ஏற்பட்டதால், புரட்டஸ்தாந்து இளைஞர்கள் சிலர் 1803-ம் ஆண்டில் ரொபட் எமட்டின் தலைமையில் தாய் நாட்டின் விடுதலைக்காகப் புரட்சி செய்யத் தயார் செய்தனர். ஆனல் எந்த இனத்திலேயும் காணப்படும் காட்டிக் கொடுக்கும் அடிவருடிகளினுல் ஆட்சியினருக்குச் செய்தி எட்டியது. புரட்சி நடைபெறுவதற்கு முன்பாகவே தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 17 பேர் தூக்கு மரத்தை முத்தமிட்டார்கள்! புரட்சிக் குழுவின் தலைவரான ரொபட் எமட் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டு, அதன்பின் சிரசசேதமும்செய்யப்பட்டார். தூக்கில் இடப்படுவதற்கு முன்னர், சிரித்த வதனத்துடனும் விரிந்த மார்புடனும் இரும்புச் சங்கிலியால் இணைத்த கரங்களுடனும் தூக்கு மேடையில் நின்று கொண்டே ரொபட் எமட் தன் நாட்டு மக்களுக்கு இறுதியாகக் கூறுகிருர்:

"என் தாய் நாடே! எனது கல்லறையில் எழுதவேண்டியவை எவையாவது இருப்பின், சுதந்திர நாடுகளுள் ஒன்ருக நீ என்று திகழுகின்ருயோ, அன்றுதான்-அதற்கு முன்னரல்ல, அவை எழுதப்படட்டும்".

எமட் தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து நாடெங்கும் மாபெரும்கொந்தளிப்பு ஏற்படடது. ஆட்சியினர்

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

பருண்டனர். அதிகாரிகள் அஞ்சினர். மக்கள் வரி கொடுக்க மறுத்தார்கள். இதன் எதிரொலி பாராளுமன்றம் வரையும் சென்றது. நிலைமையை ஓரளவு சமாளிப்பதற்காகக் கத்தோலிக்கர் மீது விதிக்கப்பட்ட தடைகள் சிலவற்றை நீக்க ஆட்சி முற்பட்டது.

உதாரணமாக, நியந்தனைகளுடன் கூடிய வாக்குரிமை கத்தோலிக்கருக்கு அளிக்கப்பட்டது. இத்தடை நீக்கங்கள் சில கத்தோலிக்க மத்திய வகுப்பினரிடையே மறைந்திருந்த விடுதலை உணர்ச்சியைச் செயல் முறைக்குக் கொண்டுவர ஏதுவாக இருந்தன. ஆனல் உதித்தெழும் இவ்விடுதலை உணர்ச்சியைக் கண்ட ஆங்கில ஆட்சி அதை அயர்நாட்டவர் சிலரைக் கொண்டே முளையிலே கிள்ளிவிட ஒரு திட்டம் திட்டியது! அத்திட்டம்தான் என்ன?

## அரங்கம்—4

### இனமாற்றம்

ஆங்கிலப் பட்டாளம் டப்ளினிலும் மற்றும் முக்கிய பட்டணங்களிலும் பாசறைகள் அமைத்துத் தங்கியிருந்தது. ஆனல் இப்பட்டாளம் போதாதென்று, அயர்நாட்டவர் சிலரை 'ரோயல் ஐரிஷ் கொண்ஸ்ரபியூலறி' என்று அழைக்கப்படும் பொலிஸ் அணியில் சேர்த்தார்கள். இவ்வணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அனைவருமே அயர்நாட்டவர்கள் தான்! இவர்கள் இராணுவத்திற்குரிய சகல பயிற்சிகளூர் அளிக்கப் பெற்று, ஆயுத பாணிகளாக நாட்டிலுள்ள பேரூர், சிற்றூர் அனைத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். இவர்களின் பிரதான கடமை, அயர் நாட்டு அரசியல்வாதிகளைப் பற்றியும் ஆங்கில அரசாங்கத்திற்கெதிரானவர்கள் என்ற சந்தேகத்திற்குரியவர்களைப் பற்றியும் டப்ளின் மாளிகைக்கு அறிவிப்பதே. (இப்பொலீஸாரை ஆர். ஐ. பொலீஸார் என்றுதான் இனிமேல் எமது கட்டுரையில் குறிப்பிடுவோம் என்பதைக் கவனித்துக் கொள்ளவும்.) [illegible] ஆட்சியினர் அயர்நாட்டில் புதுமுறையான வரித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். இவ்வரித் திட்டம், இங்கிலாந்திலிருக்கும் காணிச் சொந்தக்காரர்கள் அறவிடும் வாடகையினல் ஏறகவே பாதிக்கப்பட்டிருந்த அயர்நாட்டு விவசாயிகளைத் தரித்திர நாராயணர்களாக்கியது. நாடு வறுமையினுலும் பிணியினுலும் வதங்கியது. மக்கள் ஒரு வேளைக் கஞ்சிக்கும் வழியில்லாமல் தவித்தார்கள்! தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுத்த பாலகர்களுக்கு ஊட்டுவதற்குத் தாய்ப்பாலில்லாமல் கண்ணீர் விட்டார்கள்!

ஐயோ, ஆண்ட இனமான கைலிக் இனம், சொந்தநாட்டிலேயே அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட குடியேற்றத்தினல் சிறுபான்மையினராக்கப்பட்டு, நிலமிழந்து, வாக்குரிமை இழந்து, மொழி இழந்து, பண்பாட்டை இழந்து, அரசாங்க உத்தியோகங்களுக்கு அருகதையற்று, மத உரிமையற்று, கல்வி வசதியற்று, அனுதைகளாக, ஆதரிப்பார் அற்று, நாடற்ற இனமாகநலிவுற்று, நடைப்பிணங்களாக வாழ்வதுமல்லாமல்-பெற்ற பாலகர்களுக்கே ஊட்டுவதற்குத் தாய்ப்பாலில்லாமல் தவிக்க அவ்வினம் செய்த கொடுமைதான் என்னே!

கத்தோலிக்கரான, வழக்கறிஞர் டானியல் ஒகொனல் 1823-ம் ஆண்டு தொடக்கம் கத்தோலிக்க இளைஞர்களை ஒரு கழகத்தில் சேர்த்து 1800-ம் ஆண்டின் இணைப்பு மசோதாவை நீக்குமாறு கோரி, பட்டி தொட்டி எங்கும் சிற்றூர் பேரூர் எங்கும் ஊண் உறக்கமின்றிப் பிரசாரம் செய்தார். பயங்கரமான ஆர்ப்பாட்டங்களை முன்னின்று நடாத்தினர். மக்கள் அலைஅலையாக பின் தொடர்ந்தார்கள். காட்டிக் கொடுப்பவர்கள் மீது காறி உமிழ்ந்தார்கள்.

இவற்றைக் கண்ணுற்ற அரசாங்கம் கத்தோலிக்கருக்கு இன்னும் சில சலுகைகளை அளிக்க முன் வந்தது. இவற்றுள் ஒன்று மறுக்கப்பட்ட [illegible] திரும்பவும் அளித்தமை. இதைத் தொடர்ந்து கிளயா மாவட்டப் பிரதிநிதியாக முதன் முறையாக ஒரு கத்தோலிக்கர்—அதுவும் ஒகொனல் இங்கிலாந்திலிருந்த பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஒகொனலின் தீவிர பிரசாரத்தினல் அயர் மக்களிடையே இன உணர்ச்சியும் நாட்டுப்பற்றும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கின. அரசாங்கம் அஞ்சியது; ஆழ்ந்து யோசித்தது; ஆங்கில 'அறிஞர்'களை அணுகியது;ஆலோசனை கேட்டது. ஈற்றில், தாம் ஓர் இனம் என்ற அயர் மக்களுடைய உணர்ச்சியை அடக்குவதற்கும் அழிப்பதற்கும் ஏற்ற திட்டம் தேசியக் கல்விதான் என்ற முடிவுக்கு வந்தது!

அயர்நாட்டுக் கல்லூரிகளில் கட்டாயக் கல்வி முறையை நடைமுறைக்கு அரசாங்கம் கொண்டு வந்தது. அயர் மொழி, இலக்கியம், சரித்திரம், நாடோடிக் கதைகள் ஆகியவற்றை அயர் சிறுர்களுக்குப் போதிப்பதைத் தடைசெய்தது வருங்கால அயர் சந்ததியினர் ஆங்கில மக்களாக மாற வேண்டும் என்ற குறிக்கோளை வைத்துக் கொண்டு தான் இவைகள் செய்யப்பட்டன. இன்னும் எத்தனையோ திட்டங்கள் மிகவும் நுணுக்கமாகத் திட்டப்பட்டுச் செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்டன. ஆங்கில மொழி, ஆங்கிலப் பண்பாடு, ஆங்கிலச் சரித்திரம் ஆகியவற்றைத்தான் தங்கள் மூதாதையர் விட்டுச் சென்ற பரம்பரைச் சொத்தாக அயர் மாணவர்கள் கருதவும் இங்கிலாந்தைத் தங்கள் தாய்நாடாக அவர்கள் எண்ணும் விதமாகவும் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு, போதிக்கப்பட்டன.

ஆயினும், எந்த நோக்கத்துடன் ஆங்கிலேயர் இக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்களோ, அந்த நோக்கம் அயர் மக்களின் இரத்தத்தில் ஊறியிருந்த இன உணர்ச்சி காரணமாக எள்ளளவும் வெற்றி கொள்ளவில்லை.

காட்டுத் தீ போல் எழுந்த இன உணர்ச்சியை அடக்கப் பல வழிகளையும் கையாண்டு தோல்வியுற்ற ஆங்கில ஏகாதிபத்தியம் அயர் மக்களை மீண்டும் பட்டினியால் கொல்ல முனைந்தது. நெற்றி

(9-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நீர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து சதி, சோம்பல் மேல் காங், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் திரும். சில்காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.

வி. பீ. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நீர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 பெப்ரவரி மாதம் 17-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.

தொலை பேசி எண் : 3411 த. பெ. 1103


## ஆசிரியர்களின் கிளர்ச்சி

கல்விப் பிரச்சினையில் பெரும் நெருக்கடி. அதைவிடப் பெரிய நெருக்கடி தமிழ் பேசும் ஆசிரியர்கள் பிரச்சினையில்.

அவர்கள் சிங்களம் படிக்க மறுத்தனர். அதனால் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது. எதிர்கால சந்ததியை உருவாக்கும் மகத்தான பொறுப்பை மேற் கொண்டவர்களல்லவா ஆசிரியர்கள். அவர்கள் தன்மானம் மிகுந்தவர்கள். எதேச்சாதிகார உத்தரவுகளுக்கு அடி பணிய அவர்கள் தயாரில்லை. எனவே, கட்டாயச் சிங்களம் வேண்டாம் என முழங்கினர்.

அத்தோடு ஆசிரியர்கள் நின்று விடவில்லை. சம்பள உயர்வை நிறுத்த வேண்டாம் என்று கிளர்ச்சியும் செய்தனர். ஆசிரியர் சங்கங்கள் ஏகோபித்து குரலெழுப்பின. ஆட்சியாளர் மீது கண்டனக் கணைகளை வீசின.

இறுதியில் அரசாங்கம் பணிந்தது. கிளர்ச்சி ஓரளவு வெற்றி கண்டது. நிறுத்தப்பட்ட சம்பளத்தை வழங்குமாறு கட்டளை பிறந்துள்ளது.

சிங்களம் படிக்காத தமிழாசிரியர்களின் சம்பள உயர்வை முற்றாக நிறுத்துங்கள் என்று ஆட்சியாளர்களுக்கு யோசனை கூறினராம வட பகுதியில் ஒரு கல்வி அதிகாரி. எட்டப்பர் கூட்டத்தைச் சேர்ந்த இந்த அதிகாரி ஆசிரியர்களிடம் வாங்கிய "சூடு" கொஞ்சமன்று. அவரது துரோக முயற்சிகள் தூள் தூளாயின—ஆசிரியர்களது எழுச்சியால்.

தமிழ் பேசும் ஆசிரியர்கள், குறிப்பாகத் தலைமை ஆசிரியர்களின் தொண்டைக்குள் சிங்களம் திணிக்கப்படுகிறது. தமிழ் பேசும் ஆசிரியர்கள் சிங்களமா கற்பிக்கின்றார்கள்? சிங்களத்தின் மூலமா அவர்கள் கல்வி பெற்றார்கள்? தமிழ் மொழியில் கல்விப் பணி புரியும் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்குச் சிங்களம் எதற்கு?

பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை தமிழில் கல்வி கற்பிக்க கடமைப்பட்டவர்களே இந்த ஆசிரியர்கள். அவர்கள் இன்னொரு மொழியை ஏன் பயில வேண்டும்? பயிலுமாறு அவர்களை யார்தான் வற்புறுத்த முடியும்? வற்புறுத்தலுக்குத் தலை குனியும் அளவுக்குத் தன்மான மற்றவர்களல்ல தமிழ் பேசும் ஆசிரியர்கள்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் கூட ஆங்கிலம் பயிலுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படவில்லையே! இப்பொழுது மட்டும் ஏன் இந்த நிர்ப்பந்தம்?

ஆசிரியர்கள் சிங்களத்தில்தான் கல்வி இலாகாவுடன் தொடர்பு கொள்ள வேண்டுமாம். சிங்களத்தைத் திணிக்க இது மற்றொரு வகை நிர்ப்பந்தம். இத்தகைய பலவந்தமான எதேச்சாதிகார நிர்ப்பந்தம் என்றுமே வெற்றிபெற முடியாது.

சிங்களம் படிக்க மறுக்கும் அரசாங்க ஊழியர்களின் தீவிர எதிர்ப்பை அரசாங்கம் இன்று உணர்ந்து வருகிறது. இம்முறை சிங்களப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த ஊழியர்களில் அநேகர் விண்ணப்பங்களை வாபஸ் வாங்குவதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த எதிர்ப்பு மென் மேலும் வலுவடையவேண்டும். எதிர்ப்பு இடையிலே தளர்ந்தால் வெற்றி விலகிவிடும். இதையே தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கும் கூறுகிறோம்.

சிங்களம் படிக்காவிட்டால் 56 வயதுக்கு மேல் பதவி நீடிப்பு இல்லையாம்! இது தமிழாசிரியர்களைக் கேவலப்படுத்தும் ஓர் இழிவான நிர்ப்பந்தமாகும்.

இந்த நிர்ப்பந்தங்களை எதிர்க்க வேண்டும். கடுமையாக எதிர்க்க வேண்டும். தீவிரமாக எதிர்த்து முறியடிக்க வேண்டும். எதிர்ப்பு தீவிரமான அளவுக்கு அரசாங்க நிர்ப்பந்தம் தளர்ந்துவிடும்.

"தேசியக் கல்வி" பற்றி கிளிப் பிள்ளை போல் பேசுகிறார் கல்வி மந்திரி, அது என்னவென்பது அவருக்கே தெரியாது. அந்தத் தேசியக் கல்வியில் மொழிப் பிரச்சினை மேலும் தீவிரமாகிவிடுமென்பது மட்டும் திண்ணம். தேசியக் கல்வியால் கல்விப் பிரச்சினை சிக்கலாகிவிடும். தமிழ் பேசும் ஆசிரியர்கள் மீது நிர்ப்பந்தங்கள் அதிகரிக்கும்.

பாடசாலைகளைத் தேசிய மயமாக்கிய பின் ஏற்பட்ட தொடர்ச்சியான விளைவுகள்தான் இவை. ஆசிரியர்கள் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் சென்றதின் நேரடி விளைவு, அவர்கள் ஏற்கனவே பெற்றிருந்த அரசியல் உரிமையையும் இழந்து தவிப்பதுதான்.

அரசாங்க நிர்வாகத்தின் கீழ் ஆசிரியர்களின் வாழ்வில் துன்பங்கள்தான் நிறைந்துள்ளன. பாடசாலைத் தேசிய மயத்தை ஆதரித்த ஆசிரியர்கள் இன்று மனமுடைந்து வேதனைப்படுகின்றனர். சிங்களத் திணிப்பால் அவர்கள் அல்லல்படுகின்றனர்.

ஆசிரியர்கள் அரசியல் உரிமை பெற்றால் பொது மக்களுடன் தொடர்பு கொள்வார்களென்று அஞ்சுகின்றது ஆளும் வர்க்கம். எனவே ஆசிரியர்களை மக்களிடமிருந்து பிரிக்கும் ஓர் ஒதுக்கல் கொள்கையைக் கையாள்கிறது, அரசியல் உரிமையை மறுப்பதன் மூலம்.

இன்னல்களும், இடையூறுகளும், துன்பங்களும் சூழ்ந்துள்ள இவ்வேளையிலே தமிழ் பேசும் ஆசிரியர் சமூகம் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். அவர்களின் சங்கங்கள் அனைத்தும் ஓரணியில் திரண்டு ஏகோபித்துக் குரல் எழுப்ப வேண்டும். சிங்களத் திணிப்பைச் சிதறடித்து, அரசியல் உரிமைகளைப் பெற அயராது கிளர்ச்சி செய்ய வேண்டும்.

"வில்மட் பெரேரா சம்பளத் திட்டத்தை" அமுல் நடத்தவும், ஆசிரியப் பிரதிநிதிகளைக் கொண்ட "ஆசிரியர் சேவைக் கமிஷன்" நிறுவவும் தொடர்ந்து போராட வேண்டும்.

# மக்கள் வங்கியும் மக்களும்

## சர்க்காருக்கு அடிமையாக்கும் சர்வாதிகாரச் சூழ்ச்சி

**தற்போதைய அரசாங்கம் எதிர்காலத்தில் ஒரு சர்வாதிகார அரசை நிறுவி, தனி நபர் சுதந்திரங்களை அபகரித்து, சகலமும் சர்க்கார் உடைமை என்ற நிலையினை உருவாக்க இப்பொழுதே பல வழிகளைக் கையாண்டு வருகிறது. உண்மையிலேயே மக்களினால் இயக்கப்படும் கூட்டுறவு வங்கிகளை அழித்தொழிக்கவே மக்கள் வங்கித் திட்டத்தை அமுல நடத்துகின்றனர். இது ஒரு முழுச் சர்வாதிகார ஸ்தாபனம். மக்களுக்கு நன்மை செய்யவே ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்படும் இந்த வங்கிகள் மக்களை அடிமையாக்கவே கருமமாற்றுகின்றன என்பதை இக் கட்டுரை தெளிவாக்குகின்றது.**

மக்களின் வங்கியைப் பற்றிப் பொது மக்களிடம் ஒரு தவறான எண்ணம் பரவி வருகிறது. மக்கள் வங்கி ஒன்று ஸ்தாபித்துவிட்டால் தங்கள் எல்லோருக்கும் வேண்டிய பண உதவி கிடைத்து விடுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். அரசாங்கமும், கொம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியினரும் பரப்பும் பிரசாரத்தினாலேயே முக்கியமாக அவ்வித எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் மக்கள் வங்கிகள் ஸ்தாபித்துள்ள இடங்களில் நடக்கும் சம்பவங்களையும் மக்கள் வங்கியின் கட்டுப்பாடுகளையும் மக்கள் அறிவார்களானால் இப்பிரசாரத்தில் உண்மையில்லை என அறிவார்கள்.

மக்கள் வங்கியில் ஒருவர் கடனெடுக்க வேண்டுமானால் முக்கியமாக இரண்டு பேர்கள் உத்தரவாதக் கையெழுத்திட வேண்டும். அதிலும் அவர்கள் வருமானவரி கட்டுபவர்களாக இருக்க வேண்டும். அன்றேல் கடன் எடுக்கும் தொகையை விட இருமடங்கு பெறுமதியான காணியையோ, வீட்டையோ ஈடுவைக்க வேண்டும். இந்த விதமான வசதிகள் பொது மக்களில் அனேகருக்குக் கிடைப்பது கஷ்டம். முக்கியமாக ஏழைக் கிராமவாசிகளுக்கு உத்தரவாதமிடத் தகுந்தவர் இருவர் கிடைப்பது மிகவும் கஷ்டம்.

ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கு ஐந்நூறு பெயர்களே வருமானவரி கட்டுபவர்களாக இருக்கக்கூடும். அவர்களில் எல்லோரும் உத்தரவாதக் கையெழுத்திடச் சம்மதிக்கக் கூடியவர்களாக இருக்கமாட்டார்கள். அப்படிச் சம்மதித்தாலும் ஒருவர் இருவருக்கே அவர்கள் உத்தரவாதமிருக்க முடியும். சில வேளைகளில் அவர்களுக்குப் பண உதவி வேண்டியிருந்தால், எடுக்கும் கடனில் தனக்கும் பாதி வேண்டும் எனவும், கடனெடுப்பவரும் தானுமாக பாதி பாதிப் பணத்தைக் கட்டி வரலாமென்ற ஒப்பந்தத்துடனும் உத்தரவாதமாக நிற்கக் கூடும். ஆகையால் வயலோ, வீடோ சொந்தமாகவுள்ள விவசாயிகள் தவிர மற்றப் பொது மக்கள் மக்கள் வங்கியில் கடன் பெறுவது எளிதல்ல. அதைவிட அவர்கள் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலம் கடன் பெறுவது சுலபமாகவிருக்கும்.

கூட்டுறவுச் சங்கங்களிலும் சங்க அங்கத்தவர்கள் ஒருவர் அல்லது இருவர் பிணை நிற்கவேண்டும். ஆனால் அங்கத்தவர்கள் கஷ்டங்கள் முதலியவைகளை நாணய சங்க நிர்வாகத்தர், அறிவதால் தவணை தப்பினாலும் அவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுக்காமல் தவணை கொடுத்துக் கடனைத் திருப்பிப்பெற ஏற்பாடு செய்வார்கள். ஆனால் மக்கள் வங்கிகளிலோ தவணை தப்பினால் உடனடியாக வட்டியைக் கூட்டுவதல்லாமல், பணத்தை அறவிடுவதற்கு [illegible] மன்றங்கள் மூலம் ஏற்பாடு செய்வார்கள்.

பழந் தமிழ்க் கதை ஒன்றில் சிங்கம் பொற்காப்புத் தருவதாகக்கூறி வழிப்போக்கர்களைத் தன்னருகில் வரச் செய்து புசித்தது போன்ற நிலைதான் ஆகும்.

இக் கஷ்டங்களைப் பொது மக்களுக்கு அறிவிக்காது மக்கள் வங்கி வந்தவுடன் ஏழை மக்களெல்லாம் பணக்காரர்களாய் விடுவார்கள் எனக் கூறிப் பொய்ப் பிரச்சாரம் செய்வதை மக்கள் நம்பி ஏமாறக்கூடாது.

கம்யூனிஸ்ட் கட்சியார் மக்கள் வங்கிகள் ஸ்தாபிக்க வேண்டுமெனக் கேட்பதும், சுவரொட்டிகள் ஒட்டுவதும்

மணி

எதற்காகவெனில், மக்களை ஏமாற்றி அவர்களை அவ் வங்கிகள் மூலம் அடிமைகளாக்குவதற்கே என பொது மக்கள் நன்கு அறியவேண்டும்.

மக்கள் வங்கி உண்மையில் மக்கள் வங்கியல்ல. ஆளும் அரசாங்கத்தாரின் வங்கி. அதன் நிர்வாகத்தில் பொது மக்கள் பிரதிநிதிகள் எவருக்கும் இடம் கிடையாது. மந்திரியாரால் நியமிக்கப்பட்ட நிர்வாகத்தரே காரியங்களை நடத்துவார். அது ஒரு சர்வாதிகார வங்கியிலே ஒழிய வேறல்ல. ஒருசில கட்சிக்காரருக்கும் அக்கட்சி ஆதரவாளருக்கும் உதவி செய்ய ஏற்படுத்தப்பட்டதெனவே எண்ண வேண்டும்.

மக்கள் வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்ட இடங்களில் கடன் எடுத்தவர்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால், இந்த உண்மை விளங்கும். அரசாங்க உத்தியோகத்தரும், பெரிய பணக்காரரும், அரசாங்கத்தில் செல்வாக்குள்ளவர்களுமே, அதிகப்படியான கடன் எடுத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் பெருந் தொகையான பண உதவி பெற்றிருக்கிறார்கள். உதவி பெற்ற ஏழைமக்கள் சிலரே.

பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் பிலிப்குணவர்த்தன இந்த மாதிரியான ஒரு வங்கியை ஏற்படுத்த முன் வந்தபோது, கட்சி ரீதியாகவும் சர்வாதிகாரம் பெற்றதுமான ஒரு வங்கி நியமிப்பது ஜனநாயக முறைக்கு முற்றிலும் மாறானது எனக் கூறித் தடுத்து விட்டதை எல்லோரும் அறியலாம். ஆனால் தற்போதைய அரசாங்கமோ அந்த விதமான வங்கியைத் தங்கள் கட்சியின் பலத்திற்காகவும், தமிழ் பேசும் மக்கள் உட்பட சகல பொது மக்களையும் அடிமைப்படுத்தவும் ஏற்படுத்தியிருக்கிறது. ஜனநாயக ரீதியாகஏற்பட்ட வங்கிகள் உண்மையில் கூட்டுறவு வங்கிகளே. அவைகளைப் பலவிதமான துறைகளிலும் கடமையாற்ற விடாது சட்டங்கள் ஏற்படுத்தி மக்கள் வங்கிக்கு மாத்திரம் எல்லா விதமான வசதிகளும், சர்வாதிகாரமும் கொடுத்து அரசாங்கம் நடத்துவது, மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகும்.

பள்ளிக்கூடங்கள், போக்குவரத்து முதலியவற்றை தங்கள் கையில் எடுத்துக் கொண்டதல்லாமல், வியாபாரத்தையும், மக்களின் பொருளாதாரத்தையும் அரசாங்க உதவியோடு சர்வாதிகாரம் பெற்ற வங்கிகள் மூலம் கட்டுப்படுத்த இந்த மக்கள் வங்கியும் கூட்டுறவு மொத்த வியாபார நிலையம் என்ற மற்றொரு சர்வாதிகாரம் பெற்ற ஸ்தாபனமும் உதவி செய்கின்றன.

பொது மக்கள் எல்லோரும் இவைகளைப் பற்றி மிக விழிப்பாக இருக்கவேண்டும். பொய்ப் பிரசாரத்தால் ஏமாறக்கூடாது. மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கிகளுக்குமிடம் கொடாமல் அவைகளை எல்லாம் தாங்களே கைப்பற்றி நடத்தத் திட்டமிடுவது இலங்கையின் முழுப் பொருளாதார நிலையையும் ஒரே சர்வாதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து, மக்கள் எல்லோரையும் அரசாங்கத்திற்குப் பணியச் செய்யும் ஏற்பாடு எனத் திட்டவட்டமாக விளங்குகிறது.

# வடபகுதியில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீன அதிகாரிகள் வட இலங்கையில் அளவை நடத்துதல், படம் பிடித்தல், அடிக்கடி அந்தப் பிரதேசத்தில் நடமாடுதல் ஆகியவை சீனக் கப்பல் படைத் தளம் அமைக்கும் செய்தியை ஊர்ஜிதம் செய்யக்கூடியதாக இருக்கின்றன வென்று கூறலாம்.

இலங்கை அரசாங்கம் தனது நடுநிலைமைக் கொள்கையை நழுவ விட்டும், அமெரிக்க ஆதிக்கக் கோஷ்டியை முற்றாகப் பகைத்து கொண்டும், அதே சமயத்தில் சீனவிடமும், கொம்யூனிஸ்டு நாடுகளிடமும் அதிகமாகச் சார்ந்து நிற்பதையும் பார்க்கும்போது, சீனவின் தளம் அமைக்கும் கோரிக்கையை அடியோடு நிராகரிக்கும் நிலையில் இலங்கை இருக்கமுடியாது.

அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு சீனவிடமும், இதர கொம்யூனிஸ்டு நாடுகளிடமும் புதிய உதவிகள் பெற இலங்கை முயற்சி செய்யக்கூடுமென்றும், நிதி மந்திரி "உண்மையான நண்பர்கள்" என்று குறிப்பிட்டது அந்த நாடுகளைத்தானென்றும், எனவே இலங்கை சீனவுக்கு மேலும் கடமைப்பாடுள்ளதாகிவிடுமென்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். ஆகவே சீனவின் கோரிக்கைகளை நிராகரிக்க முடியாதநிலைக்கு இலங்கை வந்துவிடுமாம்.

வட பகுதியில் சீனக் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டால் தமிழ் பேசும் மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கும், வட இலங்கைப் பிரதேசத்தை என்றும் அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதற்கும் இத்தளம் பயன்படலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இத்தகைய தளமொன்று இலங்கையில் அமைக்கப்படும் பட்சத்தில் "நாடற்றவர்கள்" பிரச்சினையைத் தீர்க்கும் விஷயத்தில் இலங்கை அரசாங்கத்தின் கருத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இந்தியாவை நிர்ப்பந்திப்பதற்கு வழிபிறக்கக் கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை உறவு முறிந்தாலும்

# அமெரிக்கா கலங்கப் போவதில்லை!

## இலங்கையர்மயத் திட்டம் உதவி மறுப்பின் எதிரொலி

### 7 வருடத்தில் 35 கோடி உதவி

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய உறவு காரணமாக, இலங்கையில் அமெரிக்கா கொண்டுள்ள பிடிமானத்தை இழந்துவிட நேர்ந்தாலும் அதையிட்டு அமெரிக்கா வருந்தப் போவதில்லை என்று ராஜதந்திர வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன. இலங்கையிலிருந்து கொண்டு அமெரிக்கா கையாளும் நடவடிக்கைகளை இந்தியாவிலேயே இருந்து கொண்டு நடத்தலாமாம்.

இலங்கையில் தற்போது அமுலுக்கு வரவிருக்கும் இலங்கையர்மயத் திட்டமும் அமெரிக்க உதவி மறுப்பின் எதிரொலியாகவே இருக்குமென்று கருதப்படுகிறது. மந்திரி இலங்கரத்தினவின் தேர்தல் வழக்கு முடிவும் இலங்கையில் சிறு கடற்படைத் தளம் அமைக்கும் மெய்தியும் அமெரிக்காவின் உதவி மறுப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாமென்றும் பலத்த வதந்தி அடிபடுகிறது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் முதல்தேதியிலிருந்து உதவியை நிறுத்தப்போவதாக அமெரிக்க அரசாங்கம் எச்சரித்து வந்தபோதிலும் இலங்கரத்தினவின் வழக்குத் தீர்ப்பு வெளியான பெப்ரவரி 8ம் திகதி வரையும், உதவிநிறுத்தத்தையிட்டு அமெரிக்க அரசாங்கம் எதுவும் கூறவில்லை. பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தை நிறுவியவரும், வர்த்தகம், இறக்குமதி ஆகிய துறைகளில் அரசாங்கத்தின் கொள்கைகளை ஆக்குபவருமான வர்த்தக உணவு கப்பல் போக்குவரத்து மந்திரியான இலங்கரத்தினவின் தேர்தல் வழக்கு முடிவினையே அமெரிக்க ஸ்தானிகராலயம் பெரிதும் எதிர்பார்த்திருந்ததாக வதந்தி அடிபடுகிறது.

பிரதமரும் அவருடைய குழுவினரும் நாட்டு மக்களை தியாகம் செய்யும்படி கேட்டுக்கொண்டேயுள்ளனர். இந்த ரீதியில் இலங்கையோ அமெரிக்காவோ தங்கள் நிலையைத் தளர்த்தப் போவதில்லையென்றே தோன்றுகின்றது.

#### இந்தியாவுடன் நேசம்

அண்மையில் இந்தியாவுடன் அமெரிக்க அரசின் நேசம் வளருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதனால், இலங்கையிலிருக்கும் தனது நிலையை இழப்பதையிட்டு அமெரிக்கா கவலையுறவில்லையென்று கருதப்படுகிறது.

இலங்கையிலிருந்து கொண்டு அமெரிக்க அரசாங்கம் என்னென்ன செய்ததோ அவை அனைத்தையும் இந்தியாவிலே இருந்துகொண்டே அமெரிக்கா நடத்த முடியும்.

இங்குள்ள அமெரிக்க ராஜதந்திரிகளுக்கு இடையூறுகளை விளைவிக்க ஏதுவான முறைகள் இங்கு கையாளப்படுமானால், இங்குள்ள அமெரிக்க ஸ்தானிகராலயத்தை மூடிவிடவும் அமெரிக்கா தயங்காது என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க எண்ணைக் கம்பெனிகளான 'எஸ்ஸோ', கால்டெக்ஸ் ஸ்தாபனங்கள் தங்கள் தளபாடங்களை வெவ்வேறு ஸ்தாபனங்களுக்கு விற்று விடுகின்றன என்று அறியப்படுகிறது. அண்மையில் 'எஸ்ஸோ' எண்ணை ஸ்தாபனத்துக்குச் சொந்தமான ஒரு மிகப் பெரிய எண்ணை தாங்கிக் கப்பலை வெளிநாட்டு ஸ்தாபனத்திற்கு விற்றுவிட்டதாம். இக்கம்பெனிகள் தங்கள் ஏனைய பொருட்களையும் இயந்திரங்களையும் விற்பதன் மூலம் தங்கள் ஸ்தாபனங்களனைத்தையும் மூடிவிட முயற்சித்து வருகின்றன என்று ஊகிக்க இடமிருக்கிறது.

இலங்கையில் ஒரு தளத்தை நிறுவுவதற்கு சீன இலங்கை அரசாங்கத்தின் உதவியை நாடியதாகவும், அது ஓரளவு நடைமுறைக்கு வர ஏது இருப்பதையும் முன் கூட்டி அறிந்ததன் பயனாகவேதான் அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டுள்ளது என்றும் பல அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சீனத் தளம் அமைக்கும் செய்தியை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

#### இலங்கையர் மயத் திட்டம்

இலங்கை அரசாங்கம் இலங்கையர் மயமாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளதல்லவா? 1965 முதல் வெளிநாட்டவர்கள் இங்கு வசிக்கும் தங்கள் பதவிகளை இந்நாட்டவர்களுக்கு விட்டுவிட வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்கள் தங்களுடைய மூலதனத்துடன் ஆரம்பித்த வர்த்தக நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பை இலங்கையரிடம் ஒப்படைக்க விரும்பமாட்டார்கள் என்பது வெளிப்படை. இலங்கையருக்கு நிர்வாக உரிமைகளை அளிப்பதை விட வியாபாரத்தை மூடிவிடுவதே மேல் என அவர்கள் கருதுகின்றனர். பல வெளிநாட்டுக் கம்பெனிகள் தங்கள் மூலதனங்களை நிறுத்தி வியாபார ஸ்தாபனங்களையும் மூடி விட முயற்சிகள் எடுக்க ஆரம்பித்து விட்டன என்று தெரிகிறது.

அமெரிக்க உதவி நிறுத்தத்தின் உடனடி எதிரொலியாகத்தான் இலங்கையர் மயமாக்கும் கொள்கையின் புதிய அத்தியாயத்தை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டார் மூலதனத்தில் இயங்கும் பல ஸ்தாபனங்களில் முக்கியமான பதவிகளில் இருக்கும் வெளிநாட்டவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

#### அமெரிக்க உதவி

பலதரப்பட்ட நிதிநெருக்கடிகளினாலும் இலங்கையின் பொருளாதார நிலை மிகவும் சீர்கெட்டுப் போயிருக்கிறது. 1956ம் வருடம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி அமெரிக்க அரசாங்கம் தொடர்ந்து இலங்கைக்கு போதுமான உதவிகளைச் செய்து வந்தது.

அமெரிக்க பொருளாதார தொழில் நுட்ப இயக்க உதவித் திட்டத்தின் கீழ் 1956ம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு இதுவரை சுமார் 35 கோடி ரூபாய் அமெரிக்கா வழங்கியுள்ளது. உணவு உற்பத்தி, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து ஆகிய துறைகளுக்காக மேற்படி தொகை வழங்கப் பட்டிருக்கிறது.

50 ஆயிரம் தொன் நிறையுள்ள கோதுமை மாவை வருடாவருடம் இலங்கைக்கு அமெரிக்கா கொடுக்கிறது. இலங்கை இதற்கான பெறுமதியை இலங்கை நாணயமாகவே கொடுத்து வருகிறதாம்.

உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் மொத்தம் 51 இலங்கையர்கள் வெவ்வேறு துறைகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்த உதவி நிறுத்தப்படமாட்டாது என்றும் தெரிகிறது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பால், பணிஸ் உதவிகள் நிறுத்தப் படமாட்டாதாம்.

---

தமிழ்—முஸ்லிம் உறவு பற்றிய திரு. கே. எஸ். ஏ. கபூரின் கட்டுரையின் தொடர்ச்சி, இவ்வாரம் இடமின்மையால் வெளிவரவில்லை. அடுத்த வாரம் இடம் பெறும். —ஆ-ர்.

---

## புதுப் படலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மண விழாக்கள் நடைபெறும்போது, வாழ்த்துத் தந்திகளை அனுப்புவதில்லையென்று பலர் தீர்மானித்திருக்கின்றனர். இதற்குப் பதிலாக 10 சத முத்திரையுடனேயே வேண்டிய வசனங்களை உபயோகித்து வாழ்த்தை எழுதி தபாலில் அனுப்பி விடுகின்றனர். இதனால் ஏராளமான தந்திகளுக்குச் செலவாகும் பணம் மீதமாகிறது, அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகிறது.

3. ஏராளமான அரசாங்க ஊழியர்கள் தங்கள் வீடுகளுக்கு அனுப்பும் பணத்தை தபால் மூலம் அனுப்புவதை நிறுத்தி விட்டதன் மூலம் தபால் இலாகாவிற்கு நட்டம் ஏற்படுத்தி வருகின்றனர். தங்கள் நண்பர்கள் ஊருக்குச் செல்லும்போது அவர்களிடம் கொடுத்து பணத்தை அனுப்பி விடுகின்றனர்.

---

## மன்னிப்புக் கோருகிறோம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பிரசாரக் கூட்டமொன்று 10-2-63 ல் தலவாக்கொல்லையில் நடைபெறுமென 'சுதந்திரன்' இதழில் பிரசுரமாகியிருந்தது. கூட்டம் எதிர்பார்த்தபடி நடைபெறவில்லை. செய்தியைப் படித்த நாகவத்தை புரடித்தோட்டம், செந்தூர் பத்தன, உருளவள்ளி, பசுமலை அக்கரப்பத்தனை, டயகாமம் முதலிய இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கூட்டப் நடைபெறுமென்ற எண்ணத்துடன் தலவாக்கொல்லை சென்றிருந்தனராம் என்று அறிந்து வருந்துகிறோம். சில அசௌகரியங்களினால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. [illegible] கோருகிறோம். —ஆ-ர்.

---

## இரத்த வெள்ளம் ............

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வியர்வை நிலத்தில் சொட்ட, அயர் நாட்டார் உழைத்து, விளைவித்த தானியங்களை அவர்களுக்குக் கொஞ்சமும் விடாமல் இங்கிலாந்திற்கு ஏற்றி அனுப்பியது. இதனால் 1845-ம் ஆண்டில் மாபெரும் பஞ்சம் ஏற்பட்டு, ஏறத்தாழ 7 லட்சம் மக்கள் பட்டினியால் மாண்டார்கள். இன்னும் 8லட்சம் மக்கள் இங்கிலாந்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் குடியேறுவதற்காக வெளியேறினார்கள். செல்லும் வழியிலேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் பரலோக யாத்திரை செல்லவும் நேர்ந்தது!

இப் பஞ்சம் ஆட்சியினரால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டது என்பதை இங்கிலாந்திலிருந்து 26-6-1845-ல் வெளியாகிய டைம்ஸ் பத்திரிகையே எடுத்துக்கூறியுள்ளது.

அயர் இளைஞர்கள் ஆர்ப்பரித்து எழுந்தார்கள். அயல் நாடுகளில் நடைபெற்ற ஆயுதப் புரட்சிகளை உற்று நோக்கினார்கள். ஆர்வ மிகுதியால் வாலிப அயர்நாடு என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்கள். ஆயுதங்களைச் சேகரித்தார்கள்.

ஜோன் மிச்சேல் தலைமையில் ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்றன. ஆனால் அண்டிக் கெடுக்கும் அயோக்கியர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்து விட்டார்கள்! ஆட்சியினர் அயர் வீரர்கள் பலரைச் சுற்றி வளைத்தார்கள்!! மிச்சேல் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு 14 ஆண்டுகள் தேசாந்தர வாசத்திற்கு அனுப்பப்பட்டார். அகப்படாத வீரர்கள் திட்டமிடப்பட்ட புரட்சியை 1848-ம் ஆண்டில் நிறைவேற்றுகையில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை பெற்றார்கள்......அவ்வாலிப வீரர்களும் இன விடுதலைக்காகத் தங்களாலான சிறு காணிக்கையை-உயிர்க் காணிக்கையைச் செலுத்தி, மக்கள் உள்ளங்களிலே என்றுமே அழியா இடத்தைப் பெற்றார்கள். அத் தியாக சீலர்கள் அயர் இனத்தவருக்கு விட்டுச் சென்றவை இரண்டு. ஒன்று, ஒரு தேசியக் கொடி — தாழ்ந்து வணங்குவதற்கு ஒரு மூவர்ணக் கொடி. மற்றது.........கண்ணீர்!

(வளரும்)


வேலணை வீரசிங்கம் அளிக்கும்

**ஒன்றே குலம்**

(நாடகம்)

17-2-63 மாலை 6-30

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்

கட்டணம்:

ரூ.5 00, ரூ.3-00



**வனப்பின் சிறப்பிற்கு! மங்கையர் விரும்புவது!!**

**லதா மணிப்புரி சாரிகளே!!!**

**லதா மணிப்புரி சாரிகள்;**

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலிலலான இழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள.

**எலைட், சுப்பர்லோன்**

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

**குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,**

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி, 110&114 ,மெயின் வீதி:

**கொழும்பு.**

—Mylads/KL.56/63—


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




அன்று, என் வாழ்விலே ஒரு திருநாள். எனது கனவெல்லாம் சொற்ப நேரத்தில் நனவாகப்போகின்றன, ஆம்...... அதுதான் எனது திருமணப் பதிவுநாள். நான் உயிருக்குயிராய் நேசித்த என் மாலினியை சட்டப்படி எனது மனைவியாக்கவிருக்கும் பொன் நாள். காதலர் வாழ்க்கையிலே ஏற்படும் தடைகளையெல்லாம்வெற்றிகரமாகத் தாண்டி, நாம் இருவரும் இன்று ஒன்று சேருகிறோம்.

வேற்றுமைகள், மனஸ்தாபங்கள் எல்லாவற்றையும் மறந்து உறவினர், உற்றூர், சிநேகிதர் எல்லோரும் இலட்சியக் காதலரின் சேர்க்கையைக் காணத் துடி துடித்து வந்து கூடுகின்றனர். நானும் மாலினியும் இன்பக் கடலிலே மூழ்கி, மூழ்கி அதை அணு அணுவாக அனுபவித்துக்கொண்டிருந்தோம்.

முறைப்படி சமூக, சட்ட வைபவங்களெல்லாம் நடைபெற்றன. இறுதியில் என் முக்கிய எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு என் சட்டைப் பைக்குள் இருந்து மாலினியின் "அதற்கு"... எதற்கு? ...... வெட்கமாக இருக்கிறதே!, .........பரிசாக அளிக்கப்போகும் தங்கப் பதக்கத்தை எடுத்தேன். அப்பப்பா எவ்வளவு அழகு! அதற்கு மத்தியிலே ஈடு இணையற்று அழகாக ஒரு ரோஜாப் பூதண்டுடனும் இலையுடனும் இழைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றிவர விலை மதிப்பற்ற நவரெத்தினங்களும் பொறிக்கப்பட்டு ஜொலித்துக் கொண்டிருக்கின்றன! இதுவல்லவோ அழகு! இதுவல்லவோ என்னைக் கவர்ந்த .........ஆம்! 'அதற்கு' ஏற்ற பரிசு!

"இது என்ன தம்பி"

"இதுவா.........நான் மாலினிக்குக் கொடுக்கப்போகும் பரிசு!" என்ன இன்பம்......, எவ்வளவு பெருமை இதைக் கூறுவதில்.

"இது ஏதேன் பேச்சுப் போட்டி அல்லது வேறு போட்டியில் ஜெயித்தவர்களுக்கல்லோ கொடுக்கிறது! அவளுக்கேன் உதை? தம்பி! ஆரேன் உன்ரை வேலையைப் பார்த்து ஏளனம் செய்யப் போகினம், பேசாமல் வை! பிறகு வேண்டுமானால் கொடு."

ம்......இவருக்கு எங்கே இதன் அருமை தெரியப் போகிறது. என் ஆசை நிறைவேறும் இவ்வேளையில் இப்படியும் ஒரு தடையா?

வருவது வரட்டும் என்ற உறுதியுடன் மாலினியின் பக்கம் திரும்பி அதை அவள் சட்டையில் பொருத்த முற்பட்டேன்.

"பொறுங்கள்! அப்பா சொல்வதிலும் நியாயம் இருக்கிறதுதானே" என்றாள் மாலினி. இதுஎனக்குத் தாங்கொணு அதிர்ச்சியைக் கொடுத்தது.

"உனக்கு அப்படித்தானிருக்கும்!.........என்னையறிந்த நீயுமா இப்படிப் பேசுகிறாய்? ......நன்மைக்குத்தான் கூறுகிறேன் மாலினி! இச் சிறிய விஷயத்தை வீணே பெரிதாக்காதே, ஏற்றுக்கொள்."

"ஏன் இந்த முரட்டுப் பிடிவாதம்"

"இப்போ மறுபேச்சின்றி ஏற்றுக்கொள்! பிறகு நான் விபரமாக எல்லாம் சொல்லுகிறேன், அப்போது நீ ஆச்சரியப்படுவாய்"

'சரி அப்படியே ஆகட்டும்'

எல்லையற்ற மகிழ்ச்சியோடு அவளின் இடது பக்கத்துத் தோளின் சற்றுக் கீழே அமைந்துள்ள சேலையிலே அதைப் பொருத்தினேன். அவளுக்குக் கூட இப்போது ஆனந்தம் ஏற்பட்டுவிட்டது. இருக்க வேண்டிய இடத்தில் அது இருந்து கொண்டு, தன் அழகால் எல்லோரையும் பரிகசித்துக் கொண்டிருந்தது. அந்த அழகில் மூழ்கியிருந்த நான், அவளைத் தோழியர் அழைத்த பொழுதுதான் சுய நிலைக்குத் திரும்பினேன்.

* * *

தனியே விடப்பட்ட என் எண்ண அலைகள் ஐந்து வருடங்கள் பின்னேக்கி விரைந்தன.

எங்களுடைய வகுப்பிற்கு இரண்டு மாதத்திற்கு முன்புதான் அடக்கம், ஒழுக்கம், எல்லாமே ஒழுங்கு அமைந்த ஒரு எழில் நங்கை வந்தாள். அவளைப் பார்த்த உடனேயே அவளின் உயரிய நற்குணங்கள் எனக்குப் புலனாகி விட்டன. என்னையறியாது என் நெஞ்சம் முன் பின் தெரியாத அவளிடம் கவர்ச்சியும் அன்பும் கொண்டுவிட்டது. இவளைத் தவிர வேறு எந்தப் பெண்ணாலும் என்னை இதுவரை அசைக்க முடியவில்லையே! இந்தப் பெண்ணிடம் எவ்வளவு உயரிய தெய்வீக சக்தி அமைந்திருக்கிறது!

வகுப்பில் எனது வலது கைப் புறத்தில் பத்துப் பன்னிரண்டு அடி தூரத்தில் அவள் இருந்தாள். பாடம் நடக்கும்போதே அவளை அடிக்கடி பார்த்து ரசித்துக் கொண்டிருப்பேன். சில வேளைகளில் அவளிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுத் திண்டாடுவேன். அவளும்தான் என்னை இடைக்கிடை பார்க்கிறாள். ஆனல் அவள் பார்வையோ எனக்குப் புரியவேயில்லை. சில வேளைகளில் பரிவாக இருக்கிறது, வேறு சில வேளைகளில் புரியாத பார்வையாக உள்ளது. இதற்கிடையில் அவளைப் பற்றிய பல தகவல்களைத் துருவி ஆராய்ந்து அறிந்து அதனல் அவள் மீது மேலும் மேலும் பெரு மதிப்புக்கொண்டேன். அவற்றல் என்ன பிரயோசனம்! அவள் தான் எட்டாத பழமாகி விட்டாளே!

அவள் என்னைப் புறக்கணிப்பதும் எனக்கு வேண்டியதுதானே! ஏனெனில் அவளுக்கு என் நிலை நன்ருகத் தெரியுந்தானே! புத்தகத்தோடு 'கட்டி அழுகிற' நேரத்தை சிநேகிதரோடு கதைத்து விளையாடி எவ்வளவு இன்பமாகப் போக்கி விடுவேன். இதுவரையும் ஏதோ விதமாகத் தப்பித் தவறி சித்தியடைந்து இந் நிலைக்கு வந்து விட்டேன். ஆனல் இனிமேலும் இந்த நிலை நீடிக்காது. என்ருலும் அதைப்பற்றி நான் கவலைப் படப்போவதுமில்லை, ஏதோ 'படைத்தவன்' படியளப்பான் தானே!

எப்படியும் இந்த கைக்கிளையைக் கைவிட்டு விடுவதென்ற முடிவிற்கு வந்தேன். ஆனல் எவ்வளவுக்கெவ்வளவு அவளை மறக்க நினைத்தேனே அவ்வளவுக்கவ்வளவு அவள் நினைவு என் மீது மோதி விளையாட ஆரம்பித்தது.

அன்று, காலை 9 மணியிருக்கும், வகுப்பிற்குப் பிந்தியதால் அவசரப்பட்டுக் கொண்டு வகுப்பறையை நோக்கிச் சென்றேன். அப்போது செருப்போசை கேட்டுத் திரும்பினேன். என்னைப் போல அந்தப் பெண்ணும் விரைந்து வந்துகொண்டிருந்தாள். கடைசிப் படியைத் தாண்டும்போது கால் தவறி விட்டது. ஒரு விநாடி [illegible]றிருந்தால் 20 படிக[illegible] உருண்டு பெரும் விபரீத விளைவுகள் ஏற்பட்டிருக்கும். என்னையறியாது என் கை விரைந்து அவளைத் தாங்கிக் காப்பாற்றியது.

அப்படியேநின்றுகொண்டு நிமிர்ந்தாள். அப்பப்பா! எப்படிக் கூறுவது?

அவள் அழகு விழிகள் விரிந்து, மலர்ந்தன.........

என்னை எங்கெல்லாமே அழைத்துச் சென்றுவிட்டது அந்த நிலை.

"மிகவும் நன்றி"

"பரவாயில்லை"

பலம்வாய்ந்த மின்சாரத்தால் தாக்குண்டவன் போ

## "சிவா"

லானேன். அதற்கு நிகர் அகில உலகத்திலேயுமே வேறேதுமில்லை! நான் சிலையாகிவிட்டேன்! பொங்கும் இன்பத்தால் துடியாய்த்



துடித்தேன்! அந்தச் சிரிப்பிலே இதுவரை நான் ஏங்கித் தவித்த இன்னுமொரு முக்கிய இரகசியத்தையும் கண்டுவிட்டேன்! ஆம்.. அது தான்......ஒன்றுசேர்ந்து குற்றுயிராக்கி என்னை வதைக்கின்றனவே.

"லேட்டாய்ப் போச்சு வகுப்பறைக்குப் போங்கோவன்" என்றாள். அப்பொழுது தான் விழித்துக் கொண்டு உள்ளுக்குச் சென்றேன்.

பாடத்தின் மீது என் கவனம் செல்லவில்லை. அந்தச் சிரிப்பு என் கண் முன்னே மின்னல் போன்று, இடைவிடாது தோன்றி மறைந்து கொண்டிருந்தது அது. இனி, என்றுமே என்னை விட்டகலாது. அதுவே என் உயிர் நாடி. அதற்கு எனது உடல், பொருள் ஆவி அனைத்தையும் ஈய்ந்தாலும் இணையாகாது.

அந்தப் புன்னகை என் வாழ்விலே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. அவளையே குறிக்கோளாக வைத்துக் கல்வியிலே முதன் முத[illegible] தொடங்கினேன். இதைக் கண்ணுற்ற எனது பெற்றோரே மிகவும் ஆச்சரியப் பட்டனர். அம்மா, இறைவனை இதுவரை காலமும் நொந்து வழிபட்ட தன் பயனை விரைவில் அடைந்து விட்டதாக எண்ணிப் பூரிப்படைந்தாள். அப்பா, பிறவிப் பயனையே அடைந்து விட்டதாகஎண்ணியெண்ணி அகமகிழ்ந்தார். வீட்டிலே இப்போ எல்லோரையும் விட எனக்குத் தனி மதிப்பு. எது வேண்டுமானாலும் செய்யலாம்! அவர்களுக்கு எங்கே என் மாலினியின் விஷயம் தெரியப் போகுது! அவளல்லவோ என் தெய்வம்!

இச் சம்பவத்தின் பின் நாம் நீண்ட நாள் சிநேகிதர் போல சரளமாகப் பழகத் தொடங்கி விட்டோம். ஒருவரின் அன்பை ஒருவர் நன்ருகப் புரிந்து கொண்டோம். இலட்சியக் காதலராளேம். எங்களை மரணம் ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் பிரிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தோம். அவளால் எனக்கு கல்வியில் ஏற்பட்ட ஊக்கம் காரணமாக அதே வருடம் சித்தி பெற்று பல்கலைக் கழகம் அடைந்தேன். அவள் என் மீதுகொண்ட அளவு கடந்த அக்கறை காரணமாகப் படிப்பில் கவனம் செலுத்தாது தோல்வியடைந்தாள். என்சித்தியைத் தனதாக ஏற்று மகிழ்ந்தாள். பல்கலைக் கழகத்திலிருக்கும் போது மாலினியால் ஏற்பட்ட விளைவுகளை எடுத்துக் காட்டி எனது பெற்றோரைச் சம்மதிக்க வைத்தேன். நான் இப்போது அதே பாடசாலையில் ஆசிரியர்.

என்னை முதன் முதல் மயக்கிய அந்த மோகனப் புன்னகைக்கு—என்னை மனிதனாக்கிய அந்தப் புன்னகைக்கு, அவளை அடையும்போது, புதுமை நிரம்பிய ஒரு பரிசை அளிக்க விரும்பினேன். அதன் விளைவு தான் இந்தப் தங்கப் பதக்கம். இதன் உருவம், அமைப்பு, அதில் பொறிக்கப்பட்டிருக்கும் நவரத்தினங்கள், இழைக்கப் பட்டிருக்கும் ரோஜாப் பூ ஆகியன யாவும் என் சொந்தக் கற்பனையால் வரையப் பட்டவையே. இது இப்போதைய அழகு உருவத்தையடைய ஒரு வருடத்திற்கு மேல் எடுத்திருக்கிறது. அத்துடன் அதன் பெறுமதியாவும் என் சொந்த உழைப்பே. இத்தகைய தூய்மை, பெருமை, அழகு, புதுமை எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற இந்தப் பதக்கத்தை மாலினியே வியக்கும் வகையில் அளித்து மகிழவேண்டுமென்று விரும்பினேன். ஆகையாற்றான் அவளிடம் இதை முன்பு சொல்ல விரும்பவில்லை. அந்த விபரீத ஆசையின் விளைவுதான் இன்றைய நிகழ்ச்சி. அதன் தன்மையை முன்பே நான் சொல்லியிருந்தால் அவள் அதை எவ்வளவு மகிழ்ச்சியோடு ஏற்றிருப்பாள், இப்பவும் என்ன இறுதியில் மகிழ்ச்சியோடுதான் ஏற்றாள்!

* * *

அனைத்தும் முடிந்ததும் ஆவலோடு மாலினியைத் தனிமையில் சந்தித்தேன். புன்னகை ததும்ப குழந்தை போல் என்னிடம் ஓடி வந்தாள்.

"மிகவும் அழகான இந்தத் தங்கப் பதக்கத்தை எனக்குப் பிடித்திருக்கிறது. இது என்ன புதுமை! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே" என்றாள்.

"இதோ புரிய வைக்கிறேன்! நீ அன்று முதன் முதல் என்னைப் பார்த்துச் சிரித்தாய்! நினைவிருக்கிறதா?"

"நல்ல கேள்வி இது!...... அன்று நீங்கள் பதிலுக்கு சிரித்தீர்களே! ........."வெட்கம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. சிறிது நேர மௌனத்திற்குப் பின் "அதை என்றும் மறப்பேன ......அதிலே அல்லவோ என் சக்தி அனைத்தும் அடங்கியிருக்கிறது".

"அந்தச் சிரிப்பு நானே வியக்கும சக்தியைஎனக்குத் தந்தது! என்னை மனிதனாக்கியது. உடனே சிரிப்புக்குப் பரிசாக ஒரு தனிப் பெருமை வாய்ந்த ஒரு தங்கப் பதக்கத்தை உனக்குப் பரிசாகத் தருவதென்று தீர்மானித்தேன்" என்று எல்லா உண்மைகளையும் அவளிடம் கூறினேன். அவள் அதிர்ச்சியடைந்து விட்டாள்.

"அத்தான் நான் பெரும் பிழை செய்து விட்டேன். என்னைத் தயவு செய்து மன்னியுங்கள்! இப்பேர்ப் பட்ட உங்களையடைய நான் என்ன பாக்கியம் செய்தேனே!"

"அப்படியெல்லாம் சொல்லாதே மாலினி" என்றவாறு அவள் கன்னத்தில் கிள்ளினேன்.

(யாவும் கற்பனை)

## விழி நோக்கும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"சரி சரி நான் தான் எல்லாம் வாங்கி வரப் போகிறேன். நீயென்ன தரப் போகிறாய்?" என்று ஒரு போடு போடுகிறான் அவன்! இதோ, அவன் கேள்வி:

விழி நோகும் கண்ணே!
வழி பார்த்து நிற்காதே;
வந்தவையெல்லாம்
கொணர்ந்திடுவேன்
தந்திட்டால் உன்னல் எனக்கு
உரியது ஒன்று தரவேண்டும்
அரியதுமல்ல அதுவும்
சுண்டு!

அவளா விட்டுக் கொடுக்கிறவள்? கனகசபை அவளிடம் இப்பொழுது அணுக முடியாது என்ற துணிவில் "எடுத்துங்கோ" என்றே எடுத்த எடுப்பிலே இயம்பி விடுகிறாள்:

கொடுத்தால் முடிந்ததே
எடுத்துங்கோ இப்போதே!

கனகசபையின் பாடே பெரிய பாடாகி விட்டது. என்ன செய்வான்? அவளை அடைய வேண்டுமாகில் கரிக் கோட்டைத் தாண்ட வேண்டுமே!

வேண்டாமே இப்போ
தாண்டவே கூடாது—
கரிக்கோடு!

என்று உள்ளமெல்லாம் புல்லரிக்கக் கூறி விடை பெறுகிறான். அவளும் கன்னமெல்லாம் சிவப்பேறச் சிரித்தாள்—சொன்னதெல்லாம் நினைவில் வைத்து அவன் பிரிந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத் தலைவர்களால்

# இரு முறை ஏமாற்றப்பட்டோம்

## இந்நிலையை மாற்றி அமைப்பது தமிழ் மக்களின் கடன்

### வாலிப முன்னணி மாநாட்டில் தமிழரசுத் தந்தை

**இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தின் தலைவர்களால், ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் இரு தடவைகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். முதல் தடவையாக, 58ம் ஆண்டு நாட்டின் முதலமைச்சராகவிருந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா நயமான முறையில் நம்முடன் செய்துகொண்ட உடன்பாட்டை எவ்வித முன்னறிவித்தலுமின்றி அவராகவே கிழித்தெறிந்தார். 1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி நம்முடன் செய்துகொண்ட உடன்பாட்டையும் இதே போல் மீறியுள்ளது. இவ்வாறு செய்வது மன்னிக்க முடியாத பெரும் அரசியல் குற்றமாகும். இதனைத் தமிழ் பேசும் மக்கள் ஒன்று திரண்டு எதிர்க்கவேண்டும்.**

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தந்தை திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் யாழ். கோட்டை மைதானத்தில்



திரு. சி. மூ. இராசமாணிக்கம்

தமிழரசு வாலிப முன்னணிப் பொருளாளர் திரு.ந. அருணாசலத்தின் தலைமையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் ஒன்பதாவது தேசிய மாநாட்டின் கடைசி நாள் நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

இந்நிகழ்ச்சிக்கு முன் நல்லூர் வன்னியசிங்கம் படிப்பகத்திலிருந்து, யாழ். கோட்டை மைதானத்திற்கு வரவிருந்த பிரமாண்டமான ஊர்வலம் தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளையின் தாயார் மரணமடைந்ததற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நிறுத்தப்பட்டது.


தொடர்ந்து பேசுகையில் திரு செல்வநாயகம் கூறியதாவது: இன்றைய சிங்கள ஆட்சி பீடத்தின் திட்டமிட்ட நடவடிக்கையால் கிழக்கு மாகாணத்தில் பெரும் பகுதி சிங்கள மக்களின் கைக்கு மாறிவிட்டது. வட மாகாணத்திற்கும் மெல்ல மெல்ல வருகிறார்கள். இந்நிலை தடுத்து நிறுத்தப்படவேண்டும். இல்லையாயின் நாம் பெரியதொரு ஆபத்தை எதிர் நோக்கவேண்டியவர்களாகிறோம். இந்நிலை தவிர்க்கப்படவேண்டுமாயின், ஒரே சிறந்த வழி பிராந்திய சபைகள் அமைப்பதேயாகும்.

அன்று நாம் திரு பண்டாரநாயக்காவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையிலும் பிராந்திய சபைகள் பற்றியே வலியுறுத்தினோம். அறுபதாம் ஆண்டு சிறீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளிலும் இதையே திரும்பவும் வற்புறுத்தி வந்துள்ளோம். ஆனால் பதவியைக் கைப்பற்றியதும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் நம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மறந்துவிட்டனர்.

தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாகிய எங்களது ஆதரவினால் பதவியில் அமர்த்தப்பட்ட இவர்கள், இன்று தமிழ் பேசும் மக்களின முதல் விரோதிகளாக நின்று தமிழ் பேசும் இனத்தை ஒழிப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

இந்நிலையை மாற்றியமைப்பதற்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரேயணியில் நின்று போரிடவேண்டும். அப்பொழுதுதான் நாம், நமது உரிமைகளைப் பெற முடியும். சுதந்திர மனிதர்களாக வாழலாம்.

அடுத்து தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எம். இராசமாணிக்கம் பேசுகையில் கூறியதாவது: இன்று வடக்கு கிழக்கு மாகாண மக்களோடு மலையகம் வாழ் மக்களும் இணைந்து விட்டார்கள். இது நமக்குப் புதிய சக்தியைத் தருகிறது. ஆகவே நமது போராட்டப் பாதை புதியசக்தியைப் பெற்றுவிட்டது. புதிதாக உண்டான இவ் வலுவை இனி எவராலும் பிரிக்க முடியாது.



திரு கே. ஏ. இராமன்

கடந்த 14 ஆண்டுகளாக இலங்கைத் தமிழரசுக்கட்சி வட கிழக்கு மாகாண மக்களை ஒன்றுபடுத்துவதுடனேயே நின்றது. இதில் மாபெரும் வெற்றியையும் கண்டது. இன்று மலையகம் சென்றுள்ளது நம் கட்சி. ஈழம்வாழ் தமிழ் பேசுமினம் என்ற ஒரே அணி உருவாகிவிட்டது. எனவே நமது எதிர்வரும் உரிமைப் போராட்டம் வலுவுள்ளதாக அமைவது நிச்சயம்.

மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கட்சியின் தொழிற் சங்கம், மலைநாட்டு மக்களின் பேராதரவைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களின் சாதாரண பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயலாமையே இன்று மலைநாட்டு மக்கள் பெரிதும் அல்லற்படக் காரணமாகும். பிரஜாவுரிமை, வாக்குரிமை, கல்வி உரிமை, தொழிலாளர் உரிமை ஆகியன இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை. வரவிருக்கும் போராட்டம் நிச்சயம் இந்நிலையனைத்தையும் மாற்றியமைக்கும்.

நாம் நம்மை ஆளவும், முழு நிர்வாகத்தில் பங்கு கொள்ளவும் கூடிய நிலை ஏற்பட்டால் ஒழிய நாம் உண்மையான சுதந்திரத்தை அடைந்துவிட்டதாகக் கருத முடியாது.

இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் திரு. பி. எம். கிருஷ்ணசாமி பேசுகையில் கூறியதாவது: 1947-ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றபோது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமக்கு ஆபத்து உண்டாவதை உணர்ந்திருக்க வேண்டும். 1949 வரைக்கும் இதனை எந்தத் தமிழ்த் தலைவர்களும் உணரவில்லை. 1949ல் நிலைமை மோசமாவதை உணர்ந்த தமிழரசுக் கட்சி பல கஷ்டங்களுக்கிடையே தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சியைவளர்த்து உரிமைக்காகப் போராடி வந்திருக்கிறது.

1952-ல் வட, கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் புறக்கணித்தபோதும் விடாமுயற்சியினால் 1956-ல் அக் கட்சி பெரும் ஆதரவைப் பெற்றது.

இன்று நம் மத்தியில் நேரடியாகத் தொழில்படத் தொடங்கியுள்ளது தமிழரசுக் கட்சி. எனவே மலையக மக்கள் இழந்த உரிமைகளைப் பெறும் காலம் அதிக தூரத்திலில்லை. காரணம், மலைநாட்டு மக்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றல், இந்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுள் தமிழரசுக் கட்சி ஒன்றிற்கே உள்ளது.

அடுத்து இலங்கைத் தொழிலாளர் கழக உப-தலைவர் திரு. ஏ. இராமன் பேசுகையில் கூறியதாவது: மலை நாட்டு மக்களின் இழந்த உரிமைகளைப் பெறப்போராட முன்வந்த தமிழரசுக் கட்சியுடன் மலை நாட்டு மக்கள் ஒத்துழைத்து ஆதரிக்கத் தயாராக இருக்கிறார்கள். மலைநாட்டு மக்களின் குடியுரிமை, மொழியுரிமைகளைப் பெற இலங்கைத் தொழிலாளர் கழகம் அயராது உழைக்கும்.

ஈழத் தமிழ்ப் பிரதேசத்தை சிங்கள ஆக்கிரமிப்பினால் காப்பாற்ற நீங்கள் தயாராக இல்லாவிட்டால், மலையக மக்கள் தயாராகவிருக்கிறார்கள் என்ற உண்மையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு பலரும் உரை நிகழ்த்தினார்கள்.

---

# வாரா வாரம் உங்களுக்கு!

இந்தப் பலா பலன்கள்:

1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணி 34 நிமிடம் முதல் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணி 16 நிமிடம் வரை.

மேடம்: [அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் காலிற் பிறந்தவர்களுக்கு] இவ்வாரத்தில் இவர்களுக்குப் பண விடயமாக எதிர்பாராத முன்னேற்றம் உண்டாகும். இல்லத்தில் மகிழ்ச்சிக்குரிய காரியங்கள் நடைபெறும். நண்பர்களிடமோ உறவினர்களிடமோ வீணாக விரோதிக்க நேரிடும். மேலதிகாரிகளிடமும் எஜமான்களுடனும் சாவதானமாகப் பழகவேண்டும். பெண்களுக்குப் பொன், புடவை என்பன வந்து சேரும். அடிக்கடி மனப்பயம் தோன்றிக்கொண்டேயிருக்கும். இந்த வாரம் தூரப் பிரயாணம் செய்வது கூடாது. 16, 17ம் தேதிகளை முற்றாகத் தவிர்க்குக. மன அதிர்ச்சிக்குரிய சம்பவங்கள் நிகழலாம், வாரத்தின் நடுப் பகுதியில் வயிற்றிற் சில கோளாறுகள் ஏற்படலாம்.

இடபம்: [கார்த்திகை 2-ம், 3-ம், 4-ம் கால் ரோகிணி மிருக சீரிடம் 1-ம்,2-ம் கால்] எடுத்த காரியங்கள் பல தோல்வியில் முடியும். எனினும் வார இறுதியில் பணம் சம்பந்தமான சகாயம் ஏற்படும். நினைத்திராத சில இடங்களிலிருந்து பண வரவு அல்லது அதற்குரிய சகாயம் ஏற்படும். வழக்கமான சில இடங்களையோ, வாடிக்கைக்காரர்களையோ மாற்ற வேண்டி ஏற்படும். புதிய எஜமான்கள் அல்லது மேலே க்காரர்கள் தொழில் மாற்றத்தினால் ஏற்படலாம். நண்பர்கள், உறவினர்கள், காதலர்களோடு தொடர்புவைத்துக்கொள்வதற்கு நல்ல வாரம்.

மிதுனம்: [மிருக சீரிடம் 3-ம், 4-ம் கால திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் கால்] இதிற் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் சுப பலனுக்குரியதல்ல. உடற் சுகம் குறையும், பார்ப்பவர்களுடன் எரிந்துவிழக் கூடிய மனநிலை உண்டாகும். மறைந்த சில நோய்கள் தலைகாட்டக் கூடும். 19ம் தேதி பிரதான கருமங்கள் ஒன்றிலும் ஈடுபடாது இருத்தல் மிகநன்று. திடீரெனச் சில அதிர்ச்சி தரும் சம்பவங்களும் நடக்கலாம். ஆடை, அணி இவைகள் கிடைக்கும், அல்லது இவைகளினால் இலாபம் உண்டாகும். பிரயாண பயம் உண்டு.

கடகம்:[ புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்] புத்திமீமான சில அலுவல்களைச் செய்தல், நிதானமிழத்தல், நிலைமாறுதல், அதனால் சங்கடங்கள், ஏற்படும். வழக்கு, அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளல், உத்தியோகத்தரை நேர்முகமாகக் காணுதல் இவற்றால் தோல்விஏற்படும். 22ந் தேதி சுப பலனுக்குரிய நாளன்று. 17ந் தேதி சுப பலனுக்குரியது. கை, கால் முதலியவற்றில் புண், காயம் ஏற்படலாம். தேக சுகத்திற்கு ஏற்ற வாரமன்று.

சிங்கம்: [மகம், பூரம், உத்தரம் 1ம் கால்] மனதில் அற்ப கவலை ஏற்படினும் வாரம் முழுவதும் இன்பமாகவே கழியும். விருந்துபசாரங்கள், இன்பமான கேளிக்கைகள் பொழுதுபோக்குகள் உண்டு. காதலர்களைச் சந்தித்தல், தொடர்பு கொள்ளுதல், அவர்களால் நன்மையடைதல் உண்டாகும். வழக்கமான சில இடங்களை விட்டு 'மாற வேண்டி'யும் நேரிடும். அதனால் அசௌகரியங்கள் நேரிடும். அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு கரும மாற்ற வேண்டியவற்றை விலக்குக. 16ந், 17ந் தேதிகளில் இது மிகவும்முக்கியம்.

கன்னி: [உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2 கால்] பணம் சம்பந்தமான கஷ்டங்கள் யாவும் தீரும். முன்னே முகத்தைக் கறுத்துக் காட்டியவர்களும் பண சம்பந்தமாகச் சிரித்து உதவி புரிவார்கள். 18ம் தேதி பிற்பகல் எந்தக் கந்தோரிலும் செய்யும் அலுவல்கள் நிறைவேறா. அவற்றைப் 15ம் தேதிக்கு மாற்றிக்கொள்ளவும். உடல் காரணமின்றிப் பலங் குன்றியது போலக் காணப்படும். சோர்வுண்டாகும். நண்பர்களும், உறவினரும் நெருங்கி அன்பு கொள்வர், உதவி புரிவர். இவ்வாரத்தை உறவினர், நண்பர்களோடு ஏதாவது கரும மாற்ற வேண்டியிருந்தால், அதற்காக ஒதுக்குதல் நன்று.

துலாம்: [ சித்திரை 1, 2, சோதி, விசாகம் 1,2,3,] மனத்திலிருந்த பெரிய பாரமொன்று 15ம் தேதிக்குப் பின் நீங்கும். உடல் முன்னிருந்ததிலும் நலம் பெறும். மன அயர்ச்சி, சோர்வுண்டாகும். புதிய தீர்மானங்களைச் செய்ய நேரிடும். ஆனால், மேலதிகாரிகளிடமோ எஜமானர்களிடமோ நன்மை பெறக் கருதி எதையும் கேட்கவேண்டாம். அதனால் மனத்தாங்கல் ஏற்படுமேயன்றி எதுவும் நிறைவேறாது. 15ம் தேதி ஏதாவது பொருள் நட்டமேற்படும். பண சம்பந்தமான அலுவல்களை 19ம் தேதிக்கு மாற்றுக. உறவினர்களோடும் நண்பர்களோடும் கழிக்கும் நேரத்தில் எதிர்பாராத சில நற்செய்திகள் கிடைக்கும்.

விருச்சிகம்: [விசாகம் 4, அனுஷம், கேட்டை] பகைவர்களைப் பற்றி இந்தவாரம் மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அடுத்துக் கெடுப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகள் ஏற்படலாம். பகைவர்களின் செய்கைகளினால் மனப்பயம் ஏற்படும். காரியங்கள் பல கெட்டுப்போகும். 15ம் தேதியும், 22ம் தேதியும் எக்காரியத்தையும் வெற்றியடைவதற்கென்று வைத்திருக்க வேண்டாம். எனினும் இடைக்காலத்தில் பண வரவு உண்டாகும். எதிர்பார்த்ததிலும் இருமடங்காகப் பண விடயத்தில் லாபம் உண்டு. புதிய நண்பர் எவரையும் அனுமதிக்கவேண்டாம்.

தனு: [மூலம், பூராடம், உத்தராடம் 1 கால்] வார முற்பகுதியில் தேக சுகம், ஊக்கம், உல்லாசம் என்பன உண்டாகும். எனினும் 17ம் தேதிக்குப் பின் வாரம் முடி

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர் ஜென்மம்

## இலவச விநோத குறுக்கெழுத்துப் போட்டி

### இடமிருந்து வலம்

1. சினிமாஸ் திரைகளில் ஓடிக் கொண்டிருக்கும் தமிழ்ப் படம்.

4. இவர் ஒரு பரம...... ஆனல் மாறியிருக்கிருர்.

5. இப்படத்தில் பத்மினிக்குக்கொடுக்கப்பட்டுள்ள பாகம்.

8. கதாநாயகனுகத் தோன்றும் நடிகரின் பெயர்.

10. இப்படத்தின் கலை அம்சங்களைக் கவனித்திருப்பவர்.

11. இசை அமைப்பாளரின் பெயர்.

### மேலிருந்து கீழ்

1. ராகினி இப்படத்தில் இந்தப் பாகத்தில் தோன்றுகிருர்.

2, கதாநாயகனை மயக்கும் இந்த விஷம் நம்மில் அனேகரையும் மயக்கத்தான் செய்கிறது.

3. அண்மையில் மறைந்த நடிகர் மாறிக்கிடக்கிருர்.

6. கதாநாயகன் தலைகீழாக நிற்கிருர்.

7. கதாநாயகனை மடக்க மாறிவிட்ட இது நடக்கிறது.

9. திரைக் கதை—வசனத்தை எழுதிய ஸ்ரீதர் தன் கைத்............முழுவதையும் காண்பித்திருக்கிருர். ஆனல் மாறியிருக்கின்றது.

..................... இவ்விடத்தில் கத்தரிக்கவும் .....................

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பு | ன | ர் | ஜெ | ன் | 2 ம | 3 ம் |
| ஷ் | ■ | ம | ■ | ■ | 4 | |
| 5 | 6 ர் | | 7 தி | ■ | ■ | ரா |
| ■ | 8 | ணே | | 9 ன் | ■ | யி |
| 10 | ங் | | ■ | | ■ | ■ |
| ■ | 11 | ல | ப | | | வ் |

பெயர் ..................................................

முகவரி ..................................................

..................................................

..................... இவ்விடத்தில் கத்தரிக்கவும் .....................

## விதிகள்:-

1. ஒருவர் எத்தனை விடையும் அனுப்பலாம்.
2. 'சுதந்திர'னிலிருந்து கத்தரிக்கப்பட்ட கூப்பன் மட்டுமே அனுப்பிவைக்கப்படவேண்டும்.
3. முழு விடைகளும் பூர்த்தி செய்யப்படாத கூப்பன்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4, பெயரும், முகவரியும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
5. இவ் விநோதப் போட்டி சம்பந்தமாக சுதந்திரன் காரியாலயத்துடனே. அல்லது சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்துடனே எவ்விதக் கடிதப் போக்கு வரத்தும் இருத்தலாகாது.
6. இப்போட்டியில் சுதந்திரன் காரியாலய ஊழியர்களோ, சினிமாஸ் லிமிட்டெட் ஊழியர்களோ பங்குபற்ற முடியாது.

## போட்டிக்கு கட்டணம் கிடையாது

### பரிசு விபரம்:

சரியான விடைகளிலிருந்து பரிசுக்குரிய மூன்று கூப்பன்கள் மட்டும் தெரிவு செய்யப்படும். அவற்றிற்கு முறையே மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

முதலாவது பரிசு: 6 றிசர்வ் அனுமதிச் சீட்டுக்கள்.

இரண்டாவது பரிசு: 5 றிசர்வ் அனுமதிச்சீட்டுக்கள்

மூன்ருவது பரிசு:— 4 றிசர்வ் அனுமதிச்சீட்டுக்கள்

இதைவிட சில ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

விடைகளுடன் சினிமாஸ் லிமிட்டெட் திரைகளில் அண்மையில் படம் பார்த்த அனுமதிச் சீட்டின் அடிக்கட்டை ஒன்று மட்டும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

★ போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

★ விடைகள் அனுப்பும் தபால் உறையின் மேற்புறத்தில் 'புனர் ஜென்மம்' இலவச விநோதப் போட்டி' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விடைகள் அனுப்பப்படும் விலாசம்:-

கலைப்பூஞ்சோலை,
தபால் பெட்டி 1183,
கொழும்பு.

முடிவுத் திகதி:- 19-2-63.

சரியான விடையும், பரிசு பெற்ருேர் விபரமும் 24-2-63 சுதந்திரனில் வெளியாகும்.

## பாலச்சந்தர் உருவாக்கும் பொம்மை

நூதனமான சம்பவங்களை மையமாக வைத்துத் துப்பறியும் கதை புனைந்து, அதை மக்கள் விரும்பும் சினிமாப் படமாக்குவதில் பாலச்சந்தர் திறமைசாலி. அவருடைய முதற் தயாரிப்பான 'இது நிஜமா' படம் இதற்குச் சான்று பகரும். அவருடைய முயற்சியால் உருவான 'அந்த நாள்' தமிழ்ப் படமும் பட உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

இந்த ரீதிபதியிலேதான் பாலச்சந்தர் தயாரித்த 'அவனு இவன்' அமைந்திருந்தது. புதுமைகளும், விசித்திர சம்பவங்களும் நிறைந்த 'பொம்மை' என்ற படத்தை தயாரிக்கின்ருர் பாலச்சந்தர்.

### ஓடாதே நில்!

பெயரைப் பார்த்ததும் ஆச்சரியம் ஏற்படுகிறதல்லவா?

'கொக்கோ டொக்ஸ் பில்ஸ்' என்ற ஒரு மாத்திரை இருக்கிறது. அந்த மாத்திரையை சிருஷ்டித்தவரே சாட்சாத் பாலச்சந்தர் தான். இத்தகைய மாத்திரையிலேயே கதாநாயகனின் உயிரை ஊசலாட வைத்து அற்புதமான ஒரு துப்பறியும் கதையை, விசேட உத்திகளைக் கையாண்டு படமாகத் தயாரித்து வந்தார் பாலச்சந்தர். ஆனல் பல நெருக்கடிகள் காரணமாக படம் இன்னும் ஓடவில்லை. இப்படத்திற்குத்தான் பெயர் 'ஓடாதே நில்'. இக்கதையின் கதாநாயகன் தற்செயலாக ஒரு உயிரற்ற மனிதனின் சடலத்தைக் காணுகிருன். கொலை நடந்திருக்கிறது. அந்தக் கொலையைச் செய்தவன் என்ற ஐயம் ஏற்பட்டு கதாநாயகனைப் பொலிசார் துரத்துகின்றனர். அவனுக்குள்ள நோய் தீர்க்க முடியாத தொன்று. தூக்காதவேளை தவிர விழித்திருக்கும் காலங்களில் சில நிமிடங்களுக் கொரு முறை ஒரு மாத்திரை உட்கொள்ள வேண்டும். தொடர்ந்து 3 மணி நேரம் இம் மாத்திரையை உட்கொள்ளாவிட்டால் அவனுடைய உயிர் பறந்துவிடும். கொலைக் குற்றம் சாட்டப்பட்டதனுல் பயந்து ஒளிந்து திரியும் அவனுடைய மாத்திரைகளும் முடிந்து விடுகின்றன.

இத்தகைய பயங்கரமான சூழ்நிலையில் ஏற்படும் சம்பவங்களை சுவையாக 'ஓடாதே நில்' படத்தில் புகுத்தியிருக்கிருர் பாலச்சந்தர். ஆனல் இந்தப் படம் பூர்த்தியாகித் திரைக்கு வரும் நாள் என்ருே?

தற்பொழுது பாலச்சந்தர் தயாரிக்கும் படத்தின் பெயர் 'பொம்மை'. இதுவும் ஒரு துப்பறியும் கதை தான். இக் கதையின் நிகழ்ச்சிகள் யாவும் ஒரே நாளில் 7 மணி நேரத்துள் நடந்து முடிகிறதாம். குறிப்பிட்ட நேரத்துள் வெடிக்கும் ஒரு குண்டு வைத்துச் செய்யப்பட்ட ஒரு பொம்மையின் மூலமாக ஒருவரைக் கொலை செய்ய முயற்சி நடைபெறுகிறது ஆனல் பொம்மையோ கைமாறிவிடுகிறது. அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ, யார் பொம்மையுள்ளிருக்கும் குண்டுக்குப் பலியாகுவார்களோ? என்ற பீதி பார்ப்போருக்கு ஏற்படக்கூடிய வகையில் கதையை பாலச்சநதிரன் இயற்றி இருக்கிருர்.

இப்படத்தில் எல். விஜயலட்சுமி, ராஜம், ரமேஷ், கோபாலகிருஷ்ணன், மாலி, ராகவன், சதன், சாந்தினி முதலியோருடன் பாலச்சந்தரும் தோன்றுகின்ருர்.

## சினனுக்கு அடித்தது யோகம்

சீனுக்காரன் யுத்தம் தொடங்கியதைத் தொடர்ந்து சீனுக்காரன் மீது மக்களுக்கு ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது போல சினிமாக்காரர்களுக்கு சீனுக்காரர்கள் மேல் மோகமும் பிறந்திருக்கிறது.

இல்லாவிட்டால் தயாராகும் புதுப் படங்களிலெல்லாம் சீனுக்காரர் வேடத்தில் முக்கியமான நடிக நடிகையர்கள் தோன்றுவார்களா?

நாஷனல் மூவிஸார் தயாரிக்கும் 'இரத்த திலகம்' என்னும் படத்தில் ஒரு சீனுக்காரனின் மனைவியின் பாத்திரத்தில் சாவித்திரி தோன்றுகின்ருர்.

இப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் சிவாஜிகணேசன் தோன்றுகின்ருர். யுத்தக் காட்சிகளை அஸ்ஸாம் மாகாணம்வரை சென்று படமாக்குவதெனத் தயாரிப்பாளர்கள் தீர்மானித்திருக்கின்றனராம்.



ஒன்றே குலம் நாடகத்தில் ஓய்வு கத்தியுடன் தோன்றும் இவர் தான் ஏ. பி. செல்லையா (பி. எஸ். வி.) 17—2—63-ல் இந் நாடகம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

## வீரப்பாவும் சீனரும்

நடிகர் வீரப்பா தயாரித்து தற்பொழுது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'ஆலயமணி' படத்தை அடுத்து ஆனந்த ஜோதி' என்ற பெயரில் ஒரு படம் தயாரித்து வருகிருர். இப்படத்தில் புரட்சி நடிகர், ராதா முதலானேர் நடிக்கின்றனர். இப்படத்திலும் சீன யுத்தம் இடம் பெறுகிறது. நாட்டின் பாதுகாப்புக்காக மக்கள் செய்ய வேண்டிய தியாகம் எத்தன்மை உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தைக் கருவூலமாகக்கொண்டு ஜாவர் சீதாராமன் கதையை அமைத்திருக்கிருர். இப்படத்தில் சீனனின் உளவாளியாக வீரப்பாவே நடிக்கிருர்.

## ராஜேந்திரன் தலைவர்

தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்வு அண்மையில் நடைபெற்றது. 1963-ம் வருடத்துக்குச் சங்கத் தலைவராக இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பொதுச் செயலாளராக கே. ஏ. தங்கவேலு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

## ஆசிரியர் சங்க மாநாடு

மட்டக்களப்பில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக சபையின் தீர்மானப்படி தோட்டப் பாடசாலைகளினதும் ஆசிரியர்களதும் நலனை முன்னிட்டு ஒரு மகாநாடு நடைபெறவிருக்கிறது.

இம் மாநாட்டில் தோட்டப் பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து நிரைப்படுத்தல், அப்பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடவேண்டிய புதிய செயல் முறைகள் எவை யென ஆராய்ந்து அவற்றை அமுல் நடத்தல் போன்ற விடயங்கள் பற்றி முடிவெடுக்கப்படும்.

இம் மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் இம் மாநாடு ஆரம்பமாகிறது. இந்த மகாநாட்டுக்கான ஆயத்தங்களை தோட்டப் பாடசாலைகள் சங்கக் காரியதரிசி திரு. வி. கே. சுசராஜசிங்கம், அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க உப செயலாளர் திரு. டி. எஸ். கே. வணசிங்க ஆகியவர்கள் செய்து வருகின்றனர்.



குளத்திலே தாமரை மலர்வதுண்டு. சல சல என்ற சப்தத்துடன் ஓடும் அருவியிலே மலர்ந்திருக்கின்றன இரு மலர்கள் அழகு முகங்காட்டும் இவ்வெழில் மலர்கள் 'பாத காணிக்கைக்காக இப்படி இணைந்திருக்கின்றன.

சரவணு பிலிம்ஸார் தயாரித்துள்ள "பாதகாணிக்கை"யில் விஜயகுமாரியும் சாவித்திரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையின்றேல்..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இனம் ஒன்ருக இயங்கி வாழ எடுக்கப்பட்ட முயற்சியை நாம் பெரிதும் மகிழ்ந்து பாராட்டுகிருேம், வரவேற்கிருேம்.

தமிழ்பேசும் மக்கள் ஒதுக்கப்பட்டு வருகிருர்கள். இந்நிலை தொடருமானுல் 30 லட்சம் தமிழ் பேசும் மக்கள், திரண்டு ஒற்றுமைப் படுவர்; முக்கியமாக, இலங்கையின் வட-கிழக்கைத் தவிர்ந்த மற்றப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தமிழ்ப் பிரதேசத்திலும் அதற்கடுத்த பகுதிகளிலும் வந்து குடியேறி புதுவாழ்வு நிர்மாணிக்க நிர்ப்பந்திக்கப்படுவர்.

அவர்கள் எல்லோரும் பிரிவினை மனப்பான்மையையே வளர்ப்பர். அவர்கள் நடத்தும் இயக்கங்களும் பிரிவினைக்கு வழிகோலும். இந்நிலையில் சிங்கள மக்களும் தலைவர்களும் விழித்தெழுந்து கூட்டாட்சி அமைப்பையும், தமிழ் பேசும் மக்களின் சகல உரிமைகளையும், வழங்கி, நாட்டை ஒற்றுமைப்படுத்திஞல் பிரிவினை தவிர்க்கப்படலாம். அன்றேல் இந்நாடு இரண்டு சுதந்திர நாடுகளாகப் பிரியும் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பிரிவினில் அடுத்து வரும் ஐந்து வருடங்களில் நாமும் சிங்கள அரசாங்கமும் எடுக்கும் எதிரெதிரான நடவடிக்கைகளும், சீன-இந்தியத் தகராறும் முற்றி விளைந்தால் அதுவும், மூண்டு எழும் உலக யுத்தம் நிகழின், அது தானும் இந்நாட்டில் வாழும் இரு இனங்களின் எதிர்கால உறவினை நிர்ணயிக்கும்.

### சம சமாஜிஸ்டுகளின் நிலை

கட்சிகளின் எதிர்கால அரசியல் போக்கினை ஆலோசிக்குமிடத்தில் நாட்டின் ஒற்றுமைக்கும் தமிழ் பேசும் இனத்தின் உரிமை நிலைவற்றிற்கும் தளராது நின்ற சமசமாசக் கட்சியைப் பற்றி நான் ஒன்றும் கூறவில்லை என்று நினைக்கலாம். இக்கட்சிக்கு அடுத்து வரும் சில காலங்கள் செல்வாக்கற்றன என்பது யாவரும் ஏற்ற விஷயமாகும். இலட்சியவாதிகளான சில தலைவர்களை இக்கட்சி கொண்டியங்குகிறது. ஆனல் சிங்கள மக்கள் இவர்கள் கட்சிக் கொள்கையை ஏற்கவில்லை. இன்று பாராளுமன்றத்தில் அவர்களுடைய பலம் மிகக் குறைவானது.

கொம்யூனிஸ்ட் கட்சியை நம் இளைஞர் கைவிட்டதன் காரணம் ஆராய்ந்து அறியவேண்டியதல்லதாய் மிகவும் வெளிப்படையானது. இக்கட்சியின் நிலையற்ற போக்கும் நேர்மையற்ற நடவடிக்கையுமே இதற்குக் காரணம். ஆனல் சம சமாசக்கட்சி தமிழ் பேசும் மக்களிடை செல்வாக்கு இழந்து வரும் காரணங்கள் ஆராய்தலுக்குரியன. அவையாவன: 1. இக்கட்சி சிங்கள மக்கள் ஆதரவைப் பெற முடியாது அரசியலில் அறுகிக் குற்றுயிராய்க் கிடத்தல். 2. இக்கட்சி போதிக்கும் வர்க்கப் போராட்டம் நிகழாது, பதிலாக இனப் போராட்டம் நிகழுதல். 3. பலாத்காரப்புரட்சி, சர்வாதிகாரம் என்ற முறைகளிலும் பார்க்க சத்தியாக்கிரகம், விடுதலை, சனநாயகம் என்ற வழிகள் உயர்ந்ததாகவும் சாத்தியமானதாகவும் தோன்றுதல். 4. இலங்கையின் தேசிய ஒற்றுமையை இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் தன் சக்தியால் உருவாக்கும் என்னும் கூற்று ஏட்டுச் சுரக்காய் போல் பயனற்றிருத்தல். இலங்கையில் ஒற்றுமைப்பட்ட சக்திவாய்ந்த தொழிலாளர் இயக்கமில்லை. வகுப்புவாதம் உள்பட பல காரணங்களால் தொழிலாளர் பிரிந்து நிற்கின்றனர். துடன் பலமும் ஒற்றுமையும் உடைய தொழிலாளர் பகுதியினர் மலை நாட்டில் தமிழராய், நாடற்றவராய், இலங்கையர் அல்லாதவராய்க் கருதப்படுகின்றனர். இச்சூழ்நிலையில் இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தைத் திரட்டி நாட்டின் ஒற்றுமையையும் சிறுபான்மையோரின் உரிமைகளையும் நிலைநாட்டலாம் என்பது சக்திவாய்ந்த அரசியல் இயக்கத்தோடு தொடர்பற்ற வெறும் கொள்கையேயாகும்.

### தமிழ் மக்களும் பொருளியல் நிலையும்

இந்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும்? நாம் நம் மக்கள் சக்தியை மேலும் திரட்ட வேண்டும். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை இயக்கரீதியாக ஒன்றுபடுத்த வேண்டும். தொடர்ந்து நாம் திட்டமிட்டுப்போராட வேண்டும். அரசியல் நேரடி நடவடிக்கையாக அமையும் சத்தியாக்கிரக சட்டமறுப்பு ஒத்துழையாமை இயக்கத்துக்கு முதற்படியாகவும் துணை நடவடிக்கையாகவும் இரு துறைகளில் திட்டமிட்ட நடவடிக்கை வேண்டும். ஏற்றத் தாழ்வுகளால் பிரிந்து நிற்கும் தமிழ்பேசும் சமுதாயத்தை ஒற்றுமைப் படுத்தவேண்டும், முக்கியமாகச் சாதி வித்தியாசம் ஒழிக்கப்படல் வேண்டும். எல்லாரும் சமத்துவமும் தன்மானமும் பெற்று ஒற்றுமைப் பட வேண்டும். இதற்கும் ஒரு திட்டம் உடனே அவசியம். மற்றது உள்ளடக்கிய பொருளாதார நெருக்கடியை சிறிதேனும் தீர்க்க ஒரு திட்டம் வேண்டும். முக்கியமாக உணவு உற்பத்தியை அதிகரிக்க வழி வகை செய்தல் வேண்டும். சிங்கள அரசாங்கத்தின் அதிகாரமும் கட்டுப்பாடுகளும் இருக்கும் போது பொருளாதார முயற்சி சுதந்திரமாக இடையூறின்றி நிகழ்வது கஷ்டம்தான். ஆனல் சிறிய திட்டமொன்று நம் வாலிபருக்கு— முக்கியமாக வேலையில்லாது கஷ்டப்படும் வாலிபருக்கு— வேண்டும்.

இப்படி இம்மூன்று துறைகளிலும்-அரசியல் இயக்கம், சமூக சீர்திருத்தம், பொருளாதார முயற்சி-வாலிபரை ஈடுபடுத்தும் திட்டம் வகுத்தல் கட்சியின் பொறுப்பு. இத் திட்டங்களை அமுல் நடத்த நம் வாலியர் திரள் திரளாகத் தொண்டராகித் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். துணிவான செயலும், அயராத உழைப்பும், குறையாத தியாகமும் நமக்கு வேண்டும். வாலிபர் முயற்சியால் இத்திட்டங்கள் வெற்றி பெறவேண்டும்.

வாழ்க தமிழ் இனம்! வெல்க தமிழரசு! வளர்க இலங்கையின் ஒற்றுமை!



மட்டக்களப்பு தமிழாசிரியர் சங்கத்தின் ஆதரவில் நடாத்தப்படும் பல்கலைக் கழகப் புதுமுக வதுப்பு இரண்டாம் வருட ஆரம்பத்தை, வித்துவாதரிசி திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிருர். அவர் அருகில் நிற்பவர் திரு. வ. சிவசுப்பிரமணியம் ஆசிரியர். இந்த வைபவத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படத்தில் காண்க.

—படம்: 'இதயம்'.

## வார பலன்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் வரை தேக சுகம் நன்ருயிராது. வாகனங்களிற் தூரப் பிரயாணஞ் செய்தல், நீர்மேற் பிரயாணஞ் செய்தல் ஆகாது. பொருள் வரவு உண்டாகும், பெரியோர் புத்திமதியினுல் நன்மையுண்டு. 19ம் தேதி சந்திரனுக்கு விசேட வழிபாடு செய்வதஞல் நன்மையுண்டாகும். இந்த வாரம் சுப பலனுக்குரியதன்று.

மகரம்: [உத்தராடம், 2,3, 4, திருவோணம், அவிட்டம் 1,2 கால்] நீதிஸ்தல சம்பந்தமான விடயங்களில் தோல்வி, மனப்பயம் உண்டு. மனச் சந்தோஷம், இன்பமான பொழுதுபோக்கு, சில வேளைகளில் புத்திக் குறைவான காரியங்களைச் செய்து நட்டமடைதல், பண சம்பந்தமான விடயங்களில் இலாபம் உண்டு. எனினும் அதிக தொகை கொண்ட பணம் கையாண்டு செய்ய வேண்டியவற்றைப் பின் போடுக. 18ம் தேதி பண விடயமான காரியங்களைச் செய்யலாம். 21, 22ந் தேதிகளில் பிரதான கருமங்கள் செய்வது கூடாது. இடையிடை மனக்கிலேசமும் உண்டு.

கும்பம்: [அவிட்டம் 1, 2 சதயம், பூரட்டாதி 1, 2, 3 கால] இந்த வாரம் பல விதமான நற்கருமங்களும் உண்டாகும் மகிழ்ச்சி, குதூகலம், உற்சாகம், இலட்சுமீகரம் முகத்தில் தாண்டவமாடும். விருந்து, களியாட்டம், போசன சுகம் என்பன உண்டு. 15, 16ந் தேதிகளில் சரீர சுகக் குறைவு காணப்படலாம். பணநஷ்டம், வீண் செலவும் உண்டு. வைத்தியர்கள், விருந்தாளிகள் என்பவர்களின் செலவைப் பற்றியும், பிரயாணம் உணவு என்பவைகளைப் பற்றிய செலவைப் பற்றியும் கட்டுமட்டாக இராவிட்டால் கடன் ஏற்படும். 21ந் தேதி மிகவும்அதிர்ஷ்டமானநாள்.

மீனம்: [பூரட்டாதி 4, உத்திரட்டாதி ரேவதி] இவர்களின் பணம், நிலை என்பன வற்றிற்கேற்ப நடக்க முடியாத பலமின்மை காணப்படும். பண விடயங்களில் மிக உஷாராக இருக்கவேண்டும். வேண்டாத பல செலவுகள் ஏற்படும். வயிற்றில் கோளாறுகள் ஏற்படும். எனினும், பண வரவும் பணம் சம்பந்தமாகப் பலருடைய உதவியும் கிட்டும். 15ம் தேதியில் பிரதான காரியங்களைப் பின் போடுதல் நன்று. எப்படியாயினும் தம் நிலை இழக்காதவாறு காத்துக் கொள்ளலாம்.

# பாட்டாளித் தலைவனே!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வெந்தழல் பட்ட புழுவென வெம்பினர்!

துயருறும் மலைத் தமிழன் துயர் துடைக்க சிலர் சேர்ந்தனர்.

அமைப்புக் கண்டனர்; அதில் நீ ஒருவன்!

காலம் சென்றது!

மலையக மக்களின் உரிமைக்காகத் தோன்றிய இயக்கத்தில் சுயநலம் கலக்கத் துவங்கியது!

சில தலைவர்கள் சுயநலமிகளாக மாறினர்!

அவர்கள் மத்தியில் நீ ஒருவன்தான் பொதுநலத்துடன் உழைத்தாய்!

ஓய்வு என்பதே என்னவென்று உனக்குத் தெரியாதே! உழைப்பு ஒன்று தானே நீ பறிந்தது!

பொதுநலத்தைப்பொழுது போக்காக நாடுவர் சிலர். பொருள் சேர்க்க நாடுவார் சிலர். ஆனல், நீ ஆற்றிய பொதுப் பணியில் ஒரு துளியும் தன்னலமில்லையே!

பொது வாழ்வுக்கு மோசம் வரக் கூடாதேயென்று உன் சொந்த இன்பங்களையும் துறந்தாய்! நீ திருமணங்கூடச் செய்து கொள்ளவில்லை — மணம் செய்து கொண்டால் மக்கள் தொண்டுக்குப் பங்கம் ஏற்படுமோ என்று பயந்து. எத்தகைய தியாகி நீ!

உனது இந்தத் தியாகத்தை எண்ணிடும்போது நமது கண்கள் குளமாகின்றன!

மற்றவர்களைப்போல உன்னிடம் ஆரவாரம் கிடையாது! படாடோபம் கிடையாது! அமைதியின் மொத்த உருவம் நீ!

எங்கே தொழிலாளர்கள் கண்ணீர் வடிக்கிருர்களோ அங்கெல்லாம் சென்று, அவர் தம் கண்ணீரை உன் கைகள் துடைக்குமே!

ஐயகோ! உன்னைப் பிரிந்து கையறு நிலையிற் கதறுகின்ருேம்! உன்னைப் பிரிந்து கதறும் மலையகத் தோழனுக்கு என்ன ஆறுதல் சொல்லப் போகிருேம்?

சில ஆண்டுகட்கு முன் ஈடு செய்யமுடியாத நஷ்டத்தை அனுபவித்தோம்— வன்னியனரைப் பிரிந்தபோது!

அந்தத் துன்பம் தீரு முன்னம், உன்னையும் இழந்தோம்! வன்னியருக்கு ஏற்பட்டதைப் போன்ற அதே மரணம் உனக்கும் ஏற்பட்டிருக்கிறது!

உலகிலே, நல்லவர்களுக்கெல்லாம் ஒரே மாதிரி மரணம் ஏற்படும் போலும்!!

விண்ணுலகிலே வன்னியரை நீ சந்திப்பாய்!

நீயும் வன்னியனரும் இணைபிரியா நண்பர்களாமே!

நண்பர்கள் இருவரும் ஒன்று சேர்ந்துவிட்டீர்கள்!

வன்னியர் சென்ற பின்பு நடந்த சம்பவங்களை, நீ அவருக்கு சொல்வாய்!

நீங்கள் இருவரும் அங்கு மகிழ்வீர்கள்!!

தியாகப் பிழம்பே! திண்ணம் சேர் தலைவனே!!

மலையகத் தமிழர்கள் உரிமைபெற உண்மையுடன் நீ உழைத்தாய்!

உரிமைகள் பெற முன்பு பறந்து சென்ருய்!

உன்னைப்போல எங்களால் உழைக்க முடியாவிட்டாலும், நீ விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வோம்!

மலையகத் தமிழன் உரிமை பெறஉழைப்போம்!! இதுவே நாம் உனக்குச் செலுத்தும் இறுதி அஞ்சலி!!

## கொழும்பில் மகாசிவராத்திரி விழா

கொம்பனித் தெரு சிவராத்திரி தொண்டர் சபை ஆதரவில் கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலில் 22-2-63 வெள்ளிக்கிழமை தொடக்கம் 24-2-63 ஞாயிறு வரையும் விசேட அபிசேக ஆராதனையுடன் இசைக் கச்சேரி, விரிவுரை, கதாகாலக்ஷேபம், இன்னும் பல கலைநிகழ்ச்சிகளும், நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கை பல்கலைக் கழக பௌதிகத் துறை பேராசிரியர் திரு. ஆ. வி. மயில்வாகனம் அவர்களின் தலைமையில் விழா நடைபெறும்.

முதல் நாளைய நிகழ்ச்சி காலை 10 மணிக்கு ஆரம்பமாகி விடியற்காலை 3-15 வரை தொடர்ந்து நடைபெறும். அன்றைய நிகழ்ச்சியில் திருவாளர்கள் அ. வேல்சாமி, ச. சுப்பையா, ஆ. வி. மயில்வாகனம், சைவப் புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இசைமணி. பூமணி. இராசரெத்தினம், தா. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். அத்துடன் வி. கே. ஆறுமுகம் கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா, நவநாத விநோதன் ப. தியாகராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கப் பேச்சுப் போட்டி

இம்மாதம் 16-ம் 17-ம் திகதிகளில், வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் மேற்படி போட்டிக்கான ஆரம்ப போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இப்போட்டியில் பங்குபற்றுவதற்கென கொழும்பிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் ஏறக்குறைய நூறு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. பொதுப் போட்டி, மேற்பிரிவு, கீழ்ப் பிரிவு, பாலர் பிரிவு என நான்கு பிரிவுகளாக இப்போட்டி நடைபெறும். இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்கள், வெள்ளிப் பதக்கங்கள், நூல்கள் வழங்கப்படும்.

## இலங்கை வாழ்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளது. தொழிலாளர்கள்நிறைந்த அட்டன் பகுதியில்இக் கழகக் காரியாலயத்தைதிறந்துவைப்பதில் பெருமையடைகின்றேன்' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழரசுக் கட்சியின் வேலைத் திட்டங்கள் புனிதமானவை. ஆகவே, இக் கழகத்தை வளர்த்து, தமிழ் பேசும் மக்களாகிய நாம் எல்லோரும் ஒன்றுபட்டு சுதந்திரமாக வாழ, வழி வகுத்துக் கொள்வோம்" என்ருர்.

## உரிமை பெற...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை நாம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கத் தயாராய் இருக்கின்ருேம்.

மலைநாட்டுத் தொழிலாளர்களின் அரசியல், பொருளாதாரகோரிக்கைகளைபெற்றெடுப்பதற்காக இலங்கைத் தமிழரசுக் கொடியின் கீழ் மலைநாட்டுத் தொழிலாளர்களை அணிவகுக்கச் செய்வதின்மூலம், மலைநாட்டுத்தொழிலாளர்களின் சரித்திரத்தில் ஓர் புதிய அத்தியாயம் ஏற்படுத்துவதில் எமது இலங்கை தொழிலாளர் கழகம் நிச்சயம் வெற்றிபெறும்.

கழக உப தலைவர்களில் ஒருவராகிய திரு ஆர். எம். ராமையாவும் மற்றும் திரு செ. கலியபெருமாள் ஆகியோர்உட்பட மற்றும் பலரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவள்!

(மு.க. ராஜா, மத்துகம)

அவள்!.......யார் அவள்? அதோ, புயல், பூகம்பம் வெள்ளம், வேதனை எல்லாம் தாங்கிக்கொண்டும் இளமையோடிருக்கின்றளே அவளேதான்! ஆனல்.........

முன்னர் அவளுக்காகச் சொந்தம் கொண்டாடியவர்கள் எத்தனையோ பேர். சேரனும், சோழனும், பாண்டியனும், பல்லவனும் எல்லாருமே அவளை விரும்பினர். அவளது வாழ்விற்றன் அவர்தம் வாழ்வே தங்கியிருந்தது. அவளின்றேல் அவர்களும் இல்லை! இம் மா மன்னர்கள் தங்களிடையே போட்டியும், போரும் செய்தனரென்றலும் அவளையிட்டுப் போரிடவில்லை. அவர்கள் தனித்தனியே அவளைக் காத்தனர். ஆனல்......

நம்மிடையேயிருந்த புலவர்களோ அனந்தம். இவர்களும் அவளைக் காதலித்தனர். தம் உயிரையும் அவளுக்காக அர்ப்பணித்தனர். பாக்களால், பாடல்களால், காவியங்களால், காப்பியங்களால் ஏற்றியும் போற்றியும் காக்கப்பட்டாள், இன்றும் கூட அவர்களால் தம் கண்மணிபோல் காக்கப்படுகின்றள். ஆனல்.........

அதோ அவளருகில் பல நங்கையர்கள். யார் அவர்கள்? அவளது குழந்தைகள் தான் அத்தனைபேரும். அவர்கள் அவளால் பிறந்தவர்கள்தான். அவளின் வளர்ப்புப் பிள்ளைகள்! அந்தக் குழவிகள் அவளின்றேல் பிறந்திருக்க முடியாது. இன்று குமரிகளாகிவிட்டார்கள். ஆனல் தம் தாயின் எழில் இல்லையே! ஏன்? அவளோ இன்னமும் பூத்துக் குலுங்கும் இளமையோடு இருக்கின்றளே. அந்தப் பெண்களுக்கு மாத்திரம் ஏன் அந்தத் தனித்தன்மை இல்லாது போயிற்று! விந்தைதான்! அவள் ஒரு அதிசயப் பிறவி. இல்லாவிட்டால் இத்தனை குறுகுறுப்போடு இருப்பாளா என்ன? ஆனல்......

ஆனல் அவளது இன்றைய நிலை...! அவளருகிலிருக்கும் அவள் வளர்த்த பெண்ணின் கண்களின் நச்சுப்பார்வை...! அப்பப்பா! ஆம்! தன் தாயின் உயிரையே குடித்து வளரும் வாழைக் கன்று போல் அவள் தன் பிள்ளையாலேயே உறிஞ்சப்படுகின்றள். தாயின் அந்தஸ்தே பறிக்கப்பட்டுவிட்டது. சிறிது சிறிதாக இல்லாமலாக்கப்படுகின்றள். அதுவும் நேற்றுப் பிறந்தவளால். மகள் தாயைப் புறக்கணிக்கும் கொடுமை எங்குதான் உண்டு!

வேதனையை அவளால் தாங்கவே முடியவில்லை. கண்ணீர் உகுக்கின்றள்! தன் நிலையை எண்ணி ஏங்குகின்றள்! வாழத் துடிக்கின்றள்! தன் சொந்தப் பிள்ளைகள் விரைந்து செயலில் இறங்க மாட்டார்களா எனப் பரிதாபமாகப் பார்க்கின்றள்.

யார் அவள்? அவள்தான் நம் இன்னுயிர் அன்னை "தமிழ்".

ஏக்கத்தோடு எம்மைப் பார்க்கும் அவளுக்கு நாம் என்னதான் செய்யப்போகின்றேம்? என்னதான் செய்திட வேண்டும்? இதோ:-

இன்றே நாம் "வாழ்ந்தால் தமிழ்ப் பேசிப் பேசித்தான் வாழ்வோம்; இல்லையேல் அதற்காகவே போராடி மரிப்போம்!" எனச் சபதம் செய்யவேண்டும்.

"நம் நாவை அறுத்து நரிகளுக்குப் போட்டாலும் அன்னியன் அடிவருடிகளாய் மாறமாட்டோம், அவன் மொழியைப் படிக்கமாட்டோம்!" என உறுதி எடுக்க வேண்டும்!

"நெஞ்சை அறுத்து கொதிக்கும் 'தாரி'யை ஊற்றினலும் தமிழுக்குத் துரோகம் செய்ய மாட்டோம்!" எனச் சத்தியம் செய்திடல் வேண்டும்.

இதைச் செய்ய முடியாத உறுதியற்ற உளுத்த மனம் கொண்ட த...மி...ழ...ர்...கள்...(!) உறுதியூண்ட வீரத் தமிழ்க் காளையர்களுக்குத் தங்கள் "வ...ள...ம...ர்... கருத்துக்களை யாதல் கூறி இருக்கட்டும்.

தமிழ் வாழ்க!

## உங்களுடன்... ...ஒரு வார்த்தை

எஸ். முருகையா, நாவலப்பிட்டி: உமது அங்கத்துவ எண் 3524 என்று எழுதியுள்ளீர். அது தவருகும். சரியான எண்ணை அனுப்பி வைக்கவும்.

சி. சுந்தரராஜா, தாவடி: மன்னிக்கவும். தனிப்பட்ட வாழ்த்துக்கள், அறிவிப்புகள் 'வளர்மதி'யில் இடம் பெரு.

ஆனந்தராசா, மாதகல்: சினிமா மெட்டில் எழுதப்பட்டிருக்கின்றன, உமது பாடல்கள். அவை ஏற்கப்பட மாட்டா. கவிதைகள் எழுதுவதை விட்டு, கதை, கட்டுரை எழுதுவதில் முயற்சி செய்யும். தகுதி எனில், கட்டாயம் பிரசுரிப்பேன். அவசரப் படுவதில் பயனில்லை.

எஸ். பாக்கியசாமி, கட்டவனை: காந்தித் தாத்தா பற்றிய உமதுகவிதை நன்ருக விருக்கிறது. தகுந்த சந்தர்ப்பத்தில் அது பிரசுரிக்கப்படும்.

இ.கந்தசுவாமி, அச்சுவேலி: போட்டிகள் நடாத்துவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. என்றலும், உமது யோசனை பற்றி ஆலோசிக்கிறேன். கேலிச் சித்திரங்கள் தாராளமாக அனுப்பலாம். யாரையும் புண்படுத்தாத முறையில், நகைச்சுவை மிக்கதாய் சித்திரமும், துணுக்கும் அமைய வேண்டும். 'பயங்கரக் கரடி' தொடர் கதையைப் பாராட்டியிருக்கிறீர். நன்றி.

கே. கணபதிப்பிள்ளை, பருத்தித்துறை: உமது அஞ்சல் அட்டை கிடைத்தது. 'ஈழத்துப் பெரியார்' கட்டுரைகளைப் பரிசிலனை செய்ய அவகாசம் கிடைக்கவில்லை. கொஞ்சம் பொறுமையுடன் இருங்கள். பார்த்துப் பிரசுரிக்கிறேன், இரண்டொரு மாதங்களில்.

வி. சண்முகலிங்கம், நாரந்தனை: 'சுதந்திரன்' தடை செய்யப்பட்ட பின் மீண்டும் வெளிவந்த காலந்தொட்டுச் சேர்ந்த 'வளர்மதி' அங்கத்துவர் மட்டுமே விஷயதானஞ் செய்யலாமென யார் உம்மிடம் கூறினர்கள்? அப்படியொரு நியதியுமில்லையே! பழைய, புதிய மருமக்கள் யாவரும் மருமக்கள்தானே!

ந. ஸ்ரீதரன், தெல்லிப்பளை: உமது அங்கத்துவ எண்ணைத் தொலைத்து விட்டீரா? சரி—தேடிப்பிடிக்கும் வேலை இனி என்னேடுதாணக்கும்! பார்ப்போம், பார்ப்போம்.

—வளர்மதி மாமா

## இளவரசியும் ஓட்டப்பந்தயமும்

—சி. சிவசக்தி, பண்ணகம்—

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஓர் அழகிய மகள் இருந்தாள். அவள் அழகி என்பது மட்டுமல்லாமல் ஓட்டப் பந்தயத்தில் அவளை வெல்ல எவரும் இல்லை. வாயு வேகம், மனே வேகம் என்பது போல் அவளும் ஒவ்வொருவரையும் வெற்றி கொண்டு வந்தாள். அவள் பருவம் அடைந்தாள்.

அவள் அழகைக்கண்டு பல நாட்டு மன்னர்கள் அவளை மணக்க முன் வந்தனர். அரசன் தன் மகளை அழைத்து, வந்த அரசர்களுள் ஒருவனைத் தேர்ந்தெடுக்கும்படி சொன்னன். அவள் தனக்கு வரும் கணவன் தன்னை ஓட்டப்பந்தயத்தில் வெற்றி கொள்ள வேண்டும் என்று கூறினள். அவள் கூறிய காரணம் அரசனுக்கு நன்கு புலப்பட்டது. அவள் கூறிய காரணம் என்ன வென்றல் தன்னை எவரும் ஓட்டப் பந்தயத்தில் தோற்கடிக்க இயலாது—அதனல் தான் எவரையும் மணக்க நேரிடாது என்பதே.

உடனே அரசன் தன் மகளை மணக்க விரும்புவோர் அவளை ஓட்டப் பந்தயத்தில் வெல்ல வேண்டும் என்று ஒரு நிபந்தனையை விதித்தார். பல நாட்டு மன்னர்கள், மந்திரிகள், இளவரசர்கள், இராசகுமாரியைத் தோற்கடிக்க முன்வந்தனர். ஆனல் இவளுடன் ஓடிய ஒவ்வொருவரும் தோற்றனர். இராசகுமாரிக்கு தன் தந்திரம் பலித்தது என்று குதூகலம் அடைந்தாள்.

ஒரு நாள் ஒரு ஏழையின் மகன், தான் இராசகுமாரியை ஓட்டப்பந்தயத்தில் தோற்கடிப்பதாகக் கூறி முன் வந்தான். அரசனின் மகளுக்கும் ஏழையின் மகனுக்கும் நடக்கப் போகும் பந்தயத்தைப் பார்க்க மக்கள் திரள் திரளாக வந்தனர். ஓட்டமும் ஆரம்பமானது. அரசன் மகள் நன்னுடன் போட்டியிட வந்தவனை தன் முன் ஓட விட்டாள்.

முன்னல் சென்ற ஏழையின் மகனைக் கடக்க முன்னேறிக்கோண்டிருந்தாள். அப்பொழுது ஏழையின் மகன் ஓர் தங்க மாம்பழத்தை எடுத்து எறிந்தான். அவள் அதை எடுத்துக் கொண்டு ஓடினன். பின்பு ஓர் அழகிய ரோஜாமலரை எறிந்தான். அவள் அதையும் எடுத்துக் கொண்டு ஓடினள். பின்னர், ஏழையின் மகன் ஓர் அப்பில் பழத்தை எறிந்துவிட்டு ஒரு கணமேனும் நில்லாமலே ஓடினன். அவள் அதனையும் எடுத்துக்கொண்டு ஓடினள்.

ஆனல் ஏழையின் மகன் குறித்த இடத்தைக் கடந்து விட்டான். ஓட்டப்பந்தயம் பார்க்க வந்த மக்கள் எல்லோரும் கைதட்டினர். இராசகுமாரி வெட்கித் தலை குனிந்தாள். பின்பு இராசகுமாரியை ஏழையின் மகன் மணந்தான். இருவரும் நீண்டகாலம் இன்புற்று வாழ்ந்தனர்.

வெகு விரைவில்!

விறுவிறுப்பு நிறைந்த

ம
ர்
ம
த்

தொடர் கதை!




மேலேயிருப்பவர், பில் ரஸெல் என்பவர். இவர் அமெரிக்க வலைப் பந்தாட்ட ஒலிம்பிக் கோஷ்டியைச் சேர்ந்த விளையாட்டு வீரராவர். இவர் எதிர்காலத்தில் கணக்காளராகக் கடமையாற்ற விரும்புகிறர். இவருடைய பொழுது போக்கு, கார் ஓட்டுவதும், சினிமாப் பார்ப்பதுமாகும்.

## மட்டக்களப்பு சிறுவர் கலைக்கழக நிர்வாகிகள் தெரிவு

மட்டக்களப்புச் சிறுவர் கலைக்கழக செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவி செல்வி வனஜா பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடமாடும் நூல் நிலைய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

திரு. மாஸ்டர் சிவலிங்கம் (கழகப் போஷகர்), செல்வி. நளினி இராமச்சந்திரன், செல்வி. இரவீந்திரா இராசதுரை, செல்வி. வனஜா பரம், செல்வன். சிவகுமார் கந்தையா, செல்வி. சரோஜா [illegible] ஆசதுரை.

எனது கிராமம்

## தெல்லிப்பளை

—தி. வருணகுலசிங்கம்—

எனது கிராமம் தெல்லிப்பளை. "பேரூர் தெல்லிப்பளை, பெரிய ஊர் மாவிட்டபுரம்......" என்று ஒரு புலவர் பாடியுள்ளார். அவர் பாடியதற்குக் காரணம் என்ன? பலருக்குக் காரணம் தெரியாமலிருக்கலாம். தொடர்ந்து படியுங்கள்; புரிந்து கொள்வீர்கள்.

"பல மண் குடிசைகள் இருக்கும். ஆங்காங்குச் சிற்சில கல் வீடுகள் காணப்படும். குடிசைகளுக்கு மத்தியில் ஒரு சிறு பள்ளி இருக்கும். வேளாளர்கள் வயல்களுக்கு அருகாமையில் வாழ்வார்கள்". இஃதுதான் 'கிராமம்' என்ற சொல்லின் வெளிப்படையான பொருள். ஆனல் எனது கிராமம் இதற்கு முற்றிலும் மாறனது.

எனது கிராமத்தில் அழகான கல் வீடுகள் காட்சி அளிக்கின்றன. இடையிடையே சில மண் வீடுகள் இருக்கின்றன. வீடுகளின் தரத்தை வைத்துக் கொண்டு மக்களின் பொருளாதார நிலையை அறியலாம். இனிமையான வாழ்க்கையை நடத்துவதற்கும் கொடை, கோயில் முதலியவற்றிக்குச் செலவு செய்வதற்கும் பெரும்பாலான மக்களிடம் போதிய பணம் இருக்கிறது. 'பசி' என்றல் என்ன என்று பலருக்குத் தெரியாது.

வணிகர்கள் "கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைபடாது......" என்று உருத்திரங் கண்ணனரின் வாக்குக்கிணங்க வணிகம்செய்கிறர்கள். வேறு கிராமங்களில் வாழ்பவர்கள் இங்கு வந்து பொருள்களை வாங்குகிறர்கள். வணிகர்களும், விவசாயிகளும் உத்தமர்கள் போற்றும் வாழ்க்கையை நடத்துகிறர்கள். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு..." என்ற பாரதியாரின் கூற்றுக்கு இணங்க நாம் வாழ முடிகின்றது.

"விருந்திற்குப் போகில் தெல்லிப்பளைக்குப் போ" என்று சொல்வார்கள். பெண்கள் விருந்தினரை உபசரிப்பதில் மிகவும் திறமையுள்ளவர்கள். பெண்கள் பலர் பட்டம் பெற்று நாட்டிற்குச் சேவை செய்கிறர்கள். பலர் ஆசிரியைகளாகக் கடமையாற்றுகிறர்கள்.

"எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும்
உயிர்க்கு

என்று கூறினர் திருவள்ளுவர். செயலில் காட்டுகிறர்கள் தெல்லிப்பளை மக்கள். வேறு எந்தக் கிராம வரலாற்றிலும் காண முடியாதபடி அரசியலும் சட்ட ஞானமும் பெற்றவர்கள் இங்கு பலர் இருக்கிறர்கள். உங்களுக்கு அவர்களைத் தெரியும். இருந்தாலும் கூறுகிறேன், அவர்களின் பெயர்கள்: ஈழத்து காந்தி செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம், சொல்வீரர் காராளசிங்கம், தொழிலாளர் தலைவர் நாகலிங்கம்.

நாடகத்துறையில் புகழ் பெற்றவர் "இலண்டன் கந்தையா" ஜோதிடக் கலையில் சிறந்தவர் காலம் சென்ற மாணிக்கவாசகர்.

புலவர் பாடியதின் பொருளைப் புரிந்து கொண்டீர்களா? நம்புகிறீர்களா? நம்பாவிட்டால் எனது கிராமத்திற்கு வாருங்கள். உண்மையை அறியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## விவேகானந்தர் நூற்றுண்டு விழா

இந்து மதத்துக்கு உலகப் புகழ் தேடித் தந்த சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டு விழா, கல்லடி உப்போடை, பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. மாணவர் மன்றத்தினரின் ஆதரவில் நடைபெற்ற இவ் விழாவுக்குத் திருமதி பா. நடராஜன் ஆசிரியை அவர்கள் தலைமை தாங்கினுர்கள்.

அருள் நெறித் திருக் கூட்டச் செயலாளர் திரு. வி. வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் பேசும் போது மகான்கள் உத்தம குணம் படைத்தோரின் வயிற்றில் தான் பிறப்பார்கள். இதனை நிருபிக்கவே விவேகானந்தர் தூய அன்னை புவனேஸ்வரி மாதாவின் வயிற்றில் திரு அவதாரமெடுத்தார். கல்லூரிப் படிப்பு முடியுமுன்பே இவருக்கு ஆன்ம விசார தாகம் உண்டாயிற்று. கடவுளைப் பற்றிய தீராத சந்தேகம் வலுப்பெற வே முடிவை நாடி அலைந்து திரிந்தார். தக்க காலத்தில் இராம கிருஷ்ணரின் தரிசனம் கிடைத்தது. அவரால் ஆட்கொள்ளப்பட்டு ஆன்ம விடுதலை பெற்றுர். இவர் விரும்பிய கடவுள் தரிசனமும் கிடைத்தது. தமது குருநாதர் மறைவின் பின் இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று தேச சஞ்சாரம் செய்தார். இவர் புகழ் எங்கும் பரவத் தொடங்கியது. அமெரிக்காவில்நடந்த சர்வமத மகாநாட்டில் இவர் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அங்கு அவர் நிகழ்த்திய பேருரை இந்தியாவுக்கும், இந்து மதத்துக்கும் பெரும் புகழ் ஈட்டித்தந்தது. விவேகானந்தர் பேருக்கோ, புகழுக்கோ வாழாது, உலக மக்கள் உய்யப் பாடுபட்ட உத்தமர். இவர் போதனைகளைச் சாதனையில் நாம் செய்து காட்டுவதே அவருக்குச் செய்யும் அருந் தொண்டாகும்" என்று குறிப்பிட்டார்.

செல்விகள் ந. இலட்சுமி, மூ. பூமணிதேவி, சி. பாக்கியலட்சுமி ஆகியோரும் பேசினர்.

செல்வி. இ. சூரியகுமாரி, த. நாகேஸ்வரி, த. புஷ்பராணியுட்பட மற்றும் பலரின் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கிளைச் சங்கங்களின் பரிசோதகராக திரு. ஆர். சுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார்.

---

## கோப்பாய் சூரியோதய சனசமூக நிலையத்தின் 19-வது ஆண்டு விழா

'கோப்பாய் அரசினர் ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரியையும், போப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியின் விஞ்ஞான கூடத்தையும் மூடிவிட அரசாங்கம் திட்டமிட்டிருந்த நடவடிக்கை, நானும் மக்களும் காட்டிய எதிர்ப்பின் பயனாகக் கைவிடப்பட்டது.'

இவ்வாறு, கோப்பாய் சூரியோதய சனசமூக நிலையத்தின் 19-வது ஆண்டு விழாவில் தலைமை தாங்கிப் பேசிய, கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. பாலசுந்தரம் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய திரு. எஸ். ஜே. குணசேகரம், ஆதித் தமிழரிடையே சாதிப் பிரிவினை இல்லை என்றும், தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள அவர்களை நாம் புறக்கணித்தல் கூடாதெனவும் கூறினுர். இவர் சில நூல்களும் அன்பளித்தல் செய்தார்.

கோப்பாய் கிராமச் சபைத் தலைவர் திரு. பொ. திருஞானசம்பந்தன், கோப்பாய் கிராமச் சபை மாஜித் தலைவர் திரு. நா. அருளம்பலம், திரு. கே. கந்தையா ஆசிரியர், திரு. க. இராசசிங்கம் ஆகியோர் பேசிய பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

(1) சீன—இந்திய எல்லைப் பிரச்சினையைச் சமாதானமான வகையில் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பாராட்டும் முகமாக இப் பொதுக் கூட்டம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. பிரேரித்தவர்: திரு. மு. க. இளையப்பு, அனுவதித்தவர் திரு. க. நா. கந்தசாமி.

(2) "கோப்பாய் சூரியோதய சனசமூக ஊழியருமான கவிஞர் திரு. மு க. சூரியன், ஆசிரியர் அவர்களை கோப்பாய்த் தொகுதிச் சிறுபான்மைத் தமிழர் மத்தியில் ஒரு சமாதான நீதிபதியாக நியமனம் செய்து தரும்படியாக கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், இப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குபவருமான திரு. பாலசுந்தரம் அவர்களை இப் பொதுக் கூட்டம் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றது.' பிரேரித்தவர். திரு. க. நா. கந்தசாமி, அனுவதித்தவர்: திரு. மு. கு. செல்லையா.

(3) 'யாழ்-பருத்தித்துறை ரஸ்தாவையும் கோப்பாய் பழைய வீதியையும்இணைப்பதும் கோப்பாய் சூரியோதய சன சமூக நிலையத்தினருகில் அமைந்துள்ளதுமான வீதியை கோப்பாய்க் கோமான் அமரர் வன்னிய சிங்கத்தின் ஞாபகார்த்தமாய் "வன்னியசிங்கம் வீதி" எனப் பெயரிடுமாறு கோப்பாய்க் கிராமச் சபையை இப்பொதுக் கூட்டம் மிகப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றது.' பிரேரித்தவர்: திரு. மு. கு. செல்லையா, அனுவதித்தவர்: திரு. மு. க. சின்னப்பு.

அதன் பின்னர் நடைபெற்ற புதுவருட நிர்வாகிகள் தெரிவில் திரு. மு. கு. செல்லையா தலைவராகவும், திரு. மு. நா. பூலோகம் உபதலைவராகவும், திரு. க. இ. தருமலிங்கம் காரியதரிசியாகவும், திரு. மு. இளையப்பு உபகாரியதரிசியாகவும், திருவாளர்கள் க. வே. நாகேந்திரம், க. வே. கந்தையா, வே. க. செல்வவிஞயகம், க. வ. தியாகராசா ஆகிய நால்வர் செயற்குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பெற்றனர்.

---

## ரமண ரிஷி குரு பூசை

"மாணவர்கள் பஞ்சமா பாதகங்களில் நின்றும் விலகி ஒழுங்குக்கட்டுப்பாட்டுடன் வாழப்பழகினுல் அவர்களின் வருங்கால வாழ்வு செழுமையாக அமையும்". இவ்வாறு திருமதி (டாக்டர்) சரோஜினி ராமானுஜம் அவர்கள் 31-1-63 வியாழன் மாலை கண்டி சைவமகாசபை மண்டபத்தில் நடைபெற்ற ரமணரிஷியின் குருபூசையின் போது உரை நிகழ்த்தினர்.

திரு. சிவநாதபிள்ளையும் ஏராளமான மாணவர்களும், மாணவிகளும் கூட்டுப் பிரார்த்தனையும் பஜனையும் நடத்தினர்கள்.

மாணவர்கட்கு [illegible] படங்களும், பிர[illegible] வழங்கப்பட்டன.

---

## அரசாங்க நடவடிக்கைக்கு சைவ மகாசபை எதிர்ப்பு

### கட்டிடம் எடுப்பதற்கு கண்டனம்

தங்கள் சபை மண்டபத்தை அரசாங்கம் எடுத்தல் பற்றி மத்திய மாகாணச் சைவ மகாசபையானது எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இச்சபையானது 1925-ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் அவர்களும் மற்றும் சைவப் பெரியார்களும் சேர்ந்து தொடக்கப்பெற்று, மத்திய மாகாணத்தில் சைவமும், தமிழ்க் கலாச்சாரமும் செழித்தோங்க அளப்பரும் சேவை செய்து வந்திருக்கிறது.

சைவப் பொதுமக்களுக்கு விடுக்கும் அறிக்கையொன்றில், மகாசபை பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

'1955-ம் ஆண்டு தொடக்கப் பெற்ற இந்துக் கல்விச் சங்கம் ஓர் பள்ளிக்கூடம் உடனடியாகத் தொடங்குவதற்கு கட்டிட வசதி இல்லாமையால் எங்கள் சபைக்கட்டிடத்தில் ஓர் பகுதியை மூன்று வருடத்திற்கு வாடகைக்குத் தரும்படி கேட்டனர். மண்டபத்தை தற்காலிகமாகக் கொடுப்பதற்கு பலத்த எதிர்ப்பு இருந்தும் சில நிபந்தனைகள், கட்டுப்பாடுகளின் பேரில், உரிமை வாடகையுடன், இ. க. சங்கத்தினர் தங்களுக்கெ ன மூன்று வருடத்திற்குக் கட்டிடம் கட்டும் வரையும், மண்டபத்தில் ஓர் பகுதியை கொடுப்பதற்குசபை இசைந்தது. துரதிஷ்டவசமாக, பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுக்கும் மசோதா கொண்டு வரபட்டதன் பயனக இ. க. சங்கத்தினர் தமது கட்டிடத் திட்டத்தைத் தொடரவில்லை.

இந்தச் செய்திகள் கிடைத்த உடனேயே சபை அரசாங்கத்திற்கு உண்மை நிலையைத் தெரியப்படுத்தும் போது, சபை மண்டபம் இ. க. சங்கத்திற்கு தற்காலிகப் பாவிப்பிற்கென வாடகைக்குக் கொடுக்கப்பட்டது என்றும் சபை மண்டபத்தை அரசாங்கம் வன்முறையில் எடுக்குமாயின், சபை இ. க. சங்கத்திற்கு ஆபத்தில் கருணையும், சேவையுணர்ச்சியும், நல்லெண்ணமும் காட்டியதிற்குப் பழிவாங்கும் செய்கையாகு மென்றும், சபையின் உடைமையாகிய ஒரே ஒரு மண்டபத்தைப் பறித்தல், சபை இதுவரையும் சுதந்திரமாகச் செய்து வந்த சமயத் தொண்டுகளை ஒடுக்கும் பணியாக இருக்கும் என்றும் ஆகையால் பள்ளிக்கூடத்திற்கு, புனரமைப்புத் திட்டத்தில் பிற ஒழுங்குகள் செய்து சபைக் கட்டிடத்தை சபையின் பணிகளுக்கு விட்டுவிடும் படி கேட்கப்பட்டது. மேலும் சபை ஒவ்வொரு தருணத்தையும் செல்வாக்கையும் வெவ்வேறு வழிகளில் கையாண்டு சபை மண்டபத்தை அரசாங்கம் எடுக்காமல் தடுக்க பகீரதப் பிரயத்தனங்கள் எடுத்தது.

சபையின் விளக்கங்களையும், நியாய எடுத்துக்காட்டுகளையும், நேர்முக விவாதங்களையும், வேண்டுகோள்களையும் எள்ளளவேனும் கவனியாது சபைக் கட்டிடங்கள், நிலம் ஆகிய அத்தனையும் 10-11-62 திகதியிடப்பட்டதும், 13389 இலக்கம் [illegible] திடுக்காடும் துக்ககரமுமான செய்தியை ஆற்றொணாத் துயரத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

சபையின் நோக்கம், ஆக்கப்பணிகள், ஆயிரக்கணக்கான சைவ அன்பர்கள் இருதய சுத்தியுடனும், தன்னலமற்ற தியாக சிந்தையுடனும், பணியாற்றி கட்டிக் காத்து வளர்த்த அத்தனைக்கும் அரசாங்கத்தின் செய்தி சாவுமணியடிப்பது போல் இருக்கிறது. பண நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் இது போல் ஒரு மண்டபத்தைக் கட்டுவதற்கு வேண்டிய வசதியான இடமும் பணமும் சேவையாளரும் கிடைப்பது எவ்வளவு கடினம் என்பது பொது நலத் தொண்டு இயக்கங்களில் ஈடுபாடுடைய உங்கள் எல்லாருக்கும் நன்கு விளங்கும். ஆகவே சபை மண்டபத்தை அரசாங்கம் எடுக்காது காப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

இறைவன் திருவருள் துணை கொண்டு, வந்த இன்னலை நீக்க முன் வருமாறு உங்கள் அனைவரையும் சபை தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறது.

---

## இலங்கை அருந்ததியர் வாலிப முன்னேற்றச் சங்கம்

### நிர்வாகிகள் தெரிவு

இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் இவ்வாண்டு உத்தியோகத்தர்களாக கீழ்க்கண்டோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தல் அதிகாரியாக "சமுதாயம்" ஆசிரியர் திரு. ஏ. ஈ. மூர்த்தி அவர்கள் வந்து சிறப்பாக தேர்தலை நடத்தினர். சகல கிளைச் சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்தமை குறிப்பிடத்தக்கது.

இ. அ. வா. மு. சங்கத்தின் தலைமை நிலைய இவ்வாண்டு உத்தியோகத்தர்கள் பின் வருமாறு: தலைவர்: திரு. எஸ். கிருஷ்ணசாமி, உப தலைவர்: திரு. எம். சாமுவேல், பொதுச் செயலாளர்; திரு. க. மனேகரன், துணைப் பொதுச் செயலாளர்: திரு. வி. சந்தணராஜா, பொருளாளர்: திரு. எம். எஸ். பெருமாள், துணைப் பொருளாளர்: திரு. ஜி. செல்லையா.

அத்துடன் நிர்வாகஸ்தர்கள் உட்பட திருவாளர்கள்: ப. கடக்கரை, எம். மணிமுத்து, ஈ. மாசானம், எஸ். கே. மாடசாமி, வி. கருசாமி ஆகிய 11 பேர்கள் கொண்ட தலைமை நிலைய செயற்குழுவும் தெரிவு தெரிவு செய்யப்பட்டது.

---

## தலைமை ஆசிரியைக்கு பிரியாவிடை

திங்கட்கிழமை 28-1-63 மாலை 5 மணியளவில், வடமாகாண வித்தியாபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையில், நல்லூர் தெற்கு ஸி. ஸி. பாடசாலையில் அதன் தலைமை ஆசிரியையாக 30 ஆண்டுகள் கடமையாற்றிய திருமதி ஞானம்மா பொன்னுத்துரை அவர்கள் இளைப்பாறியமையை முன்னிட்டுப் பெற்றேர்-ஆசிரியர் சங்கத்தினரால் பிரியாவிடை வழங்கப் பெற்றது.

வித்தியாபதி, திரு. எஸ். நடராசா (யாழ் நகரசபை அங்கத்தவர்), பெற்றேர்—ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. ஸி. மாணிக்கம், அதிவணக்கத்திற்குரிய சாமுவேல் போதகர், குமாரசுவாமிப் போதகர் ஆகியோர் திருமதி ஞானம்மா பொன்னுத்துரையின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை பிரியாவிடை பாடல்கள் பாடினுர்.

திருமதி ஏரம்பு சரஸ்வதி, பெற்றேர்-ஆசிரிய சங்கத்தின் சார்பில் தங்க மோதிரம் அன்பளிப்புச் செய்தார். திரு. சி. வயித்தியலிங்கத்தின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறை வெய்தியது.

---

## மந்திரிகளுக்கு மகஜர்கள்

மட்/காரைதிவு அரசினர் மகா வித்தியாலயத்திற்கு விஞ்ஞான ஆய்வு கூடமும் திறுவி விஞ்ஞான ஆசிரியர்களையும் நியமிக்குமாறும், ஒரு பிரசவ விடுதியும் இங்கு நிறுவுமாறும் சம்பந்தப்பட்ட இரு மந்திரிகளுக்கும் விவேகானந்தா சனசமூக நிலைய நிர்வாகிகளால் கைச் சாத்திடப்பட்ட இரு மகஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதன் நகல்கள் நிந்தவூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் எம். ஐ. எம். அப்துல் மஜீத் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

---

## தைப்பூச உற்சவ விழா

வறக்காப்பொலக்கு, அருகாமையிலிருக்கும் அம்பேபுச என்னும் இடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் தைப் பூச உற்சவ விழா, வியாழக்கிழமை, (7-2-63) பகல் 12 மணி முதல், விசேஷ அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகியது. அன்று மாலை 1 மணிக்கு, ஸ்ரீ முத்து மாரி அம்பாள் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட மோட்டார் இரதத்தில் மின்சார தீப அலங்காரங்களுடன் கோவிலில் இருந்து வறக்காப்பொலை நகருக்கு மேளவாத்திய, காவடி சகிதம் பவனி வந்து, பக்தர்கள் யாவருக்கும் இனிது காட்சியளித்தார்.


ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி—அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு-12.

தந்தி: சுதந்திரன் போன்: 3411


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சென்ட்ரல் ராணி சீகிரி ஆனந்தா ஜோதி பிரீதி
(மருதானை) (யாழ்ப்பாணம்) (பண்டாரவளை) (கம்பளை) (இரத்தினபுரி) (ஹட்டன்)

## வெற்றிகரமான 6-வது வாரம்!

பிரசாத் மூவிஸின்

# தாயில்லாப் பிள்ளை

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்!

பாலையா, மனோகர், கல்யாண்குமார், முத்துகிருஷ்ணன், ராமராவ், எம். வி. ராஜம்மா, விஜயலக்ஷ்மி

ஆகியோர் நடித்தது

கதை வசனம்: மு. கருணாநிதி எம். எல். ஏ.

இசை: கே. வி. மஹாதேவன்

பாடல்கள்: கண்ணதாசன், கொத்தமங்கலம் சுப்பு, மருதகாசி

(ஜெமினி ரிலீஸ்)

---

## விரைவில் எதிர்பாருங்கள்!

பாரத் புரொடக்ஷன்ஸ்

# விக்ரமாதித்தன்

★ எம். ஜி. ஆர். ★ பத்மினி ★ ஸ்ரீரஞ்சனி ★ தங்கவேலு ★ ராகினி ★ வீரப்பா ★ ஈ. வி. சரோஜா மற்றும் பலர்

டைரக்ஷன் : டி. ஆர். ரகுநாத்

---

## 2-வது வெற்றி வாரமாக காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

காமினி—வார நாட்களில் தினசரி
(மருதானை) பி. பகல் 2-00 மணிக்கு காண்பிக்கப்படும்

★ காதலித்த கன்னியையே கல்யாணம் செய்வது என்று கனவு காண்கிறன் ஓர் வாலிபன்............எனவே
★ மகனது புனர் வாழ்வுக்காகப் போராடுகிறள் தாய்............பின்பு
★ காலத்தின் சோதனையால் அவன் பிஞ்சு இதயத்தில் மலர்ந்த மலர்கள் வாடுகின்றன............ஆனல்
★ மனம் உடைந்த காதலனுக்கும், வேறு ஒருவனுடன் மணவறையில் உட்கார்ந்திருக்கும் காதலிக்கும் எவ்வாறு "புனர் ஜென்மம்" ஏற்படுகிறது? பாருங்கள்! பதில் கிடைக்கும்!

சிவாஜி கணேசன்—பத்மினி

மற்றும் பலர் நடித்த

# புனர் ஜென்மம்



---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)

கிங்ஸ் (பதுளை) இம்பீரியல் (மட்டக்களப்பு) அசோகா (புத்தளம்) நடராஜா (நீர்கொழும்பு)




ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி, டி. எஸ். பாலையா, தங்கவேலு, நடித்த

# பனித்திரை

சங்கீதம்: கே. வி. மஹாதேவன்

பாடல்கள்: கண்ணதாசன், கொத்தமங்கலம் சுப்பு

பின்னணி: ஸ்ரீனிவாஸ், ராகவன், சுசிலா, சீர்காழி கோவிந்தராஜன்

---

## 6-வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

திலிப் குமார்—மதுபாலா—பிரிதிவிராஜ் கபூர் தோன்றும்

# அக்பர்

இளவரசன் சலிம், நாட்டியக்காரி அனார்கலி இவர்களின் கதை கூறும் இந்திப் படமாகிய மொகல்-ஏ-அஸாமின் தமிழ்ப் பிரதி

---

## 12-வது வெற்றி வாரம்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி
எம். ஆர். ராதா—எஸ். வி. ரங்கராவ்

நடிக்கும்

# சாரதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் பெப்ரவரி மாதம் 17 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.